October -2018 | Volume-5 | issue-49

for private circulation only

# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

அக்டோபர் - 2018 பருவம் - 5 புனல் - 49 தனிச்சுற்று நன்கொடை ரூ 25

## அய்ந்தாம் ஆண்டில்






























அன்னை மணியம்மையார்

# அன்னை மணியம்மையார்

பிறந்தநாள் - நூற்றாண்டு தொடக்க நாளான

10.03.2019 இல்

## "உடைப்போம் சமையலறைகளை!"

#Kitchen# DEMOLISH VEDIC TRADITION'S 10.03.2019

காட்டாறு

தொடர்புக்கு: 76676 79363, 98940 69973, 99427 38950

காட்டாறு
அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

**தொகுப்புக்குழு**
நாராயணமூர்த்தி
எரிதழல்
அ.ப.சிவா
பெரியார்செல்வி
பூங்கொடி

**ஆண்டுக்கட்டணத் தொடர்பு**
திருப்பூர் கிருஷ்ணவேணி
77084 58086

**நன்கொடைத் தொடர்பு**
குமரேசன்-அசுரன் ஊடகம்
99943 65133

**ஒருங்கிணைப்பாளர்**
வழக்கறிஞர் கிருஷ்ணகுமார்

**வடிவமைப்பு**
முகிழ் மீடியா
97873 20044

**அச்சு**
க்ரியேட்டிவ் க்ராஃபிக்ஸ்

**பொறுப்பாசிரியர்**
சி.இராவணன்
97868 89325

**உரிமை - பதிப்பு - ஆசிரியர்**
பொள்ளாச்சி சி.விஜயராகவன்
99762 56821

# அய்ந்தாம் ஆண்டில் அடுத்த இலக்கு

காட்டாற்றுப் பாய்ச்சல் 4 ஆண்டுகளைக் கடந்து 5 ஆவது ஆண்டில் நுழைகிறது. பெரியாரியலுக்கும், எழுத்துலகிற்கும் புதிதாக வருபவர்களுக்குப் பாதை அமைக்கவே காட்டாறு உருவானது. அதில் நாங்கள் நினைத்த இலக்கை இன்னும் அடையவில்லை. காரணம் காட்டாறு மட்டுமல்ல.

'படிப்பது - எழுதுவது' என்ற இரண்டுமே இன்றைய இளைய சமுதாயத்தில் அரிதான பழக்கமாக மாறிவருகிறது. 'பார்ப்பது - கேட்பது' என்ற கட்டத்திற்கு வெகு விரைவாகச் சென்று கொண்டிருக்கிறது. சிற்றிதழ்களில் எழுத, புதிய எழுத்தாளர்கள் தோன்றுவார்கள் என்றோ, அந்தப் புதிய பாணி எழுத்துக்களைப் படித்துப் பெரியாரியலுக்குப் புதியவர்கள் வருவார்கள் என்றோ கருதமுடியவில்லை.

புதிய இளைஞர்கள் காட்டாறை அச்சு வடிவத்தில் படிப்பதில்லை. அதனால் அச்சு வடிவை நிறுத்திவிடலாம் என்றும் நினைத்தோம். ஆனால், களத்தில் பணியாற்றும் பல தோழர்கள் பழைய இதழ்களைக்கூடத் தேடிப்பிடித்து, வாங்கிப் படிப்பதைப் பார்க்கிறோம்.

ஆண்டுச்சந்தா அளவுக்கு மட்டுமே இதழ்களை அச்சிட்டு வந்த நிலைமாறி, கூட்டங்களில் விற்பனை செய்வதற்காகவும் கூடுதலாக அச்சிடும் நிலை உருவானதால், அச்சு வடிவை நிறுத்த வழியில்லாமல் தொடர்கிறோம்.

இதேநேரத்தில், வாசகர்களின் விருப்பத்திற்கும், வாசகர்கள் பரிந்துரைக்கும் தலைப்புகளுக்கும் உரிய செய்திகளைத் தேடிப் பிடித்து வெளியிட்டு வந்தோம். அவ்வாறு வெளியான பல கட்டுரைகள் எங்களைக் கொஞ்சம், கூடுதல் பொறுப்புள்ள இடத்திற்கு நகர்த்தின. இது நாங்கள் எதிர்பாராத வளர்ச்சிதான்.


புதிய இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரியாரின் திராவிடர் பண்பாட்டை அறிமுகப்படுத்தவும், பெரியாரிய வாழ்வியலியன் சிறப்பை அறியவைக்கவும் தற்காலப் பரப்புரை வடிவங்களைக் கையிலெடுக்க இருக்கிறோம். ஏற்கனவே, இணைய தளம், செயலி ஆகிய வடிவங்களில் காட்டாறு செல்கிறது என்றாலும், காட்சி ஊடகத்தில் கூடுதலாகக் கவனம் செலுத்தத் திட்டமிடுகிறோம்.

அச்சு ஊடகம், இணைய ஊடகம் இவற்றில் தேர்ச்சி பெற்ற தோழர்கள் காட்டாறு குழுவிலேயே இருப்பதால், செலவு அதிகமாகவில்லை. நான்கு ஆண்டுகள் தொடர்ந்து இதழ் நடத்த முடிந்தது. காட்சி ஊடகத்தில் பயிற்சி உள்ளவர்கள் நம்மிடையே இல்லை. அதனால், அதற்குரிய பயிற்சிகளை எடுத்து முயற்சிகளைத் தொடங்கப் போகிறோம்.

திராவிடர் இயக்கங்களுக்கு எதிரான youtube சேனல்கள் நூற்றுக்கணக்காக இயங்குகின்றன. திராவிடர் இயக்கங்கள் குறைந்த பட்சம் ஒரு 10 சேனல்களையாவது நடத்த வேண்டிய மிக முக்கியமான காலகட்டம் இது. அதனால் காட்சி ஊடகம் நோக்கி கவனம் செலுத்துகிறோம். இதுதான் அய்ந்தாம் ஆண்டில் எமது இலக்கு.

நான்கு ஆண்டுகளாக எங்களுக்கு ஆதரவளித்துவந்த தோழர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவரும் தொடர்ந்து எங்களது அடுத்தடுத்த முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்கி, பெரியாரியலை அடுத்த தலைமுறைக்கு அறிமுகப்படுத்தத் துணை நில்லுங்கள் என வேண்டுகோள் விடுக்கிறோம்.

ஆனந்த் டெல்டும்டே
தமிழாக்கம்: பேராசிரியர் கிரண்குமார்



# அம்பேத்கர் புத்த மதத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர், இஸ்லாம்தான் தலித்துகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மதம் என்று ஏன் கருதினார்?



அக்டோபர் 13, 1935-ம் ஆண்டு நாஜிக் மாவட்டத்தின் இயோலாவில் இந்து மதத்தை முழுவதுமாகத் துறப்பது என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்மானத்தை பாபாசாகிப் அம்பேத்கர் பிரகடனப்படுத்தினார். இத்தகைய முடிவு பல்வேறுவிதமான எதிர் விளைவுகளைத் தூண்டியது. இதனால் சமயப் பற்றுடைய, மரபுவழி பிறழாத இந்துக்கள் அசைவற்றுப் போனார்கள். நாஜிக்கு அருகாமையில் உள்ள காலாராம் (Kalaram) கோவில் நுழைவு சத்தியாகிரகப் போராட்டத்தின்போது கடைசி ஐந்து வருடங்களாக (தலித்கள்) அவமானப்படுத்தப் பட்டனர். அப்போது இந்துக்கள் மகிழ்ச்சி யடைந்திருந்தனர்.

அரசியல் ரீதியாகச் சிந்திக்கும் இந்துக்கள் இந்த முடிவைக் கடுமையாக எதிர்த்தபோதிலும், இந்தத் தீர்மானம் அவர்களை அச்சுறுத்துவதாகவே இருந்தது. சிலர் அம்பேத்கருக்குக் கொலை மிரட்டல் விடுத்தனர். அவரைச் சார்ந்திருந்த மக்களே குழம்பியிருந்தனர், சிலர் மிகவும் வெளிப்படையாக இந்த முடிவை எதிர்த்தனர். ஒரு சில சிறுபான்மையான சமூகங்களின் மத நிறுவனங்கள் மிகுந்த ஆர்வத்துடன் அவர்களைத் தங்களின் பக்கம் ஈர்ப்பதற்கு ஆர்வம் காட்டின.

இந்தப் பிரகடனத்தைத் தொடர்ந்து, ஒரு செயல்திட்டத்தை உருவாக்கும் பொருட்டு 1936-ஆம் ஆண்டு மே மாதம் 30-ஆம் தேதியிலிருந்து ஜீன் மாதம் 1-ஆம் தேதி வரை, மும்பை இலாகா மஹார் பரிஷத் (மும்பை மாகாண மஹார் மாநாடு - Mumbai Ilakha Mahar Praishad) என்ற தலைப்பின் கீழ் ஒரு மாநாடு ஒருங்கிணைக்கப்பட்டது. மஹார் துறவறம் மாநாடு மற்றும் மும்பை மாகாணத்திலிருக்கும் மடங்களின் மாநாடு என்னும் பெயர் கொண்ட மற்ற இரண்டு மாநாடுகளுடன் பகிர்ந்து நடத்தப்பட்டது.

அந்த மாநாட்டில் உணர்வு மிகுந்த ஒரு விரிவான உரையாற்றினார் அம்பேத்கர், அது “முக்தி கோன் பாத்தே?” (முக்தி பெறுவதற்கான பாதை எது?) என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்டது.

அதில், தலித்துகள் தங்கள் மதத்தை மாற்றிக் கொள்வதற்கான அவசியத்தை முழுமுனைப்புடன் விளக்க முயன்றார். “ஜாதி ஒழிப்பு“ (Annihilation of Caste) என்னும் அவரது புகழ்பெற்ற புத்தகத்தில் அப்போது தான் இந்த விளக்கத்தை எழுதியிருந்தார். “ஜாதி ஒழிப்பு” புத்தகத்தில் அம்பேத்கரின் முடிவுரையானது,தர்மசாஸ்திரங்களை (ஸ்மிருதிகள் மற்றும் புராணங்கள்) மூலாதாரமாகக் கொண்டிருக்கும் இந்தச் சாதிகள் இந்து மதத்தின் மிக முக்கியமான விதியாகும், இந்த தர்மசாஸ்திரங்களை அழித்தொழிக்கும் வரை சாதிகளை ஒழிக்க முடியாது என்றார்.

விதிகளையுடைய மதம் மற்றும் கொள்கை களையுடைய மதம் என்று அவர் இந்து மத நூல்களை இரண்டு வகைப்படுத்தினார். அதில் இரண்டாவதாக உள்ளது (கொள்கை மதம்) வேதங்களிலும் உபநிடதங்களிலும் கூறப்பட்டதாகும். அம்பேத்கரின் கருத்துரைப்படி இது இந்து மத நடைமுறையில் அவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதேயாகும். அவரின் மதிப்பீட்டின்படி இந்துக்கள் தர்மசாஸ்திரங்களை முழுவதுமாக அழிப்பதற்கு எப்பொழுதும் தயாராகப்போவதில்லை என்றும், அதனால் அம்பேத்கர் தானே இந்து மதத்தைவிட்டு வெளியேறுவதற்கு முடிவுசெய்தார். இவ்வாறாக, தீண்டத்தகாதவர்கள் இந்து மதத்தினுள் மரியாதையாக நடத்தப்படுவார்கள் என்ற நம்பிக்கைக்கு இடமேயில்லை என்று அம்பேத்கர் வாதிட்டார். அவர்கள் தங்களின் சாதிய அடிமைத்தனத்திலிருந்து வெளியேறுவதற்கு ஒரே வழி இந்து மதத்தைவிட்டு வெளியேறுவது தான்.

"முக்தி கோன் பாத்தே?" உரையில் மதம் மாறுவதற்கான இரண்டு முக்கியத்துவங்களை அம்பேத்கர் அடிக்கோடிட்டார் - புறநிலை (இருத்தலியல்) மற்றும் அகநிலை (ஆன்ம இயல்). புறநிலை முக்கியத்துவத்தை விளக்கும் பொருட்டு தலித்துகளின் படுமோசமான துன்பங்களை அம்பேத்கர் மிக முக்கியமானதாக சுட்டிக் காட்டினார். தலித்துகள், சாதி இந்துக்களால் உள்வாங்கப்பட்ட சாதிய விதிகளைச் சிறிது மீறும்போது மிகக் கடுமையான வன்கொடுமைகளால் துன்புறுகின்றனர் .அவருடைய இந்தக் கருத்தை அவர் பின்வருமாறு விவரிக்கிறார்:

"இது இரண்டு தனிமனிதர்களுக்கிடையேயான அல்லது இரண்டு குழுக்களுக்கு இடையேயான மோதல் அல்ல; இது இரண்டு வர்க்கங்களுக்கிடையேயான மோதல். இது ஒரு மனிதனின் மீதான ஆதிக்கத்தைப் பற்றிய கேள்வியோ அல்லது அநீதிகளைப்பற்றியோ அல்ல; ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தின் மீது தொடர்ந்து செலுத்தும் ஆதிக்கத்தைப் பற்றிய கேள்வியிது. இது ஒரு வர்க்கத்தால் மற்றொன்றின் மீது குவிக்கப்பட்ட அநீதிகளைப்பற்றிய கேள்வி.

"மேலே குறிப்பிடப்பட்ட மோதலின் உதாரணங்கள் ஒரு கருத்தை மட்டும் நிரூபணமாக்குகிறது, அது எப்பொழுதெல்லாம் நீங்கள் மேல்தட்டு வகுப்பினரை அணுகி சமத்துவத்தை வலியுறுத்துகிறீர்களோ அப்போதுதான் இந்த மோதல் தொடங்குகிறது. அவர்களுக்கு கோபத்தை விளைவிப்பது ஒரே ஒரு காரணம்தான் அதுவும் சமத்துவத்தை கோரும் உங்கள் குணமே, அதுவே அவர்களின் மதிப்பை காயப்படுத்துகிறது."

அதன் பின்னர் அம்பேத்கர் தன் கருத்தின் இறுதியில், "தீண்டத்தகுந்தவர்களுக்கும் தீண்டத்தகாதவர்களுக்கும் இடையேயான மோதல் என்பது இயற்கையிலேயே நிரந்தரமானவை மற்றும் அது கடைசிவரையில் நீடித்துக் கொண்டிருக்கும். காரணம், அவர்களைப் பொறுத்தவரை உன்னைத் தாழ்ந்த நிலையில் நியமித்ததில் மதத்திற்கு பொறுப்பு உண்டு, அது தான் சனாதனம். (அதற்கு முதலும் இல்லை முடிவும் இல்லை). அதனினுள் எந்தவித மாற்றமும் இல்லை."

புறநிலைப் பார்வையின் பிரச்சினையைப் பார்த்தோமேயானால், தலித்துகளிடம் வலிமையில்லாமல் போனதே இந்தத் தொடர் மோதல்களுக்கான அடிப்படைக் காரணம் என்று அவர் உணர்ந்திருந்தார். மனிதர்களிடம் இருக்க வேண்டும் என்று எதிர்பார்கப்படுகின்ற மூன்று ஆற்றல்கள் அதாவது எண்ணிக்கையில் வலிமை, பொருளாதார பலம் மற்றும் மன ஆற்றல் ஆகிய மூன்றையும் தலித்துகள் கொண்டிருக்கவில்லை.

அவர்கள் சிறுபான்மையினராக இருந்ததினால் அவர்கள் வலிமையான எண்ணிக்கையைக் கொண்டிருக்கவில்லை, எண்ணிலடங்கா சாதிகளாகப் பிளவுபடுத்தப்பட்டு கிராமங்கள் முழுவதிலும் பரவியிருந்தனர். அவர்களிடம் பொருளாதார வலிமையும் இல்லை, காரணம் அவர்களிடம் நிலமோ அல்லது தொழிலோ அல்லது தரமான வேலையையோ கொண்டிருக்கவில்லை. சாதி இந்துக்களால் அவர்கள் பல நூற்றாண்டுகளாக அவமானத்திற்கும் அவமதிப்பிற்கும் உள்ளாக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வந்த காரணத்தினால் அவர்களிடம் மனவலிமையும் இல்லாமல் போனது. அவர்கள் தங்களின் வலிமையைச் சார்ந்தே இருந்திருந்தாலும், அவர்கள் அனுபவிக்கும் இந்த மோசமான நிலைமையில் இருந்து தப்பிச்செல்வதை அவர்களால் எதிர்பார்த்திருக்க முடியாது.

தலித்துகளைப் போலவே சிறுபான்மையினராக இருக்கும் இஸ்லாமியர்களோடு அவர்களை (தலித்) அம்பேத்கர் ஒப்பிடுகிறார். மேலும் அவர் கூறும் போது, தலித்துகளைக் கையாள்வதைப் போன்று இந்துக்களால் இஸ்லாமியர்களை நடத்துவதற்குத் தைரியம் இல்லை என்கிறார். காரணம், அவர்களுக்கு நன்றாகவே தெரியும், ஒரு இஸ்லாமியரின் பின்னால் இந்தியாவின் ஒட்டுமொத்த இஸ்லாமிய சமுதாயமே இருக்கிறதென்று. எங்காவது ஒரு இஸ்லாமியர் ஒரு இந்துவால் பாதிப்புக்குள்ளானால் அந்த இஸ்லாமியருக்கு ஆதரவாக காஷ்மிரிலிருந்து கன்னியாகுமரி வரையுள்ள இஸ்லாமிய சமுதாயம் நிற்கும்.

ஆனால், இந்துக்கள் எப்பொழுதும் தலித்துகள் மீதான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கும் தொடர் வன்கொடுமைகளை நடத்துவதற்கும் ஒருபோதும் தயங்கியதில்லை. காரணம், அவர்களுக்கு நன்றாகத் தெரியும் தலித்துகளுக்கு யாரும் ஆதரவு தரமாட்டார்கள் என்று. மேலும், தலித்துகளையும் அவர்களை ஒடுக்குபவர்களையும் இங்கே இந்துக்களாகத்தான் பார்க்கின்றனர். இதில் மற்றவர்கள் தலையிடுவார்கள் என்பதில் நம்பிக்கையில்லை. ஆதலால் வெளியிலிருந்து தங்களுக்கு ஆதரவாக வலிமை சேர்ப்பவர்கள் பற்றி தலித்துகள் சிந்திக்க வேண்டும். அந்த வலிமையானது மற்ற மத சமுதாயத்தோடு இணையும்போதும் அந்த மதத்திற்கு மாறும்போதும் மட்டுமே இது சாத்தியம் என்கிறார்.

தலித்துகளின் இருத்தலியல் (புறநிலை) தேவைக்கு மதம் மாற்றம் அவசியம் என்று அம்பேத்கர் தன்னுடைய மதமாற்ற அறிவிப்பை நியாயப் படுத்துகிறார். அதைத் தொடர்ந்து, அவர்கள் மாறப் போகும் மதமானது அந்த நாட்டில் ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையை கொண்டிருக்க வேண்டும். அதற்காக அவர் முன்மொழிந்த மூன்று மதங்கள் இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் சீக்கிய சமயம். 1928-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே அம்பேத்கர் இஸ்லாமைப் பற்றி பேசி வருகிறார். இந்த உரைக் கலந்தாய்விலும் இஸ்லாம் மதமே அம்பேத்கரின் தேர்வாக இருந்தது.

மதம் மாறுதலில் அகநிலையின் முக்கியத்துவமானது, ஒரு தனிமனிதனின் மீதான மதிப்பை அதிகரிக்கச் செய்கிறது. ஆனால், இந்து மதத்தில் தனிமனிதத்துவத்திற்கு இடமேயில்லை, அது யாருக்கும் அகநிலை ஆற்றலை வழங்கமுடியாது.

அம்பேத்கர் கூற்றின்படி, ஒரு மதத்தின் உண்மையான நோக்கமானது தனிமனிதனின் அகநிலை வளர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டும். "ஒரு தனிமனிதனின் பிறப்பானது அந்தச் சமுகத்தின் சேவைக்கானது அல்ல, மாறாக அது அவர்களின் சொந்த விடுதலைக்கானதாக இருக்க வேண்டும்." தனிமனிதனை முதன்மைப்படுத்தாத மதத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்று அம்பேத்கர் கூறுகிறார். தனிமனித வளர்ச்சிக்கு அவசியமானதாக இந்த மூன்று விஷயங்களையும் பார்த்தார். சகோதரத்துவம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் இதில் எதையுமே இந்து மதம் கொண்டிருக்கவில்லை என்பதையும் அவர் உணர்ந்திருந்தார்.

அம்பேத்கர் தனது தனிப்பட்ட முறையில், ஒரு மதத்தின் புறநிலை (இருத்தலியல்) பண்புகளை விட அகநிலை (ஆன்ம இயல்) பண்புகளையே அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக மதிப்பிட்டார். எனினும், அவர் தலித்துகளின் நலனுக்காக ஒரு மதத்தின் புறநிலை பயன்பாட்டை வலியுறுத்தியிருக்கலாம். இந்து ஒடுக்குமுறைகளை எதிர்க்க இன்றியமையாத வலிமையை அவர்களுக்கு இந்த தற்கால மதச் சமுதாயங்கள் தருமானால் அந்த மதத்திற்கு மாறுவது தான் அவரின் நோக்கம் என்பது விளங்குகிறது.

**"ஜாதி ஒழிப்பு" புத்தகத்தில் அம்பேத்கரின் முடிவுரையானது, தர்மசாஸ்திரங்களை (ஸ்மிருதிகள் மற்றும் புராணங்கள்) மூலாதாரமாகக் கொண்டிருக்கும் இந்தச் சாதிகள் இந்து மதத்தின் மிக முக்கியமான விதியாகும், இந்த தர்மசாஸ்திரங்களை அழித்தொழிக்கும் வரை சாதிகளை ஒழிக்க முடியாது என்றார்.**

1935-ஆம்ஆண்டு இயோலாவில் பிரகடனப்படுத்தியிருந்தாலும், 1928-ஆம் ஆண்டு முதலே தன்னுடைய பத்திரிக்கையான 'பகிஷ்கிரிட் பாரத்' தில் (Bahishkrit Bharat) சாதிய அடிமைத்தனத்திலிருந்து வெளியேறுவதன் பொருட்டு மதமாற்றம் அவசியம் என்று பல்வேறு விதத்தில் தலித்துகளிடம் பேசினார். வேறு மதத்திற்கு மாறாதவரை தீண்டத்தகாதவர்கள் சாதிய அடிமைத்தனத்திலிருந்து வெளியேற முடியாது என்னும் கருத்து முடிவுக்கு அம்பேத்கர் வந்துவிட்டார் என்பதை அவரின் பத்திரிக்கையான 'பகிஷ்கிரிட் பாரத்'-தில் தெளிவான ஆதாரங்களுடன் பார்க்க முடியும்.

மதமாற்றக் கருத்துகளைத் தாண்டி, தலித்துகள் மதமாறுவதற்கான ஏற்ற மதத்தினைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார். ஒரு அளவைக் கடந்து அம்பேத்கர், பௌத்தத்தையும் ஆரியசமாஜையும் மறுத்துவிடுவதென்று முடிவெடுத்த அவர், குறிப்பிட்டு முன்மொழிந்த மதம் கிறிஸ்தவம்அல்லது இஸ்லாம்.

"பௌத்தத்திற்கோ அல்லது ஆரிய சமாஜிற்கோ மாறுவதன் மூலம், தங்களைத் தாங்களே மேல் வருணத்தைச் (Upper Varna) சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் மக்களின் இந்தப் பாரபட்சமான எண்ணங்களின் மீது இந்த மதமாற்றம் எந்தவித குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தப் போவதில்லை, ஆதலால் இந்தப்பாதையை ஏற்றுக் கொள்வதில் அவ்வளவு செயலறிவு இருப்பதாகத் தெரியவில்லை. வெற்றிகரமாக நேருக்கு நேர் இந்து மதப் பாரபட்சங்களை நாம் எதிர்க்க வேண்டுமெனில், சில புரட்சிகரமான சமுதாயங்களின் ஆதரவைப் பெறும் பொருட்டு ஒன்று நாம் கிறிஸ்தவத்திற்கோ அல்லது இஸ்லாமிற்கோ மதம் மாற வேண்டும். அதன்பின்னர் தான் தலித்துகளின் மீதான தீண்டத்தகாத இழிநிலை முழுவதுமாக துடைத்தெறியப்படும்." என்றார்.

இரண்டு வருடத்திற்கு உள்ளாகவே அவர், கிறிஸ்தவத்தை நீக்கிவிட்டு முழுமையாக இஸ்லாமிய மதத்தில் இறங்கினார். 1929-மார்ச் மாதம் 15-ஆம் தேதியன்று வெளிவந்த 'பகிஷ்கிரிட் பாரத்' தின் தலையங்கத்தில்,

"இந்து மதத்திற்கு ஒரு அறிவிப்பு" என்ற துணிச்சலான தலைப்பின் கீழ் தீண்டத்தகாதவர்களுக்கு, "நீ மதம் மாறப் போகிறாய் என்றால், முகமதியனாக மாறிவிடு" என்று அம்பேத்கர் அறிவுறுத்தினார். பௌத்தத்திற்கோ அல்லது ஆரிய சமாஜிற்கோ மாறுவது பயனற்றது என்பதைப் பகுத்தாய்ந்த அவர் கிறிஸ்தவத்தையும் நீக்கிவிட்டார், காரணம் "இந்தியாவில் கிறிஸ்தவமும் கூட சாதிகளில் இருந்து தப்பிக்க முடியவில்லை" என்றார்.

கிறிஸ்தவத்திற்கு தலித்துகள் மதம் மாறுவதன் மூலம் அவர்களின் சமூகப் படிநிலைகளில் எந்த விதமான மாற்றங்களும் ஏற்படப்போவதில்லை என்பதை அவர் கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டும். அவர்கள் மீண்டும் இந்துக்களுக்கு அதே தீண்டத்தகாதவர்களாகத் தான் இருப்பார்கள், இந்துக்களுக்கு மட்டுமல்ல கிறிஸ்தவத்திலும் உள்ள உயர்ந்த சாதிகளுக்கும் அவர்கள் தீண்டத்தகாதவர்கள்தான். இஸ்லாம் சமுதாய மக்கள் மட்டுமே தலித்துகளின் பின்னால் முழு ஆதரவுடன் நிற்பார்கள் என்பதையும் விளக்கிக் கூறினார். இந்து மதத்திலிருந்து மட்டும் வெளியேறப் போவதாகச் சொல்லிக் கொண்டிருந்த அம்பேத்கர் வேறு எந்த மதத்தையும் தழுவுவதைப் பற்றி குறிப்பிடவில்லை. ஆனால், 1936 ஆம் ஆண்டு வரை அவர் இஸ்லாத்தை தான் அறிவுப்பூர்வமாக தேர்வு செய்தார் என்பது இங்கே ஆதாரப்பூர்வமானது.

இது கண்டிப்பாக இந்துக்களை ஒரு குறிப்பிட்ட அழுத்தத்திற்கு உள்ளாக்கி அவர்களைச் சீர்திருத்தத்திற்கு இட்டுச்செல்லும் சூழ்ச்சியேயாகும். இதைத்தான் அவர் மஹார் மாநாட்டில் எதிர்பார்த்திருந்தார். ஆனால், தலித்துகளுடைய உரிமையை சட்டப்படி நடைமுறைப்படுத்தும் செயலுக்கு அவர்கள் நடந்து கொண்ட விதமானது அம்பேத்கரை முழுவதுமாக ஏமாற்றமடையச் செய்தது.

**“இந்து மதத்திற்கு ஒரு அறிவிப்பு” என்ற துணிச்சலான தலைப்பின் கீழ் தீண்டத்தகாதவர்களுக்கு, “நீ மதம் மாறப் போகிறாய் என்றால், முகமதியனாக மாறிவிடு” என்று அம்பேத்கர் அறிவுறுத்தினார். பௌத்தத்திற்கோ அல்லது ஆரிய சாமஜிற்கோ மாறுவது பயனற்றது என்பதைப் பகுத்தாய்ந்த அவர் கிறிஸ்தவத்தையும் நீக்கிவிட்டார், காரணம் “இந்தியாவில் கிறிஸ்தவமும் கூட சாதிகளில் இருந்து தப்பிக்க முடியவில்லை” என்றார்.**

டிசம்பர் மாதத்தில் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட சத்தியா கிரகத்திலும் இதை அவர்கள் (இந்துக்கள்) தந்திரமாகக் கைகழுவினார்கள். மஹார் மாநாட்டை முடித்த உடனேயே அவர் மத மாற்றத்தைப் பற்றிப் பேசத்தொடங்கினார். மார்லே - மிண்டோ சீர்திருத்தத்தின் போதிருந்தே (Morley Minto Reforms – Indian Councils Act, 1909) அரசியல் அதிகாரங்களை சாதி - மத அடிப்படையில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று முறைப்படுத்தப் பட்டது மற்றும் இந்துக்களில் இருந்து தலித்து களுக்கும், ஆதிவாசிகளுக்கும் தனி அதிகாரப் பகிர்வு வேண்டும் என்பதை முஸ்லீம் லீக் மறை முகமாகப் பேசத்தொடங்கியது.

இதுதான் இந்துக்களை அடிபணியவைப்பதற்கு ஒரே வழியென்று கருதிய அம்பேத்கர் இந்து சமயத்திலிருந்து வெளியேறிவிடப் போவதாக அச்சுறுத்தினார். இதில் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இயோலா பிரகடனத்திற்கு முன்னர்வரை தலித்துகளை இந்துகள் முழுவது மாகப் புறக்கணித்தனர்.

எனினும், 1956-ஆம் ஆண்டு அம்பேத்கர் தேர்வு செய்த மதமானது, புறநிலை (இருத்தலியல்) முக்கியத் துவத்திற்கு முற்றிலும் எதிரானதாக இருக்கிறது.

இத்தகைய மாற்றம் அவருடைய ஆன்ம-இயலின் (அகநிலை) முக்கியத்துவமானது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் இருத்தலியலின் (புறநிலை) முக்கியத்துவத்தை மூழ்கடித்து விட்டதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது. அம்பேத்கர், தான் மாற வேண்டிய மதமாக பௌத்தத்தைத் தேர்வு செய்தார். அது ஏறக்குறைய அழிந்து கொண்டிருந்த மலைப்பிரதேச மாநிலங்களிலும் (மேற்கு வங்காளம், அசாம், சீக்கிம், மிசோரம், மற்றும் திரிபுரா) இமாலயப் பள்ளத்தாக்கின் உயரமான இடங்களிலும் (ஜம்மு-காஷ்மீரில் லடாக் மாவட்டத்திலும், இமாச்சலப் பிரதேசம் மற்றும் உத்திரப் பிரதேசத்தின் வடக்குப் பகுதிகளில்) மட்டும் ஒரு சிறிய எண்ணிக்கையிலான மக்களால் பாரம்பரியமாகப் பின்பற்றப் பட்டும் பாதுகாக்கப்பட்டும் வந்த மதமாக இருந்தது.



அம்பேத்கர் வரையறுத்ததைப் போல் இந்த நிகழ்வு தலித்துகளின் இருத்தலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தகுதியுடையவை யல்ல. அதே சமயம், அம்பேத்கர் இந்த முடிவைத் தேர்வு செய்ததற்கான உறுதியான காரணம் இருக்கிறது. அவர் இதற்கு முன்னால் இருபது ஆண்டுகளாக இதைப் பற்றி ஆய்வு செய்து வந்திருக்கிறார். பௌத்தத்தின் மீதான அம்பேத்கரின் ஈர்ப்பு மக்களுக்குத் தெரிந்ததே. இந்த நிகழ்வானது அவருடைய முந்தைய வருடங்களில், அவருடைய மெட்ரிக்குலேசன் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றதை நினைவுகூறும் பொருட்டு அவருக்கு பரிசளிக்கப்பட்ட புத்தகத்தின் மூலம் புத்தரின் வாழ்க்கை வரலாறு அம்பேத்கருக்கு அறிமுகம் செய்யப்பட்டது. அந்தப் புத்தகமானது, அதே பாராட்டுவிழாவில் தலைமை தாங்கிய கெலுஸ்கர் குருஜி (Keluskar Guruji) என்பவரால் எழுதப்பட்டது. அவர் அந்தக் காலகட்டத்தில் ஒரு பெயர்பெற்ற சமூக ஆர்வலர். அன்றிலிருந்து பௌத்தமதத்தின் தாக்கமானது அம்பேத்கரின் மனதில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது.

“முக்தி கோன் பாத்தே” உரையிலேயே அம்பேத்கர் இஸ்லாமை உயர்த்திப் பேசுவதைப் போல் தோற்றமளித்ததன் மூலம் அவருடைய தேர்வாக இஸ்லாம் மதம் உள்ளது என்ற உணர்வைத் தந்தது. ஆனால், அவர் தன் உரையை முடிக்கும் போது புத்தரின் கடைசி வாழ்நாள் “அப்போ தீபோ பவா” (உனக்கு நீயே ஒளியாய் இரு) என்பதைப் பற்றி ஒரு மிகச் சிறந்த சமயச் சொற்பொழிவாற்றினார்.

**அவர் பௌத்தத்தைத் தேர்வு செய்தது ஒரு ஆச்சரியத்திற்குரியதே அல்ல. அவரின் அடிப்படைக் கோட் பாடுகளைக் கடந்து மதமாற்றமானது தலித்துகளின் புறநிலைப் பயன் பாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யவேண்டும்.**

நன்றி: scroll.in

**உ.திலகவதி** சட்டக்கல்லூரி மாணவர், மனிதி

# ஓங்கி ஒலித்த பெண்களின் குரல்




'அமைதிக்கான உரையாடல்' எனும் இந்தியா முழுவதுமான பரப்புரைப் பயணம் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. இந்தியாவில் பாசிசப் போக்கு அதிகரித்துள்ளது சமீபகாலமாக வெகு வெளிப்படையாகப் புலப்படுகிறது. இந்துத்துவ ஆதிக்கம் என்பது ஒடுக்கப்பட்ட, சிறுபான்மையின மக்கள் மீது அதிகார அழுத்தத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுதிப்படுத்தும் ஷரத்து 19 (1) (a),பேச்சுரிமை மற்றும் கருத்துரிமை என்பது ஆளும் இந்துத்துவ அரசாங்கத்தால் திருடப்பட்டு வருகிறது. பெண்களின் நிலை என்பது கடந்த காலங்களைக் காட்டிலும் தற்போது மிகவும் அச்சுறுத்துவதாய் உள்ளது.

பாலியல் வன்முறை தன்னுடைய கோர முகத்தைச் சின்னஞ்சிறு குழந்தைகளிடமும் காட்டத் துவங்கியுள்ளது. "பெண்களுக்கு பாதுகாப்பில்லாத நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடம் வகிப்பதாக" ஒரு புள்ளிவிவர ஆய்வறிக்கை கூறியுள்ளது. இந்தப் புள்ளிகளில் தான் இந்தியாவில் உள்ள நெருக்கடி நிலையை உணர்ந்து இதற்கான வலுவான எதிர்ப்பை வெளிப்படுத்தவும் இந்தப் பாசிசப் போக்கினைப் பொது மக்களிடம் கொண்டு சென்று நமக்கான உரிமைகள் பற்றிய விழிப்புணர்வையும், அன்பையும், பாசிச எதிர்ப்பையும் குறித்து அவர்களை உணர வைக்கும் பொருட்டு இந்தப் பரப்புரைப் பயணம் குறித்த எண்ணம் உருவானது.

இந்திய மகளிர் சம்மேளனம் (NFIW) மற்றும் அன்ஹத் (ANHAD) என்ற அமைப்புகள் ஒன்றிணைந்து தோழர்கள் அன்னி (NFIW ) ஷப்னம் ஹாஷ்மி, (ANHAD) லீனா டேப்ரூ, போன்றவர்கள் கலந்து பேசி, டெல்லியில் இந்தப் பரப்புரைப் பயணம் குறித்த முடிவு எடுக்கப்பட்டது. முழுக்க முழுக்கப் பெண்களால் திட்டமிடப்பட்டு, துவங்கப்பட்டு, வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட இந்தப் பரப்புரைப் பயணத்தில் பல்வேறு பெண்கள் அமைப்புகள், இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பெண்கள் அமைப்புகள் இணைந்து பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பரப்புரைப் பயணமானது இந்தியாவின் ஐந்து முனைகளிலிருந்து துவங்கியது. கிட்டத்தட்ட இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களைக் கடந்து வந்த இந்தப் பரப்புரைப் பயணமானது சுமார் 100 பெண் பயணிகளைக் கொண்ட 500 நிகழ்ச்சிகளை, 200 இடங்களைக் கடந்து வந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயணமாகும். இந்தப் பயணம் நெடுகிலும் 500 பெண்கள் அமைப்புகள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இந்தப் பயணத்திற்காகப் பல பெண்கள் அயராது உடலுழைப்பையும், சிந்தனைகளையும், நேரத்தையும் அளித்துள்ளனர். பெண்களின் ஒற்றுமைக்கான மிகப் பெரிய ஒன்றுகூடலாக இது உருவானது.

இந்தியாவின் ஐந்து முனைகளிலிருந்து கிளம்பிய இந்தப் பயணம் 22 நாட்கள் பல்வேறு மாநிலங்களைக் கடந்து பிரச்சாரம் முடித்து அக்டோபர் 13 அன்று டெல்லி நாடாளுமன்றத் தெருவில் பொதுக்கூட்டமாக நிறைவடைந்தது. ஜம்மு காஷ்மீர், அஸ்ஸாம், கேரளா, டெல்லி, தமிழ்நாடு போன்ற ஐந்து முனைகளிலிருந்து ஒரு குழுவிற்கு சுமார் 15 - 25 பெண்கள் என ஐந்து குழுவிற்கு கிட்டத்தட்ட 100 பெண்கள் பயணிகளாக இந்த விழிப்புணர்வுப் பிரச்சாரத்தில் பங்கேற்றனர். ஒவ்வொரு குழுவிலும் வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அறிமுகமில்லாத பெண்கள் இருப்பார்கள். தமிழ்நாட்டில் இருந்து தோழர்கள் கவிதா

கஜேந்திரன், இராஜலட்சுமி (NFIW), தேவி (NFIW), லில்லி (பறையிசை கலைஞர்), அனுஸ்ரீ (திருநங்கை செயற்பாட்டாளர்) மற்றும் நான் (திலகவதி, மனிதி) ஆகியோர் ஐந்து வெவ்வேறு குழுக்களோடு பயணித்தோம்.

ஐந்து குழுக்களும் ஒவ்வொரு பேருந்தில் தங்களுக்கு வகுக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையிலான வழித்தடங்களில் பயணித்தோம். பல்வேறு மக்களை, மொழிகளை, பண்பாட்டை, பிரச்சனைகளைக் கடந்து வந்தோம். எங்களின் பிரச்சாரப் பயணத்தின் நோக்கமான பாசிச எதிர்ப்பு, ஜனநாயகப் பாதுகாப்பு, பெண்கள், சிறுபான்மையின ஒடுக்கப்பட்ட மக்களுக்கெதிரான வன்முறை எதிர்ப்பு மற்றும் அரசியலமைப்புச் சட்டப்பாதுகாப்பு ஆகியவற்றை அவர்களிடம் கொண்டு சேர்த்தோம். **"உங்கள் உதடுகள் சுதந்திரமாகத்தான் இருக்கிறது! பேசுங்கள்"** என்பதை ஒருமித்த கருத்தாக முன்வைத்தோம். எங்களின் கருத்துகளை உரையாடல் மூலமும், நாடகங்கள், பாடல்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலமும் கொண்டு சேர்த்தோம். பல இடங்களில் நடைப்பயணமாக ஊர்வலமாக முழக்கங்களோடு பொதுமக்களைச் சென்றடைந்தோம். பல்வேறு அனுபவங்களையும் அரசியல் புரிதல்களையும் பெற்றோம்.

ஜம்மு காஷ்மீரில் துவங்கிய பயணம், ஹிமாசலப் பிரதேசம், பஞ்சாப், ஹரியானா வழியாக டெல்லி வந்தடைந்தது. இதில் பயணித்த தமிழகத்தைச் சேர்ந்த திருநங்கைத் தோழர், இந்த வழி மிகவும் சவாலாக இருந்ததாகவும் குறிப்பாக, காஷ்மீரில் ஆயுதம் ஏந்திய ராணுவத்தினர் எங்கும் சூழ்ந்துள்ளதால் பதற்றம் நிலவியதாகவும், எல்லாப் பகுதிகளிலும் இந்தியா பாகிஸ்தான் எல்லைகள் இருப்பதாகவும் தெரிவித்தார். சுட்டுக் கொல்லப்படுதல் அங்கே வெகு சாதாரணமானதாக இருப்பதாகவும் கூறினார்.

கட்டைகளாலான வீடுகளிலேயே வசிப்பதாகவும் ஒரு பாதுகாப்பற்ற சூழலிலேயே காஷ்மீரிகள் வாழ்வதாய் அவர் உணர்ந்ததாகக் கூறினார். கேரளா வழியாகக் கர்நாடகா, மஹாராஷ்டிரா, குஜராத் வழியாக டெல்லி வந்த தோழர் லில்லி, கேரளாவில் செய்த நிகழ்ச்சிகளுக்கும் குஜராத்தின் நிகழ்ச்சிகளுக்கும் நிறைய வேறுபாடு இருப்பதை உணர முடிந்ததாகக் கூறினார். கேரள இடதுசாரி அரசு அளித்த ஆதரவும் குஜராத்தின் இந்துத்துவ அரசு அளித்த மன உளைச்சல் மற்றும் பதற்றமும் கொள்கை ரீதியாக மாநிலங்கள் எப்படி வேறுபடுகின்றன என்பதனைத் தெளிவாய் உணர்த்தியதாகக் கூறினார். தமிழ்நாட்டிலிருந்து கிளம்பிய குழு தெலுங்கானா, ஆந்திரப்பிரதேஷ், ஒடிஷா, சட்டீஸ்கர் வழியாக டெல்லி வந்தடைந்தது. அதில் கலந்து கொண்ட தோழர்கள் இராஜலட்சுமி மற்றும் தேவி, **தென்னிந்திய மக்கள் அளித்த ஆதரவையும் அரசியல் விழிப்புணர்வையும் வட மாநிலங்களில் உணர முடியவில்லை எனவும் ஒரு தனி நாடு போல் உள்ள வேற்றுமைகளையும் உணர்ந்த தாகக் கூறினார்.**

நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், மேகாலயா, அஸ்ஸாம், மேற்கு வங்கம், பீகார் வழியாக டெல்லி வந்த குழுவில் பங்கேற்ற தோழர் கவிதா கஜேந்திரன் "வடகிழக்கு மாநில மக்கள் இந்தியாவில் இருந்து மிகவும் தனிமைப்படுவதாக உணர்கிறார்கள். தேசிய இனங்களை இந்திய அரசு அலட்சியப்படுத்துவதும் ஆதிக்கம் செலுத்துவதும் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள மக்களின் பாதுகாப்பற்ற உணர்வின் மூலம் புலப்படுகின்றது" என்றார். அங்கேயும் ஆயுதம் ஏந்திய ராணுவத்தினரைப் பரவலாகப் பார்க்க முடியும். குறிப்பாகப் பெண்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப் படுகிறார்கள். இந்தியாவை வேறு நாடாக அம்மக்கள் பார்க்கிறார்கள்.

நான் (திலகவதி), டெல்லியிலிருந்து கிளம்பி உத்தரப்பிரதேசம், ஜார்கண்ட், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் வழியாக மீண்டும் டெல்லி சென்றடைந்த குழுவோடு பங்கேற்றேன்.

இந்தக்குழு இந்தியாவின் மையப் பகுதியில் பயணித்ததால் பல்வேறு வகையான வாழ்க்கை முறைகளையும் மக்களையும் நாங்கள் சந்திக்க நேர்ந்தது. என்னுடைய அனுபவங்களைச் சற்று விரிவாகப் பகிர்கிறேன்.

### முக்கியப் பிரச்சனைகள்:

#### 1. வறுமை:

வட இந்திய மக்கள் மிகவும் வறுமையில் வாழ்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் தென்னிந்திய மக்களைக் காட்டிலும் மோசமாக உள்ளது. நகர வளர்ச்சி, மற்றும் கிராமப்புற வளர்ச்சி முரணாக உள்ளது. உழைப்புச் சுரண்டல் அதிகமாக உள்ளதால் அங்கே வர்க்க வேற்றுமை மிகுதியாக உள்ளது. அவர்களின் வீடுகள், கல்வித்தரம், உணவு அனைத்துமே கவலைப்படும் அளவிற்கு அவர்களின் நிலை உள்ளது. வறுமையில் வாடும் மக்களை அடிமட்ட வேலைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். பெட்ரோல் ரிக்ஷாக்களுக்கு நிகராக மனிதர்கள் இயக்கும் ரிக்ஷாக்கள் உள்ளது. உடலை வருத்தி சக மனிதர்களை ஏற்றிக்கொண்டு மூச்சு வாங்கி மிதித்து எழும் அந்த ஒட்டிய வயிறுகளில் வட இந்தியாவின் வறுமையையும் சுரண்டலையும் நாம் காணலாம்.

தெருவுக்குத்தெரு வாழைப்பழக் கடைகளும், சமோசா, கச்சோரி கடைகளும் உள்ளன. அது ஏன் என்று பார்த்தால் வறுமையின் பிடியில் உள்ள மக்கள் வாழைப்பழத்தையும், சமோசாவையும் கொண்டே மதிய உணவை முடித்துக் கொள்கிறார்கள். 20 ரூபாய் தான் அவர்களால் மதிய உணவிற்காக ஒதுக்க முடிகிறது. குறைந்த செலவில் மதிய உணவுத் திட்டங்கள் எதுவும் வறுமையின் பிடியில் உள்ள அந்த மக்களுக்கு இல்லை.வேலை வாய்ப்பும் மோசமான நிலையில் உள்ளதால் படித்த இளைஞர்கள் படிப்பிற்கான வேலைகள் செய்யாமல்

'பான்' கடைகளில் போதைப் பொருட்களை விற்பதையும் பார்க்க நேர்ந்தது. வளமற்ற வறட்சியான வாய்ப்பற்ற மாநிலங்களாக அவை உள்ளன.

### 2. இந்துத்துவமும் இஸ்லாம் வெறுப்பும்

நாங்கள் சென்ற மாநிலங்களிளெல்லாம் 'இந்து - முஸ்லிம்' பிரச்சனைகள் இருப்பதாக மக்கள் தெரிவிக்கிறார்கள். இது வடஇந்தியாவில் மிக முக்கிய ஆழமாக வேரூன்றிய பிரச்சனையாக உள்ளது. இஸ்லாம் மக்கள் மீது இந்துத்துவ சக்திகளால் திட்டமிடப்பட்ட வெறுப்பு பரப்பிவிடப்படுகின்றது. அமைப்பு சார்ந்த இஸ்லாம்-இந்துத்தோழர்கள் ஒற்றுமையாகச் செயல்படுகின்றனர். ஆனால் வெகுஜன மக்களிடையே பரவலான வேற்றுமையும், இந்து மக்கள் - இஸ்லாம் மக்கள் தனித்தனியாக வாழ்வதும் தொடர்பற்று இருப்பதும் தெளிவாகக் காணமுடிகிறது.

விநாயகர் ஊர்வலத்தை ஒரு அராஜகப் போக்கோடு நடத்துவதும், மொஹரம் ஊர்வலங்களில் தேவையில்லாமல் பிரச்சனைகளை உருவாக்குவதும் இந்துத்துவ சக்திகளால் நடத்தப் படுகின்றது. இஸ்லாமியர்களோடு சேரக்கூடாது, இஸ்லாமியர்கள் கடைகளில் பொருட்கள் வாங்கக்கூடாது போன்ற எழுதப்படாத சட்டங்கள் இருக்கின்றன. சின்னஞ்சிறிய குழந்தைகளும் "எங்களுக்கு இஸ்லாமிய நண்பர்கள் கிடையாது. எனக்கு இஸ்லாமியர்களை பிடிக்காது" என்ற போது மதவெறி எந்த அளவிற்கு வேரூன்றி உள்ளது எனக் காண முடிந்தது.

தங்களை "இந்துக்கள் என்றோ இஸ்லாமியர்கள் என்றோ சொல்லாமல் இந்தியர்கள் என்று சொல்லும் மக்கள் நம்பிக்கை அளிக்கிறார்கள். குறிப்பாக இஸ்லாமியப் பெண்கள் சிலர் பர்தா அணிவதுடன், பொட்டு வைத்துக் கொள்வதும், இந்துப் பெண்கள் "அஸான்" ஓதும் போது தங்கள் தலைகளை மூடிக்கொள்வதும் அவர்கள் எந்த அளவிற்கு மதங்கள் கடந்து ஒற்றுமையை வலியுறுத்துகிறார்கள் எனப் புரிய வைக்கிறது.

### 3. சாதியம்

இஸ்லாம் - இந்துப் பிரச்சனைகள், மதவெறிச் சண்டைகள் அங்கே பூதாகரமாக வெடிப்பதைப் போல் 'சாதி' ஒரு பிரச்சனையாகக் கருதப்படுவதில்லை.

**ஏனென்றால் "நாம் அடிமையல்ல" என்ற சிந்தனையையே அந்த மக்களிடம் கொண்டு சேர்க்க ஆதிக்க சக்திகள் விடுவதில்லை. சாதி அடுக்குகளை அப்படியே ஏற்றுக்கொள்வதும், அதுதான் அவர்களின் கலாச்சாரம், கடவுள் நம்பிக்கை என்றும் மக்களிடம் திணிக்கப்பட்ட நம்பிக்கையாக உள்ளது. அதிலிருந்து வெளியேறுவது குறித்து அவர்கள் யோசிக்க அனுமதிக்கப்படுவதில்லை. அமைப்பு களில் மக்கள்பணி செய்யும் தோழர்கள் கூட சாதிப் பெயரைப் பின்னால் இணைத்துக் கொள்கிறார்கள் என்பது எத்தனை அவலம். இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் மனநிலையும் சமூகநீதி குறித்த விழிப்புணர்வின்மையும் மிகுந்த ஆபத்தான கட்டத்தை நோக்கி அம்மக்களை இழுத்துச் செல்கிறது. மதச்சண்டைகளைவிட மிக முக்கியப் பிரச்சனை சாதிஅடுக்கு என்பதையும் அதன் ஆபத்தையும் உணராத பகுதியாகத்தான் வட இந்திய மாநிலங்கள் உள்ளன. எனவேதான் சாதிக்கு எதிராய் வெகுஜன மக்களின் குரல்கள் ஒலிக்காமலேயே அழுத்தப்படுகிறது.**

### 4. பெண்கள்:

**எல்லாப் பகுதிகளிலும் பெண்கள் அடிமை களாகவும் சமையல் அறைக்கான, பிள்ளைப் பெறுவதற்கான இயந்திரங்களாகவும் நடத்தப் பட்டாலும், வட இந்திய பகுதிகளில் அவர்களின் நிலை இன்னும் மோசமானதாகவும், அதீத வன்முறைக்கு உட்பட்டதாகவும் இருக்கிறது. தலைகளை முக்காடுகள் போட்டு மூடிக்கொண்டு, சமையலறையில் சப்பாத்தி சுட மட்டுமே தகுதியானவர்கள் பெண்கள் என்ற சிந்தனை அங்கே வலுவாக உள்ளது. தென்னிந்தியப் பெண்களிடம் உள்ள உரிமைக்கான விழிப்புணர்வும், சுயமாக வேலைக்குச் சென்று சொந்தக் காலில் நிற்கும் வாய்ப்புகளும் அந்தப் பெண்களுக்கு மறுக்கப் படுகின்றது.**

பிரச்சாரப் பயணத்திற்கான தெருமுனைக் கூட்டங்களுக்கு அழைத்தால் கூட **"வீட்டின் கேட்டைத் தாண்டி நாங்கள் செல்லக்கூடாது. இது எங்களின் கணவருக்கும் மாமனார்களுக்கும் பிடிக்காது"** என்று மறுக்கிறார்கள். இரவு ஏழு மணிபோல் நகரங்களில் உள்ள மார்க்கெட்களில் கூடப் பெண்களைக் காண முடிவதில்லை. குறிப்பாக இஸ்லாமியப் பெண்கள் மீது பர்தாக்கள் திணிக்கப்பட்டு வெளியே வரும்போதும் நிச்சயமாக ஆண் துணை இல்லாமல் வரக்கூடாது என்ற அவல நிலையும் உள்ளது. இராஜஸ்தான், ஜார்கண்ட் மாநிலங்களில் இளவயதுத் திருமணங்களும், இளவயதில் குழந்தை பெறுவதும் அதிக அளவில் உள்ளது. பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளும் அதிகமாக, பெரிய குற்றமாகக் கருதப்படாத போக்கும் உள்ளது.


### 5. சுகாதாரம்

"தூய்மை இந்தியா" எனப்படும் (சுவச் பாரத்) திட்டம் தென்னிந்திய நகரங்களில் ஒலிக்கும் வாசகமாக இருந்தாலும் சுகாதாரத்தில் வட இந்தியா மிகவும் பின்னடைந்துள்ளது. திறந்த வெளிக் கழிப்பிடம்தான் மக்களால் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. தூய்மை இந்தியா திட்டத்தில் கட்டித் தரப்பட்ட கழிப்பறைகள் பொருட்கள் போட்டு வைக்கும் கிடங்குகளாகவும், ஒட்டடை நிறைந்த அறைகளாகவும் உள்ளன. கழிப்பறைக்கான தண்ணீர் வசதி இல்லாமலும், கழிப்பறைப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு இல்லாமலும் வெறும் கழிப்பறைகள் கட்டுவதால் பயனில்லை என்பதை அரசு உணரவில்லை.

துப்புரவுத் தொழிலாளர்களின் நிலை இன்னும் மோசம் அவர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள் கொடுக்கப்படுவதுகூட இல்லை. இதுபோன்ற மனித உரிமை மீறல்கள் சர்வ சாதாரணமாக நிகழ்கிறது. மாசடைந்த நகராக தலைநகர் இருப்பதும், குப்பைகளுக்கு நடுவே மக்கள் வசிப்பதும் சுகாதாரத்தைக் கேள்வி கேட்பதாக உள்ளது.

## 6. நிலம்

"நிலம் எங்கள் உரிமை" என்ற கருத்தாக்கம் தென்னிந்தியாவில் பரவிய அளவிற்கு வட இந்திய மக்களைச் சென்றடையவில்லை. ஜார்கண்ட் மாநிலத்தில் குறிப்பாக ஒடுக்கப்பட்ட ஏழை விவசாயிகளை ஏமாற்றி, அரசே நிலங்களைப் பிடுங்கி கார்ப்பரேட்டுகளுக்கு விற்கிறது. இதனை "நில வங்கி" (Land Bank) என அழைக்கிறார்கள். இந்தியாவிலேயே ஜார்கண்ட் மாநில மக்கள் தான் வேறு மாநிலங்களுக்கு அதிகமாக இடம்பெயர்கிறார்கள். இதற்கு நில அபகரிப்பும், வளம் சுரண்டுதலும் மிக முக்கியக் காரணம்.




## 7.மொழி

**"இந்தித் திணிப்பு எதிர்ப்பு" என்பது மிகப் பெரிய புரட்சி இயக்கமாக வெடித்ததற்குக் காரணமான பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்களும் திராவிடக் கொள்கைகளும் இல்லாமல் வட இந்திய மக்கள் இந்தி மாயைக்குள், திணிப்பிற்குள் சிக்கித் தவிக்கிறார்கள். ஒவ்வொரு 500 கி.மீக்கும் ஒரு மொழி உள்ளது. தேசிய இனங்களின் மொழி முற்றிலும் வேறாக உள்ளது. குஜராத்தி, இராஜஸ்தானி, அஸாமி, பழங்குடியின மக்களின் மொழிகள் போன்றவை இந்தியிலிருந்து முற்றிலும் வேறுபட்டும், இந்தி தெரியாத பிற மொழிகளைத் தாய் மொழிகளாய்க் கொண்டுள்ள மக்கள் இந்தி தேசிய மொழி எனும் மாயைக்குள் தள்ளப்பட்டு அதைக் கற்றுக்கொள்ள நிர்பந்திக்கப்படுகிறார்கள்.** தாய்மொழிக் கல்வி ஆறாம் வகுப்போடு நிறுத்தப்பட்டு இந்தியும் ஆங்கிலமுமே திணிக்கப்படுகின்றது.

## 8.உணவு

'மாட்டுக்கறி' சாப்பிடக்கூடாது எனத் தடை விதித்ததே முட்டாள்தனமான பாசிசப்போக்கு. இதில் அரசு மாட்டுக்கறியை தடை செய்யாத மாநிலங்களிலும் மாட்டுக்கறித் தடை என்பது நிலவுகிறது. மக்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். படுகொலை செய்யப்படுகிறார்கள். (Mob lynching) உணவுரிமை என்பது மக்களின் கைகளிலிருந்து முழுவதுமாகப் பிடுங்கப்படுகின்றது. அதே சமயம் பசு மாட்டின் இறைச்சி தடை செய்யப்படும்போது எருமை மாட்டு இறைச்சி பரவலாக உண்ணப் படுவது குறிப்பிடத்தக்கது.

## 9.மாற்று தேவை

மக்களிடம் குறைகளைக் கேட்டால் "ரேஷன் கார்டே எங்களுக்கு இல்லை, வறுமையில் வாடுகிறோம், வேலை இல்லை" எனப் புலம்புகிறார்கள். **இந்த அரசு உங்களுக்கு பிடித்திருக்கிறதா? யாருக்கு ஓட்டுப்போட விரும்புகிறீர்கள் எனக் கேட்டால், ஆளும் பா.ஜ.க.வைக் கை காட்டுகிறார்கள்.**

அரசிற்கும் தங்களின் பிரச்சனைகளுக்கும் சம்பந்தம் இல்லை என நம்புகிறார்கள். பா.ஜ.க.வைத் தவிர வேறு மாற்று இல்லை என எண்ணுகிறார்கள். வறுமையின் பிடியில் உள்ள மக்கள் தங்களைச் சுற்றி நிகழும் அரசியலைத் திரும்பிப் பார்க்கக்கூட இயலாதவர்களாக, உரிமைகள் பற்றியும் அரசியல் பற்றியும் விழிப்புணர்வு அற்றவர்களாக இருக்கிறார்கள்.

## ஓங்கி ஒலித்த பெண்கள் குரல்:

இதே நிலையில்தான் பெண்கள் தங்களின் குடும்பம், கணவன், குழந்தை என அனைத்தையும் துறந்து 22 நாட்கள் சமூகப் பிரச்சனைகளுக்காகவும், உரிமைகளுக்காகவும் கரம் கோர்த்து நடைபோடத் தொடங்கினார்கள். உணவு, நீர், இருப்பிடம், கழிப்பறை என அத்தனை சவால்களையும் கடந்து சமூகத்திற்காக ஒன்றிணைந்து மொழி எனும் பெரும் சிக்கலை உடைத்து அன்பால் இணைந்தார்கள்.

அக்டோபர் 25, சென்னையில் தமிழகப் பெண்கள் ஆயிரம் பேர் ஒன்று கூடி, காஷ்மீர் வழித்தடத்தில் வந்த பெண்களை வரவேற்று ஒரு மிகப்பெரிய அரங்கக் கூட்டத்தை நடத்தி முடித்தார்கள். அதில், NFIW, AIDWA, மனிதி, வி.சி.க, தி.க, இந்தியக் கிறித்துவப் பெண்கள் இயக்கம், தமிழ்நாடு முஸ்லிம் மகளிர் கழகம், பெண் தொழிலாளர் சங்கம் என நூற்றுக்கணக்கான அமைப்புகள் இணைந்து 1000-க்கும் மேற்பட்ட பெண்களைத் திரட்டி "அமைதிக்கான உரையாடல்" அரங்கக் கூட்டத்தினை, பாசிசத்திற்கு எதிராக வெற்றிகரமாக நடத்தி முடித்தார்கள்.

டெல்லியில் அனைத்துக் குழுவும் அக்டோபர் 13 அன்று வந்தடைந்து மிகப்பெரிய பெண்கள் சக்தியால் ஒன்றிணைந்து பாசிச, ஆணாதிக்க, முதலாளித்துவ போக்குக்கு எதிராக ஓங்கி ஒலித்தனர். "நம்பிக்கை மனிதிகளால்" திளைத்து நின்றது நாடாளுமன்ற சாலை. பெண்கள் தங்கள் உரிமைகளுக்காகவும், ஆணாதிக்கத்திற்கு எதிராகவும் மட்டும்தான் போராடுவார்கள் என்ற கருத்தைச் சுக்கு நூறாய் உடைத்து, ஒட்டுமொத்த மக்களுக்கான நீதிக்காய், ஜனநாயகத்திற்காய், உரிமைக்காய் அன்பால் இணைந்த பெண்கள் கூட்டம், பேசாத உதடுகளைப் பேசத் தூண்டிய ஒரு எழுச்சிக் கூட்டமாய் "பாத்தே அமன் கீ" எனும் வரலாற்றுச் சிறப்பு மிக்க தேசிய அளவிலான பரப்புரை பயணத்தை முடித்துத் திமிறி நிற்கிறது.

கவிக்கண்ணன் குருசாமி

# உள்ளாட்சியில் காந்தியும், பெரியாரும்

ஜனநாயகம் என்பது பாராளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் நடக்கும் விஷயங்கள் மட்டும் அல்ல. மக்கள் வாழும் எல்லா இடங்களிலும் ஜனநாயகம் கட்டமைக்கப்பட்டு மக்களுக்கு அருகாமையில் மக்கள் பிரதிநிதிகளை வைத்து மக்கள் பிரச்சனைக்குத் தீர்வுக்காணச் செய்தலே ஜனநாயகம் ஆகும். இது போன்ற ஜனநாயக இந்தியாவைத்தான் கட்டமைக்க எண்ணினர் காந்தியும், நேருவும். இதற்கான ஆதாரங்களை அவர்களின் செயல்பாடுகளிலும் எண்ணங்களிலும் காணலாம்.

உதாரணமாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் நான்காவது அட்டவணையில் வழிகாட்டும் விதிகள் ( Directive Principles of State Policy - DPSP) என்ற பெயரில் இடம்பெற்றுள்ள காந்தியக் கொள்கைகளைக் குறிப்பிடலாம். இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் எனில், ஷரத்து 40 உள்ளாட்சி நிர்வாகம் பற்றியது. காந்தியும், நேருவும் சொன்ன ஜனநாயகம் என்பது உள்ளாட்சி ஆகும்.

அதாவது இந்திய அரசின் அதிகாரம் கிராமத்தில் இருக்க வேண்டும் என்றும், அதிகாரம் கீழிருந்து மேலானதாக இருக்க வேண்டும் என்றும் கூறினார். குறிப்பாக மக்கள் பிரதிநிதியை மக்கள் அருகில் இருந்து அவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பவராக இருக்க வேண்டும் என்று எண்ணினார் காந்தி . அதேபோலத்தான் நேருவும் காந்தியின் எண்ணங்களுக்கு உருவம் கொடுத்தவராகவே இருந்துள்ளார். அதற்கான ஆதாரமும் இங்கு உள்ளது . 1952 ல் சமுதாய வளர்ச்சித் திட்டத்தையும் (Community Development Program - 1952), 1953 ல் தேசிய விரிவுப் பணித்திட்டத்தை உருவாக்கியது மட்டுமின்றி (National Extension Service -1953) 1957-ல் சமுதாய வளர்ச்சித் திட்டத்தைக் கண்காணித்து அறிக்கை வழங்கப் பல்வந் ராய் மேத்தா தலைமையில் குழு அமைத்தார். இந்த நிகழ்வு பின்னர் வர இருந்த உள்ளாட்சி சாம்ராச்சியத்திற்கு வலுசேர்த்ததாக அமைந்தது. இப்படி நேருவின் செயல்பாடுகள் ஒரு ஜனநாயக இந்தியாவைக் கட்டமைக்கும் பாதையிலையே சென்று கொண்டிருந்தது. நேருவைத் தொடர்ந்து வந்தவர்களில் ஒரு சிலர் ஜனநாயக இந்தியாவைக் கட்டமைக்க எண்ணினார்கள். அவர்களைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமெனில் மொரார்ஜி தேசாயும், இராஜிவ் காந்தியும் தங்களது பங்கிற்குக் கீழ் நோக்கிய அதிகாரம் கொண்ட இந்தியாவை உருவாக்கப் பாடுபட்டனர்.



உதாரணமாக 1977-ல் மொரார்ஜி தேசாய் தலைமையிலான இந்திய அரசு உள்ளாட்சி நிர்வாகத்திற்கு வலு சேர்க்க அசோக் மேத்தா தலைமையில் குழு அமைத்து உள்ளாட்சி நிர்வாகம் சார்ந்த அதன் ஆலோசனைகளை இந்திய அரசுக்கு வழங்கியது. இந்த இரு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ராஜிவ்காந்தி தலைமையிலான அரசு 1984-ல் சட்டப் பூர்வமான அதிகாரமிக்க ஒரு உள்ளாட்சி அமைப்பை உருவாக்க எண்ணியது.

இதற்காக 5 வருடக் கடின உழைப்புக்கு பின் 1989-ல் 63 வது மற்றும் 64 வது சட்டத்திருத்தம் நாடாளுமன்ற கீழ் அவையில் ஒப்புதல் பெற்று மேல் அவைக்கு சென்றது . ஆனால் 1988 அக்டோபர் 15ல் அதற்கான ஆதரவு பாராளுமன்ற மேலவையில் கிடைக்க வில்லை. அன்றிரவு கண்ணீர் மல்க பாராளு மன்றத்தை விட்டு வெளியேறிய ராஜிவ் காந்தியின் கனவு ஒருவழியாக 1992 இல் நரசிம்மராவ் தலைமையிலான இந்திய அரசு உள்ளாட்சி நிர்வாகம் என்ற சட்ட அதிகாரம் கொண்ட அமைப்பு உருவாக்கிய போது நிறைவேறியது. ஆனால் 63 மற்றும் 64 வது சட்டத்திருத்தமாக அல்ல, 73 மற்றும் 74 வது சட்டத்திருத்தமாக. காரணம், 1988 முதல் 1992 ஆகிய இடைப்பட்ட இந்த 4 வருடத்தில் பல சட்டத்திருத்தம் வந்ததால் உள்ளாட்சி நிர்வாகச் சட்டத் திருத்தம் 73 மற்றும் 74 க்கு மாறியது. இந்த 73 மற்றும் 74 வது சட்டத்திருத்தம் 1993 ஏப்ரல் 24-ல் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

இப்படி பல்வேறு போராட்டங்களுக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட உள்ளாட்சி நிர்வாகச் சட்டத்திருத்தம் பல்வேறு அதிகாரங்களை மக்கள் கையில் கொடுத்தது. குறிப்பாக கிராம சபா அதிகாரம், வளர்ச்சிப்பணியில் மக்கள் பங்கேற்பு, திட்டம் தீட்டுதல், பொருளாதார வளர்ச்சி, ஒளிவு மறைவில்லாத மக்கள் அதிகாரம் கொண்ட அமைப்பு என காந்தி, நேருவின் கனவுகள் இடம் பெற்றிருந்தது. இதற்கும் மேலாக சமூக நீதி, இடஒதுக்கீடு, சமஉரிமை, பெண்ணுரிமை போன்ற பெரியாரின் கருத்துக்களும் இடம் பெற்று மாபெரும் மக்கள் அதிகாரம் பெற்ற அமைப்பாக உருவானது. இந்தச் சட்டத்திருத்தம் இந்திய அரசியலமைப்பின் மிக பெரிய மைல்கல் மற்றும் புரட்சி என்றே சொல்லலாம்.

இப்படி காந்தி, நேரு, பெரியார் அவர்களின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த உள்ளாட்சி அமைப்பு 1994-ல்

தமிழக சட்டமன்றத்தில் ஒப்புதல் கொடுக்கப்பட்டு 1998 ல் தமிழக உள்ளாட்சி நிர்வாகச் சட்டம் திருத்தப்பட்டு நடைமுறைக்கு வந்தது. இப்படி காந்தி, நேரு, பெரியார் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த உள்ளாட்சி அமைப்பு உண்மையாகவே இவர்களின் கனவுகளை நிறைவு செய்ததா? என்றால் ஆம் என்றே சொல்லலாம்.

உதாரணமாக, இந்திய சமுதாயத்தில் அதிகார பலம் இல்லாதவர்களாகக் கருதப்பட்ட பெண்கள் மற்றும் பட்டியலினத்தவர்கள்; 73-வது சட்டத் திருத்தத்தின் தேர்தல்முறை மூலமாகப் பெண்கள் மற்றும் பட்டியலினத்தவர்கள் மனதில் உறங்கிக்கொண்டிருந்த உரிமை வேட்கையை நிறைவேற்றின. எடுத்துக் காட்டாக, இராமநாதபுரம் மாவட்டம் மிக்கல்பட்டிணத்தைச் சார்ந்த ஜேசுமேரி. இவர் தமிழகத்தின் முதல் பெண் பஞ்சாயத்து தலைவர்களில் ஒருவர் . 73 வது சட்டத் திருத்தம் மூலமாக அதிகாரம் பெற்ற இவர் தனது 5 வருட காலத்தில் நீர் மேலாண்மையில் மிகப் பெரிய சாதனை செய்து உலக அளவில் தனது புகழைக் கொண்டு சென்றார்.

அதே போல கேரளா மாநிலம் பில்லாட்சிமடம் கிராமத்தில் கொக்கோகோலா என்ற மிகப்பெரிய பன்னாட்டு நிறுவனத்தின் தண்ணீர்க்கொள்ளையின் மூலமாகப் பாதிக்கப் பட்ட மயிலம்மா என்ற பட்டியலினப் பெண்மணி, உள்ளாட்சியின் கிராமசபா அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்தப் பன்னாட்டு நிறுவனத்தை ஓடச் செய்தார். இதற்காக இந்திய அரசின் 'ஸ்ரீ சாந்தி புரஷ்கார்' விருதும் அவுட் லுக் நாளிதழின் 'ஸ்பீடு அவுட்' விருதும் பெற்று பெண்களின் போர்க் குணத்தை வெளிப்படுத்தினார்.

அதேபோல திருவள்ளூர் மாவட்டம் குத்தம்பாக்கம் கிராமத்தைத் தமிழக உள்ளாட்சி வரலாற்றின் ஒரு சாதனை கிராமம் என்றே சொல்லலாம். குத்தம்பாக்கம் இளங்கோ அய்யாவின் பெயரைப் பயன்படுத்தாமல் இந்தக் கட்டுரையை முடித்திருந்தால் அது சிறப்பாகவே இருந்திருக்காது. இவரைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், 1996 உள்ளாட்சித் தேர்தலில் வெற்றிபெற்றுத் தலைவரான பின்னர் இந்தியா முழுவதும் உள்ள பல முன்னோடி கிராமங்களுக்குப் பயணம் செய்து அங்கு நடைமுறைப் படுத்தப்பட்ட பல நல்ல திட்டங்களைக் குத்தம்பாக்கத்திற்குக் கொண்டு வந்து குத்தம்பாக்கத்தைப் பொருளாதாரத்தில் முன்னேறிய கிராமமாக மாற்றினார்.

இது மட்டுமா குத்தம்பாக்கத்தை சமூக நீதி கிராமமாக மாற்றி பெரியாரின் கனவை நனவாக்கி வரலாற்றுச் சாதனை செய்தார். ஆம் குத்தம்பாக்கத்தில் வீடு இல்லாத அனைத்துச் சாதியினரையும் ஒருங்கிணைத்து சமத்துவபுரம் உருவாக்கி சமூகநீதிப் பஞ்சாயத்தை உருவாக்கினார். இந்திய முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம், இந்தியா வல்லரசாக, இந்தியா முழுவதும் 100 சிறந்த மனிதர்களை அழைத்தபோது அந்த 100 பேரில் இவர் பெயரும் இருந்தது என்பது இவரின் மற்றொரு சிறப்பு.

இப்படி குத்தம்பாக்கம் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த காலத்தில் 2006 உள்ளாட்சித் தேர்தல் வந்தது. குத்தம்பாக்கம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டது. அப்போது இளங்கோ அய்யா ஆதரவோடு போட்டியிட்ட கீதா என்ற பெண் வெற்றிபெற்று, தலைவரானார். இந்தச் சமயத்தில் தான் 2009 ல் தமிழக அரசு வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் குத்தம்பாக்கத்தில் குப்பைக்கிடங்கு உருவாக்க எண்ணியது. இதனை எதிர்த்து கிராம சபாவில் தீர்மானம் போட்டு நீதிமன்றம் வரை சென்று மாநில அரசை வென்று சாதனைப் பெண்ணாகத் தனது பெயரை வரலாற்றில் பதிய வைத்தார் .

இந்தச் சமுதாயம் யாரையெல்லாம் அதிகாரம் அற்றவர்களாக ஒதுக்கி வைத்ததோ, அவர்கள் இன்று உள்ளாட்சி நிர்வாகத்தின் அதிகாரம் மூலமாக பன்னாட்டு முதலைகளை, அதிகார பலம் மிக்க மத்திய மாநில அரசுகளை எதிர்க்கும் வல்லமையுடன் வளர்ந்து நிற்கின்றனர். இது தான் உள்ளாட்சி நிர்வாகத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி. இவர்களைப் போல் பலர் இந்த உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக அதிகாரம் படைத்து கிராம வளர்ச்சிக்கு உதவுகின்றனர்.

ஆனால், நாம் தற்போது உள்ளாட்சியின் சாதனை, அதிகாரம் பற்றிப் பேசும் சமீபத்திய காலத்தில்தான் இன்னும் நமது நாட்டில் தாழ்த்தப்பட்டவர் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் ஆதிக்க சாதியின் தலையீட்டால் சுதந்திரம் அற்று இருப்பதும் , பெண் வெற்றிபெற்றும் அவர்களின் கணவன்மார்கள் ஆட்சி நடத்தும் அவலமும் இன்னும் நடந்துகொண்டுதான் உள்ளன. இது போன்ற சம்பவங்கள் எல்லாம் காந்தி, நேரு கனவுகளுக்கு நேர் எதிரானதாகவும். பெரியாரின் சமூக நீதி, பெண்விடுதலைக் கருத்துக்களைக் குழிதோண்டிப் புதைப்பதாகவும் உள்ளது. ஆதலால் இங்கு உள்ள அனைத்து ஜனநாயகவாதிகளும் நேரு, காந்தியின் உள்ளாட்சி நிர்வாகத்தையும், பெரியாரின் சமூகநீதிக் கருத்துக்களையும் கொண்ட 100 சதவீத வெளிப்படையான உள்ளாட்சி அமைப்புகள் உருவாக்க இன்னும் கடுமையாக உழைக்க வேண்டும்.

நாட்டில் எந்தச் சிறந்த சட்டம் வந்தாலும், எந்தச் சிறந்த திட்டம் வந்தாலும், சமுதாயத்தில் பல நூற்றாண்டுகளாக ஆதிக்கம் செலுத்தும் இந்துமத, சாஸ்திர சம்பிரதாயச் சட்டங்கள் அவற்றை அனுமதிப்பதில்லை. பார்ப்பன - பார்ப்பனிய ஆதிக்கங்களின் பிடியிலிருந்து விடுதலை பெறாத கிராமங்களில் உள்ளாட்சிச் சட்டங்கள் சிறு கலகத்தை உருவாக்கியுள்ளன. அந்தக் கலகத்தை வளர்த்தெடுப்போம். ●

பூங்கொடி, தாராபுரம்

# 497 ரத்து

# பெண்ணின் விருப்பங்கள்... பெண்ணின் விருப்பங்கள்தானா?



சபரிமலையில் 10 வயது முதல் 50 வயது வரை உள்ள பெண்கள் நுழைவதற்கு இருந்த தடையை நீக்கி அனைத்து வயதினரும் செல்லலாம் என வழங்கிய தீர்ப்பு, ஓரினச்சேர்க்கை உறவைக் குற்றம் என வரையறுக்கும் சட்டப்பிரிவு 377அய் ரத்து செய்து தன்பால் ஈர்ப்பு இயற்கையானது என்ற LGBT சமூகத்திற்கு ஆதரவான தீர்ப்பு என்ற வரிசையில் கடந்த வாரம் "திருமணம் தாண்டிய உறவு கிரிமினல் குற்றமல்ல" என்றுகூறி, சட்டப்பிரிவு 497 அய் ரத்து செய்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இத்தீர்ப்பின்போது நீதிபதிகள் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஆணாதிக்கவாதிகள் தலையில் நறுக்கென்று கொட்டுவது போல் இருந்தது. சட்டப்பிரிவு 497அய் சுட்டிக்காட்டி நீதிபதிகள் திருமணம் தாண்டிய பாலியல் உறவை (civil) சமூகத்தின் தனி உரிமைகள் சம்பந்தமான உரிமையியல் வழக்காகப் பதிவு செய்து விவாகரத்து கோரலாமே தவிர, கிரிமினல் குற்றமாகக் கருதக்கூடாது என்று தெரிவித்தனரே தவிர "குற்றமே இல்லை" என்று கூறவில்லை. மேலும் "மனைவி கணவனின் சொத்து அல்ல" "கணவன் மனைவிக்கு எஜமானனும் அல்ல" என்று கூறி உச்சநீதிமன்றம் இச்சட்டத்தை ரத்து செய்தது.

பொதுவாக முன்னேறிய நாட்டின் அளவுகோல் என்பது ஒரு நாடு எவ்வாறு பெண்களை நடத்துகிறது என்பதைப் பொறுத்தும், அந்நாட்டில் உள்ள பெண்களின் வளர்ச்சியைக் கொண்டும்தான் அமையும். அப்படிப் பார்த்தால் இன்னமும் இந்தியா உலகத்தோடு முன்னேற்றப் பாதையில் பயணிக்காமல் பின்தங்கி, பழமையின் கூடாரமாக ஒளி மங்கிக் காட்சி அளிக்கிறது. உதாரணத்திற்கு மேற்கண்ட 497 சட்டப்பிரிவையே எடுத்துக்கொள்ளலாம்.

"திருமணமான ஒரு பெண் தன்னுடைய கணவர் ஒப்புதல் இல்லாமல் மற்றொரு ஆணுடன் பாலியல் உறவு கொள்வது கிரிமினல் குற்றம்" என்று கூறுகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு ஆண் தன்னுடைய மனைவி வேறொருவருடன் திருமணம் தாண்டி உறவு வைத்திருக்கிறார் என்று வழக்கு தொடுக்க முடியுமே தவிர, பெண் தன் கணவர் வேறொரு பெண்ணுடன் பாலியல் உறவு வைத்திருக்கிறார் என்று வழக்குத் தொடுக்க முடியாது" என்று கூறுகிறது.

"சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று கூறிக்கொண்டு மனித இனத்தில் சரிபாதி உள்ள பெண்கள் இச்சட்டப்பிரிவின் கீழ் வழக்குத் தொடுக்க முடியாது என்பதில் என்ன சமத்துவம்

இருக்கிறது? சமத்துவம் இல்லாத இந்தச் சட்டத்தால் எந்தப் பயனும் இல்லை" என்று கூறி உச்சநீதிமன்றம் இச்சட்டத்தை ரத்து செய்தது.

சட்டத்தீர்ப்புகளைச் சட்டை செய்யாத சாமானியர்கள் முதன்முறையாக 497 சட்டம் குறித்து உச்சநீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பைப் பற்றி பட்டிதொட்டியெங்கும் விவாதித்தார்கள் என்றால் மிகையில்லை. 'காத்திருந்தவன் பொண்டாட்டிய நேத்து வந்தவன் கூட்டிட்டுப் போனா' கிரிமினல் குத்தம் இல்லையன்னு உச்சநீதிமன்றம் தீர்ப்பு சொல்வது தகுமா? நம்ம பண்பாடு, குடும்ப அமைப்பு எல்லாமே இந்தத் தீர்ப்புகளால் நாசமாகப் போகிறது, எதுவுமே தப்பில்லை, யாரும், யாரோடும் போகலாம் என்று தீர்ப்புக் கூறி நம்ம கலாசாரத்திற்குச் சாவுமணி அடித்துவிட்டார்கள் என்கிற பாணியிலேயே அவர்களது பேச்சு தொடர்கிறது.

சாமானியர்கள் மனதில் இத்தீர்ப்பு குறித்த தவறான கருத்தோட்டத்தை உருவாக்கியதில் பெரும்பங்கு சனாதனத்தை உயர்த்திப் பிடிக்கும் பார்ப்பனிய ஊடகங்களையே சேரும். செய்திகளை கொச்சைப்படுத்தி, திரித்து வெளியிட்டதால் அவற்றைக் கவனிக்கும் சாமானியர்கள் மனதிலும் தவறான ஒரு படிவம் படிந்துவிட்டது என்றே கூறலாம்.

கொழுந்தியாளைக் கொறைப் பொண்டாட்டின்னு சொல்ற நம்ம ஆளுகளுக்குக் கேட்கவா வேண்டும். **"அடுத்தவர் மனைவியை கரெக்ட் பண்றது தப்பில்லை என்று உச்சநீதிமன்றமே சொல்லிருச்சு" என்கிறார்கள்.** இத்தனைக்கும் இந்த சட்டப்பிரிவின் கீழ் இதுவரை யாரும் புகார் அளித்ததாகவோ, தண்டனை பெற்றதாகவோ தகவல் இல்லை.

"இழிநடத்தை, பரத்தையர் நட்பு, நற்குணமின்மை இவற்றையுடையவனாயினும், கற்பினளான பெண் தன் கணவனைத் தெய்வமாகப் பேணுக"

(மனுஸ்மிருதி அத்தியாயம் 10.சு.154)

"அன்றாட வேள்விகள் அய்ந்தும், உண்ணாமை, நோன்பு முதலியனவும் மாதர்க்குத் தனிப்பட யாதுமிலது, கணவனைப் பேணுதலே அவர்க்கு மறுமையின்பிற்குரிய நல்லாறு" (9:14)

மேற்சொன்ன மனுஸ்மிருதி சுலோகம் பெண்ணுக்குக் கூறும் அறிவுரையைப் பார்த்தீர்களா? பெண்ணே, உன் புருசன் உன்னிடம் கேவலமாக நடந்து கொண்டாலும்சரி, பொம்பளை விசயத்தில் அப்படி இப்படி இருந்தாலும் சரி, அட்ஜஸ்ட் பண்ணிட்டு அவனைத் தெய்வமாகக் கும்பிடுவது தான் கற்புடைய பெண்ணிற்கு அழகு.

நோன்பு, விரதம் என எதையும் கடைபிடிக்க வேண்டாம். புருசனைத் தெய்வமாகக் கும்பிட்டால் இந்தப் பிறவியில் மட்டுமல்ல மறுஜென்மத்திற்கும் நன்மை கிடைக்கும் என்று கூறுகிறது. இப்படிப்பட்ட மனுஸ்மிருதியை அடிப்படையாகக் கொண்டே தீர்ப்புகளை வெளியிட்டு வந்த உச்சநீதிமன்றம் முதன்முறையாக பெண்களின் மனதைக் கருத்தில் கொண்டு தீர்ப்பு கூறியிருக்கிறார்கள்.

## தீர்ப்பைச் சாதகமாக்கும் ஆண்கள்

"நாட்டுக்கு நல்லதுரை வந்தாலும் தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலை போகாது" என்பதுபோல, பெண் இனத்திற்கு ஆதரவாக உச்சநீதிமன்றம் என்னதான் சட்டம் போட்டாலும், சமுதாயத்தில் ஆதிக்கமாக உள்ள இந்து மனுசாத்திரச் சட்டங்கள், அவற்றை வளைத்துத் தங்களுக்குச் சாதகமாக்கி விடும் என்பதை இந்த 497 தடையும் உறுதிப்படுத்திவிடுமோ என்ற பயமும் உருவாகியுள்ளது.

திருவள்ளுவர் காலத்திலிருந்தே, அடுத்தவன் மனைவியை ஆள நினைக்கும் பண்பாடு சமுதாயத்தில் இருந்திருக்கிறது. நமது தாத்தாக்கள் காலத்தில்கூட இரண்டு பெண்டாட்டிகள் என்பது சாதாரணமான விசயமாகத்தான் இருந்தது. இந்தச் சட்டத்தின்படியும், பெரியாரின் பெண்விடுதலைக் கருத்துக்களின் அடிப்படையிலும், திருமணம் என்ற உறவைத் தாண்டி, ஆண் - பெண் இருவரும் விரும்பி இணைவதைப் பற்றிக் கவலையில்லை.

ஆனால் சராசரி ஆண், உயர் ஜாதி ஆண், உயர் அதிகாரி ஆண், கட்சியில் அதிகாரம் பெற்ற ஆண், பணக்கார ஆண், சாமியார் ஆண், மதத்துறவி ஆண், பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ் கொள்கைகளைப் பேசும் ஆண், ஆணாதிக்க ஆண், பெண்விடுதலை பேசும் ஆண் என்ற அனைத்துவகை ஆண்களிலும்- மனைவியைத் தாண்டி இன்னொரு பெண்ணை வளைக்க வேண்டும் என்ற வெறியில் அலையும் ஆண்களும் இருக்கிறார்கள். அவர்கள் இந்தச் சட்டத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் ஆபத்தும் உள்ளது.

**சராசரி ஆண், உயர் ஜாதி ஆண், உயர் அதிகாரி ஆண், கட்சியில் அதிகாரம் பெற்ற ஆண், பணக்கார ஆண், சாமியார் ஆண், மதத்துறவி ஆண், பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ்ஸ் கொள்கைகளைப் பேசும் ஆண், ஆணாதிக்க ஆண், பெண்விடுதலை பேசும் ஆண் என்ற அனைத்துவகை ஆண்களிலும்- மனைவியைத் தாண்டி இன்னொரு பெண்ணை வளைக்க வேண்டும் என்ற வெறியில் அலையும் ஆண்களும் இருக்கிறார்கள்.**

பெண்ணைப் பாலியல் பொருளாக மட்டுமே பார்க்கும் ஆண்கள் எல்லா வேசமும் போடுவார்கள் என்பதைப் பெண்கள் புரிந்து கொண்டு சமுதாயத்தைச் சந்திக்க வேண்டும். பெண் விரும்பி யாருடனும் இணைவது தவறல்ல என்றாலும், இங்கே "பெண்ணுக்குரிய விருப்பங்கள்" ஆண்களாலேயே திணிக்கப்படுகின்றன என்பதையும் மறுக்க முடியாது.

## தீர்ப்பு பற்றி

ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு சட்டப்பிரிவு 497 (Adultery) தனி மனித உரிமை மற்றும் பெண் சமத்துவத்திற்கும் எதிரானது, இந்திய

அரசியல மைப்பு சட்டத்தின் 14-வது பிரிவுக்கு (சமமாக வாழ்வதற்கான அடிப்படை உரிமை) விரோதமானது என்றும் கூறி சட்டப் பிரிவு 497ஐ ரத்து செய்து தீர்ப்பளித்தார்கள்.

முதலாவதாக சட்டப்பிரிவு 497 “திருமணமான ஒரு ஆண், மனைவி அல்லாத வேறொரு திருமணமான பெண்ணுடன் அந்தக் கணவர் சம்மதம் இல்லாமல் உடலுறவு வைத்துக்கொள்வது ‘பாலியல் பலாத்காரம்’ ஆகாது. ஆனால் தண்டனைக்குரிய குற்றம் என்று கூறுகிறது. இதன்படி சம்பந்தப்பட்ட ஆணுக்கு 5 ஆண்டு சிறை தண்டனை மற்றும் கூடுதலாக அபராதம் விதித்தோ அல்லது அபராதம் இல்லாமலோ தண்டனை வழங்கலாம் என்று அறிவுறுத்தியது. (அதே சமயம் ஒரு பெண்ணின் கணவர் இன்னொரு திருமணமான பெண்ணுடன் பாலியல் உறவு வைத்திருப்பதை அறிந்தும் இந்தச் சட்டப்பிரிவின் கீழ் பெண் வழக்குத் தொடுக்க முடியாது)

சட்டப்பிரிவு 497க்கு எதிராகக் கேரளாவைச் சேர்ந்த ஜோசப் என்பவர் வழக்கு தொடுத்திருந்தார். அந்த மனுவில் அவர் கூறியிருந்ததாவது, “சட்டப்பிரிவு 497 பாலியல் சமத்துவம் அற்றது இந்தச் சட்டப்பிரிவின் கீழ் சம்பந்தப்பட்ட ஆணைத் தண்டிக்க வழி உள்ளது. ஆனால் பெண்ணுக்குத் தண்டனை கிடையாது. அதோடு அந்தப் பெண் குற்றத்திற்குத் துணை (Abettor) போனவராகக் கூடக் கருதாமல் பாதிக்கப் பட்டவராகக் கருதப்படுகிறார். ஆனால் வழக்கில் சம்பந்தப் பட்ட பெண்ணுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று மனுவில் கூறியிருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் கூறிய தீர்ப்பானது,

- ஆணுக்குச் சமமாகப் பெண்ணை நடத்த வேண்டும்.
- பெண்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டக்கூடாது.
- சமுதாயம் நினைப்பதைத்தான் பெண்கள் செய்ய வேண்டும் என்று சொல்லக்கூடாது.
- பெண்ணுக்குப் பாலியல் உறவைத் தேர்வு செய்ய உரிமை உள்ளது.
- சமுதாயப் பாரம்பரியம் எல்லாம் பிறகு தான்.
- பெண்ணின் உரிமையை நாடு கருத்தில் கொள்ள வேண்டும்.
- திருமணத்திற்கு அப்பால் உள்ள ஆண், பெண் உறவைக் கிரிமனல் குற்றமாகக் கருத முடியாது. உரிமையியல் (Civil) வழக்காகப் பதிவு செய்து விவாகரத்து கோரலாமே தவிர, சம்பந்தப்பட்ட ஆண், பெண் இருவருக்கும் சிறைத்தண்டனை கொடுக்க முடியாது.
- இந்தச் சட்டமானது பெண்களை, மனிதர்களாக மதிக்காமல் ஒரு பொருளாகப் பாவிக்கிறது. பெண்ணின் ஒப்புதல் கேட்கப்படவில்லை. கணவர் அனுமதித்தால் இந்தச் செயல் குற்றமில்லை என்றும் கணவர் அனுமதி இல்லையெனில் பெண்ணுக்கே விருப்பம் இருப்பினும் குற்றமாகக் கருதப்படுவதால் இது பெண்களுக்கு எதிரான சட்டம்.
- திருமணமாகாத பெண் மற்றும் திருமணமான ஆணுக்கு இடையே இருக்கும் உறவுமுறை குறித்து எங்கும் தெரிவிக்கப்படவில்லை.
- பாலியல் உறவு என்பது இருவரின் தேர்வு, வயது வந்த இரண்டு நபர்களிடையே ஏற்படும் பாலியல் உறவை எப்படி தண்டனைக் குற்றமாக கருத முடியும்? தொன்மையான 497 சட்டமானது ஆர்ட்டிகள் 14 ‘சட்டத்தின் முன் அனைவரும் சமம்’ மற்றும் ஆர்ட்டிகள் 21 ‘வாழ்வதற்கான உரிமையும், தனி மனித சுதந்திரம்’ இவற்றிற்கு எதிராக உள்ளது.
- சட்டப்பிரிவு 497 “பெண்களின் கண்ணியத்தைச் சிதைப்பதாக இருப்பதால் இதை ரத்து செய்து தீர்ப்பளிக்கிறோம் என்று தெரிவித்தனர்.

**பெண்ணைப் பாலியல் பொருளாக மட்டுமே பார்க்கும் ஆண்கள் எல்லா வேசமும் போடுவார்கள் என்பதைப் பெண்கள் புரிந்து கொண்டு சமுதாயத்தைச் சந்திக்க வேண்டும். பெண் விரும்பி யாருடனும் இணைவது தவறல்ல என்றாலும், இங்கே “பெண்ணுக்குரிய விருப்பங்கள்” ஆண்களாலேயே திணிக்கப்படுகின்றன என்பதையும் மறுக்க முடியாது.**

சிம்பிளா சொன்னால் அடுத்தவன் வீட்டு பெட்ரூமை எட்டிப் பார்க்காதீங்க, சேர்ந்து வாழ்வதோ, பிரிந்து செல்வதோ சம்பந்தப் பட்டவர் பாடு, அவர்கள் முடிவு எடுத்துக் கொள்வார்கள். முதலில் அவரவர் வீட்டில் இருக்கும் மனைவியின் உணர்வு களுக்கு மதிப்புக் கொடுத்து நடந்து கொள்கிற வழியைப் பாருங்கள்.

### திருமண அமைப்பைச் சட்டப்படிக் குற்றமாக்க வேண்டும்

ஒரு பெண் எதற்காக ஆணுக்கு அடிமையாக இருக்க வேண்டியது? உலக ஜனத் தொகையில் சரி பகுதியாக இருக்கும் ஆண்களுக்கு அடிமையாக இருக்க வேண்டியதுதான் அவர்கள் பகுத்தறிவு பெற்றிருப்பதற்குப் பயனா? குறைந்த அளவு ஒழுக்கத் தோடு, நாணயத்தோடு வாழ வேண்டுமென்று இல்லையே! பெண்ணாகப் பிறந்தால் கணவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும். குட்டி போட வேண்டும். தன் அறிவைப் பயன்படுத்தக்கூடாது. மதம், கடவுள், இலக்கியம், மோட்சம், இவை நம் அறிவைக் கெடுத்து விட்டன. மனித சமுதாயம் அறிவோடு வாழ வேண்டும். சுதந்திரத்தோடு வாழ வேண்டும்.

*- 23.04.1969 தஞ்சைத் திருமண விழா உரை,*
*விடுதலை 02.05.1969*

# 'இனப்பெருக்கத் தடைக்காலம்' கட்டுரை எதிரொலி




**தி.நா.அறிவரசு**
2-915-ஆ, வடக்கு 8 ஆவது வீதி,
மகாலட்சுமி நகர். பல்லடம் (அஞ்சல்),
திருப்பூர் (மா.வ).

அன்பு கெழுமிய தோழர் S.விசயராகவன் அவர்களுக்கு, வணக்கம்.

தாங்கள் கேட்டுக்கொண்டபடி அதிஅசுரன் படைத்தளித்த கட்டுரையைப் படித்தேன். மிகவும் சிறப்பாகப் பெரியார் கருத்தோட்டங்களையும், சுட்டிக்காட்டி முடிவாக பகுத்தறிவுச் சிந்தனைச் சிற்பிகள் என்னென்ன செய்யவேண்டுமென்பதை எடுத்துக் காட்டி அருமையான எதிர்காலத்திற்கு நலம் தரும் நற்செய்தியினைக் கூறியுள்ளார்.

கட்டுரையின் தலைப்பு 'இனப்பெருக்கத் தடைக்காலம்' என்பதாகும் உலகளாவிய பெரிய சிக்கலாகப் பேசப்படும் ஒரு கருத்தமைப்பாகும். குறிப்பாகத் திராவிட இனம், ஆரிய இனம், கருத்துகளை எடுத்து சிறப்பாக ஒப்பிட்டும் காட்டியுள்ளது கட்டுரையை மேலும் படிக்கத் தூண்டுகிறது. பார்ப்பனர்களது காஞ்சி காமகோடி பீடத்தின் குரு செயந்திர சரஸ்வதியார் பத்து பிள்ளைகளுக்கு மேல் ஈன்ற தாய்மார்களுக்கு வீரத்தாய் விருது வழங்கியவர்களைப் பாராட்டி இந்து சமூகத்திற்கு இந்தப் பெண்கள் பெருமையும், பாதுகாப்பும், தந்துள்ளதாகப் பாராட்டியுள்ளார் மேலும் 1980-களில் இந்து முன்னணி அமைப்பும், பிற இந்துத்துவ அமைப்புகளுக்கு குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டாம். குழந்தை பெறும் எந்திரங்கள் அல்ல பெண்கள். பெண்கள் கருப்பை அறிவுரையை தமிழர்கள் பின்பற்றவில்லை என்பது மட்டுமல்ல. இந்த செய்தியை விவாதம் பின்பற்றவில்லை என்பது மட்டுமல்ல, இந்த செய்தியை விவாதம் கூட செய்ய வில்லை என்று அதி அசுரன் சுட்டிக்காட்டுகிறார்.

ஈன்று புறந்தருதல்தான் கடன் என்று சங்க காலத் தாய் கடமையை சங்கப்பாடல் கூறுகிறது. சங்க காலத்திலேயே பார்ப்பனியம் குமுகாயத்தில் ஆட்சி செய்துள்ளது. பிறப்பது முடிந்ததும் பெயர்சூட்டல் (நாமகரணம்) தொடங்கி. முடிவாக உள்ள மரணத்திற்குப் பின் படம் திறந்து நினைவு ஏந்தல்விழா வரை பெரியார் தொண்டர்கள் பல மாற்றங்களைச் செய்தாலும் குழந்தை பெறுவதை நிறுத்தவில்லை ஏன்?

மனுதர்மப்படி பெண் மணம்புரிந்தபின் குழந்தைகள் பெறாவிட்டால் மலடியோ என சந்தேகப்படுவார்கள். குழந்தை பெற்றுத்தரா விட்டால் வேறு பெண்ணை மணப்பார்கள் ஆண்கள்? ஆணுக்கு வாரிசாக ஆண் குழந்தையை பெண் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஏன்? 1.பேர் சொல்ல 2.சந்ததி பெருக 3.முதுமையில் பெற்றோர் களைக் காப்பாற்ற 4.சொத்துக்களுக்கு வாரிசு உரிமை பெற 5.இது இயற்கையின் மெய். இந்த 5 நியாயங் களையும் தக்க விடை சொல்லி மறுக்கிறார் அதி அசுரன். அவரது வாழ்க்கைத்துணை நலம் குடும்பத்தின் தேவைக்குப் பொருள்கள் வாங்க மட்டுமே ஆகும் என்று பெரியார் கூறியபடி வாழ்ந்துள்ளார். திரு.அதிஅசுரன் அவரது துணைவியும் குழந்தை பெற்றுக்கொள்ளக் கூடாது என்று முடிவு செய்து அதே போல் வாழ்ந்ததைப் பதிவு செய்துள்ளார். இவர்களது தந்தையார் சொத்துக்களையும் விற்று இவரது சொந்த பந்தம் இல்லாத சிற்றூரில் நிலம் வாங்கி விட்டதையும் கூறியுள்ளார். எதிர்காலத்தில் முதியோர் இல்லம் உருவாக்க எண்ணியுள்ளார். ஜாதிச் சொந்தங்களை நாடாமல் சாதிமறுத்தவர்களைத் தோழர்களாக்கி மகிழும் மனித நேயத்தில் கரைந்து விடும் குமுகமாக அமைகிறது. இவர் கூற்று 'பெண்கள் குழந்தை குட்டிகளை உருவாக்காமல் இருப்பதே பெண் விடுதலைக்கு சரியான வழி மட்டுமல்ல அதன் மூலம் சாதியும் ஒழிந்துவிடும்' என்பதுதான் பெரியாரியல்! மிகவும் நல்ல விவாதம். பிள்ளைப்பேறு தொல்லையா? இல்லையா? என்று பட்டிமன்றம் கூட நடத்தலாம். ஜாதிகள் உள்ள இந்திய குமுகத்திற்கு இது அவசரத்தேவை. மேல் நாடுகளில் ஜாதிகள் இல்லை, பெண்கள் விடுதலை பெற்றுள்ளனர் இங்கே பெரும்பான்மைப் பெண்கள் அடிமைகளாகவே உள்ளனர். எனவே, இக்கருத்துப் புரட்சி அவசியம், பெண்விடுதலை மூலமாகவே குமுகாயப்புரட்சி முழுமைபெறும்.●

காஞ்ச அய்லய்யா ஷெப்பர்ட்
தமிழாக்கம்: சேகர் கோவிந்தசாமி

# பார்ப்பனர்களை வெல்ல, ஆங்கிலத்தை வெல்வோம்!

“சிந்துச் சமவெளி நாகரிகத்தைக் கட்டமைத்தவர்கள் சூத்திரர்கள்தான், ஆரியர்கள் அல்ல” என்கிற எனது கட்டுரையில் அக்கினியையும் வாயுவையும் வணங்கும் ரிக் வேதகால ஆரியர்கள்தான் 1500 ஆண்டுகால ஹரப்பா மற்றும் அதன் பின்னர் தொடர்ந்த நாகரிகங்களை அழித்தொழித்தனர் என்று வாதிட்டிருப்பேன். எனது விரிவான பகுப்பாய்வில் தென் இந்தியப் பெயர்களும் ஞானமார்க்கக் கலாச்சாரமும் ஹரப்பா நாகரிக உற்பத்தி மற்றும் ஞானமார்க்கக் கலாச்சாரமும் ஒத்துப்போவதை விவரித்து இருக்கிறேன். இது ராக்கிகர்ஹி மண்டையோட்டின் DNA பகுப்பாய்விலும் நிரூபணமாகி உள்ளது. (The Explosive Truth, by Kai Friese, India Today, September 10, 2018).

இப்போது இந்தோ - ஆஃப்ரிக்க DNA மற்றும் இந்தோ-ஆரிய DNA இரண்டும் அதிக வேற்றுமைகள் உள்ளவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும் சிந்துச் சமவெளி நாகரிகத்தைக் கட்டமைத்தவர்கள் இந்தோ - ஆஃப்ரிக்க இனத்தவர்கள் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ரிக்வேதகால ஆரியர்கள் கடவுள் வழிபாட்டையும், கடவுள்தான் இந்த உலகத்தைப் படைத்தார் என்பதையும், ஏற்றுக்கொண்டதில்லை. அவர்கள் அக்கினி மற்றும் வாயுவை வணங்கியதைக் கொண்டு பார்க்கும்போது, பொருட்களால் ஆன யதார்த்தத்தைப் புரிந்தவர்களாகவும், கடவுளைத் தேடும் ஞான சாராம்சத்தை விலக்கியவர்களாகவும் இருந்தார்கள்.

ரிக்வேதத்தில் கட்டமைத்த வர்ணக் கோட்பாடு (நிறம், சாதி) “புருஷ சூக்தம்” (தெய்வ சூக்தம் இல்லை) மீது நிறுவப்பட்டிருந்தது. ஏனெனில் அவர்கள் மனிதனால் படைக்கப்பட்ட கடவுளை நம்பவில்லை. ரிக்வேதத்தில் வர்ணங்களைப் படைத்த பிரம்மன் புருஷவடிவில் குறிப்பிடப் பட்டிருந்தாலும், மிகவும் குறைந்த இடங்களில் மட்டுமே குறிப்பிடப்படுகிறான். இந்திரன்தான் (கதாநாயகன்) ரிக் வேதத்தில் பல இடங்களில் குறிப்பிடப்படுகிறான்.

அக்கினி மற்றும் வாயு தவிர இந்திரன்தான் ரிக் வேதத்தில் பல இடங்களில் பெரும் அழிவினை ஏற்படுத்தும் கதாநாயகனாகக் குறிப்பிடப்படுகிறான். ஆனால் தார்மிகம் மற்றும் வீரியம் உள்ளவனாகக் காட்டிடப்படவில்லை. ஆரியக்கடவுளர்களான பிரம்மா, சிவன், விஷ்ணு போல இந்திரன் கடவுளாகப் பாவிக்கப்படவில்லை என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ரிக் வேதகாலப் பூசாரிகள் அக்கினி, வாயு மற்றும் இந்திரன் ஆகியோரை வழிபட்டனர். சோமனுக்கு அதிகமான புகழாரம். காரணம் அவன் போதைக்கு அதிபதி. அக்கினியை வழிபாடு நடத்திய, ரிக் வேதகாலத்தின் பிந்தைய காலத்தில் தங்களை ‘பிராமணர்கள்’ என்று அழைத்துக்கொண்ட ஆரியர்கள் இந்தியாவின் உற்பத்தி மற்றும் அறிவியல் கலாச்சார மதிப்பீடுகளையும் அவற்றின் வேர்களையும் அக்கினிக்குண்டங்களுடன் பெரும் ஹோமங்களை நடத்திப் பலமிழக்கச் செய்தனர்.

அத்தகைய அக்கினிக்குண்டங்களில் பெரும் அளவிலான உணவுப் பொருட்களைக் கொட்டி புதிய ஆன்மிகக் கலாச்சாரத்தை உருவாக்கி, பெரும்பான்மையான மக்களின் உணவையும் இறுதியாக வாழ்வையும் மறுதலித்தார்கள். இவ்வாறாக அவர்கள் வறுமையை நிறுவனப்படுத்தினார்கள். இன்றும் இத்தகைய ஹோமங்களும் மாயமந்திரங்களும் வழக்கத்தில் உள்ளன. இன்றும் பார்ப்பனர்கள் இத்தகைய ஹோமங்களும் மாயமந்திரங்களும் செய்யும்போது அரைநிர்வாணமாகக் காணப்படுவார்கள். அது அவர்களின் பழமையான மனதையும், நளினமற்ற உடல் நாகரிகத்தையும் வெளிப்படுத்துகிறது.

சூத்திரர்களும் இத்தகைய போக்கைப் பின்பற்றுவதால் அவர்களது நாகரிகமும் கேள்விக்குறியாக உள்ளது. தமக்கு சமய, சமூக, பொருளாதாரச் சமநிலை மறுக்கப்பட்ட போதிலும், சூத்திரர்கள் பார்ப்பனர்களின் சடங்கு, உடை, பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகின்றனர். அவர்கள் சுயசிந்தனை மற்றும் உணர்வுகள் அற்ற பெரும் சமூகமாக இருக்கின்றனர். அவர்கள் பிராமணீயத்தை ரிக் வேத காலத்திலிருந்து தற்போதைய மக்களாட்சி காலம்வரை தொடர்ந்து பின்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். இங்கு ஒரு மாற்றங்களை ஏற்காத ஆன்மிகப் பாசிசம் நிறுவனப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதில் சூத்திரர்கள் இரண்டாந்தர ஆன்மிகக் குழுக்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பார்ப்பனர்கள் எப்போதுமே சூத்திரர்கள் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டவர்களின் படிக்கும் உரிமையை, குறிப்பாக முற்காலத்தில் சமஸ்கிருதத்தையும் தற்காலத்தில் ஆங்கிலத்தையும் படிக்கும் உரிமையை மறுத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

நேரு காலத்தில் பார்ப்பனர்கள், தனியார் ஆங்கிலப்பள்ளிகளில் பிராமண- பனியா சாதிகளைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு மட்டும் கல்வி பயில ஆதரவு வழங்கி வந்தனர். டாக்டர்

பி.ஆர்.அம்பேத்கர் (தற்கால மீட்பர்) கொண்டுவந்த சூத்திரர் மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டைக் கடுமையாக எதிர்த்தனர். துரதிருஷ்டவசமாக பல சூத்திரர்கள் தங்களை நம்பாமல் பிராமண ஆன்மிகக் குருக்களையும் அரசியல்வாதிகளையும் நம்புகிறார்கள்.

ரிக்வேத காலத்திலிருந்து தற்போதைய காலம்வரை எல்லா முக்கிய நிறுவனங்கள் பார்ப்பனர்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. சூத்திரர்கள் அவற்றை எந்த நிலையிலும் எதிர்க்க முடியவில்லை. பார்ப்பனர்களின் மேட்டிமைத்தனத்தை கடவுள் தந்ததாக இவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதால் அவர்களை ஆன்மிகம் மற்றும் தத்துவார்த்த நிலைகளில் எதிர்கொள்ள முடியவில்லை.

2014 - இல் பி.ஜே.பி அரசு மத்தியில் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, மத்திய நிறுவனங்களின் மீதான பனியா - பார்ப்பனர்களின் கட்டுப்பாடு மிக அதிகமாகிவிட்டது. அதனால் சூத்திரர்களில் உயர் மட்டத்திலிருக்கும் மராத்தியர்கள், ஜாட்டுகள், படேல்கள், குஜ்ஜார்கள் உட்பட அனைவருமே மத்திய அரசு வேலைகளுக்கு இடஒதுக்கீடு வேண்டிப் போராட வேண்டியிருக்கிறது. டில்லியில் அவர்களுக்கான இடம் பறிபோய்க் கொண்டிருப்பதை உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.

சூத்திரர்கள் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டவர்கள் சமஸ்கிருதத்தில் புலமை பெற்றிருந்தாலும், தற்போது பார்ப்பன - பனியா பண்டிதர்களின் ஆங்கிலப்புலமையுடன் போட்டி போட முடியவில்லை. ஆயிரக்கணக்கான குழந்தைகள் உண்ண உணவின்றித் தவித்து வருகையில், பார்ப்பனர்களைப் போலத் தங்களைப் பாவித்துக்கொள்ளும் சூத்திரர்கள், அவர்களைப் போலவே மதிப்புயர்ந்த உணவுப் பொருள்களை அக்கினிகுண்டங்களில் எறிந்து சடங்குகளை நிறைவேற்றி வருகின்றனர்.

அக்காலத்து கிரேக்க ரோமாபுரிகளில் சொந்தமாக அடிமைகளை வைத்திருந்ததுபோல், ரிக் வேதகால ஆரியர்கள் கொஞ்சம் கொஞ்சமாக நான்கு வருண முறையைப் புகுத்தினார்கள். வருண வரிசையில் கடைசியாக வைக்கப்பட்டுள்ள சூத்திரர்கள், ஹரப்பா நாகரிகத்தின் வழித் தோன்றலாக இருக்கவேண்டும். ஆரியர்கள் படிப் படியாக அனைத்து மக்களையும் வருண அமைப்பு அடிமைகளாக மாற்றிவிட்டனர்.

ஏறக்குறைய கி.மு.1500 ஆண்டுகளில் ரிக் வேதம் எழுதப்பட்டு இருக்கலாம். அதே காலத்தில் நான்கு வருண முறையும் நிறுவப்பட்டுவிட்டது. ரிக்வேதம் நான்கு வர்ணங்களைப் பற்றி சொல்வது:

"பிரம்மனின் முகத்திலிருந்து வந்தவர்கள் பிராமணர்கள்; தோள்களிலிருந்து வந்தவர்கள் சத்திரியர்கள்; தொடையிலிருந்து வந்தவர்கள் வைசியர்கள், காலடிலிருந்து வந்தவர்கள் சூத்திரர்கள்".

மேலே குறிப்பிட்ட இரண்டு வரிகள் இந்திய மக்களின் தலையெழுத்தை காலங்காலமாக நிர்ணயித்துவருகின்றன. இன்றும் அதன் தாக்கத்தை மக்கள் அனுபவித்து வருகிறார்கள். அம்பேத்கரின் காலத்துக்குப் பிறகும்கூட இந்துமதம் ரிக்வேத சித்தாந்தத்தையே பின்பற்றுகிறது. அம்பேத்கர் புத்த மதத்தைத் தழுவியபோதும் பெரும்பான்மையான சூத்திரர்கள் இந்து மதத்தையே பற்றிக்கொண்டு இரண்டாந்தரக் குடிமக்களாக வாழ்ந்து வருகிறார்கள் .

RSS மற்றும் அதனுடைய அரசியல் பிரிவான பி.ஜே.பி நூற்றுக்கணக்கான பார்ப்பனர்களைத் திரட்டி உணவைப் பாழடிக்கும் சடங்குளைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகின்றனர். அதற்கு பனியாக்கள் ஆயிரக்கணக்கில் பணத்தை அள்ளி வீசிவருகின்றனர். தற்போது இத்தகைய வழக்கம் நாடுகடந்து அமெரிக்கா, ஐரோப்பா , ஆஸ்திரேலியா, கனடா உட்பட உலகம் முழுவதும் பரவிவருகிறது. வெளிநாடுகளில் வசிக்கும் சூத்திரர்களால் இதை எதிர்க்கமுடியவில்லை.

மிக உயர்ந்த நிலையிலிருந்த ஹரப்பாவின் பொருளாதாரம் ரிக் வேத கலாச்சாரத்தால் பின்னுக்குத் தள்ளப்பட்டு, கால்நடைகளை மேய்க்கும் நாடோடிக்குச் சமமானதாக மாறியது. இப்போதிருக்கிற நகர வாழ்வுக்கு எதிரான, பிற்போக்குத்தனமான மனநிலையைப் போக்க, இந்திய விவசாய, பொருளாதார மறுசீரமைப்பு உண்டாக ஒரு மாற்று சிந்தனை உருப்பெறவேண்டும். அது ஒன்றிணைந்த ஹரப்பா நகர நாகரிகமாக, பௌத்த நகர நாகரிகமாக இருக்கவேண்டும் .

கௌதம புத்தர் பிறக்காமலிருந்தால், இந்தியா ஒருவேளை பல நூற்றாண்டுகள் கால்நடை வளர்ப்பு, மேய்ச்சல் சார்ந்து பின்தங்கிய நிலையிலேயே இருந்திருக்கக்கூடும். பாடலிபுத்திரம், அஸ்தினாபுரம் போன்ற நகரங்களைப் பார்த்திருக்க முடியாது. வயலில் எப்போதும் வேலையே செய்யாத பார்ப்பனர்கள் தீயில்மட்டும் உணவுப்பொருள்களை எறிந்துகொண்டிருக்கிறார்கள். சூத்திரர்கள் பார்ப்பனர்களின் ஆணைகளைத் தொடர்ந்து பின்பற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

நிலவுடமை பெற்றிருக்கிற மராத்தியர்கள், ஜாட்டுகள், படேல்கள், குஜ்ஜர்கள் போன்ற சூத்திரர்கள் (இவர்கள் ஹரப்பா நாகரிகம் வழிவந்தவர்கள்) இடஒதுக்கீடு கேட்டுப் போராடி வருகிறார்கள். ஆனால் இவர்கள் வெல்ல வாய்ப்பு குறைவுதான். காரணம், நீதித்துறை மற்றும் நிர்வாகத்துறைகளில் உயர்ந்த நிலைகளில் அவர்களது பிரதிநிதிகள் இல்லை. ஆங்கிலம் பேசும் படித்த, அரசியல் அறிந்த அறிவுசார் பெரியோர் இல்லை. இவைபோன்றவற்றால் இந்தியா இன்னும் பழங்காலத்திலேயே தடைப்பட்டுக் கிடக்கிறது.●

அருகன்

# சுகப்பிரசவம்



## வாங்க பூ மிதிக்கப்போகலாம்

அண்மையில் நடந்த சில நிகழ்வுகளைத் தொடர்ந்து, மரபுவழி மருத்துவத்திற்கு ஆதரவாக வாதிடும் போக்கு, படித்த, ஓரளவு சம்பாதிக்கிற (மாதச்சம்பளம் வாங்குகிற) நடுத்தர வர்க்கத் தமிழக மக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது. அவர்கள் கருத்துப்படி, நம் முன்னோர்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்து வந்ததால், அவர்களது வாழ்க்கை இனிமையும் வசந்தமும் நிறைந்ததாகவும் இருந்தது. பசி பட்டினி ஏதுமில்லை. பேறுகாலம் சுகமாகவும் (சுகப்பிரசவம்) இனிமையாகவும் இருந்தது. உண்மையில், இவர்கள், தங்களின் தாத்தா - பாட்டிகளுடன் உரையாடியிருப்பார்களா என்கிற ஐயமே இந்தக் கட்டுரைக்கான கரு!

நமது தாத்தா-பாட்டி காலத்திலேயே (சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு) கூட, பெரும் பண்ணையார்களைத்தவிர மீதியிருந்த அத்தனை சிறு குறு உழவர்களும், மிகக் கடுமையான உடலுழைப்பைக் கொண்டே அன்றாடம் வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார்கள். ஆற்றுப் பாசனம் தவிர்த்த மற்ற எல்லா இடங்களிலும் மழையை நம்பியே பெரும்பாலான விவசாயம் இருந்திருக்கிறது. அதிக உடலுழைப்பு, மிகக்குறைந்த வருவாய், மழை பொய்த்தால் கடும் வறுமை என்று பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில்தான் அனைவரும் வாழ்ந்திருக்கிறார்கள்.

இந்தச் சிறு குறு உழவர்கள் “பெரியவனாகி விவசாயம் பார்த்து ஓகோ ன்னு இருக்கணும்டா!” என்று தங்களுடைய மகன் - பேரன்களுக்குச் சொல்லி எங்காவது கேள்விப்பட்டதுண்டா? “நாங்கதான் இப்படிக் கெடந்து கஷ்டப்படுறோம், நீங்களாவது படிச்சி முன்னேறணும்பா” என்றுதான் அடித்தட்டு வர்க்கத்திலிருந்த நம் தாத்தாவும் பாட்டியும் நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இன்று படித்து முன்னேறிய, நடுத்தர வர்க்கமாக மாறியுள்ள பலரும் தங்களுக்கு இப்போது இருக்கும் பொருளாதார பலத்தின் நம்பிக்கையால், நிலம் வாங்கி விவசாயம் செய்து மகிழ்ச்சியாக வாழ்ந்து விடலாம் என்று நினைக்கிறார்கள். நல்லது, அது உங்களது தனிப்பட்ட ஆசையாக இருக்கலாம்.

ஆனால் அதுதான் உங்கள் தாத்தனும் பாட்டியும் விரும்பிய வாழ்க்கை என்பது போல் ‘ஜோடிக்காதீர்கள்’. அவர்கள் விருப்பம் இதுவல்ல! அறிவியல் கண்டுபிடிப்புகள் இல்லாத காலத்தில் அவர்கள் உடலுழைப்பை மட்டுமே நம்பி வாழ வேண்டியிருந்தது. அதனால் அவர்கள் உடல் வலுவுள்ளவர்களாக இருந்திருக்கலாம். உங்கள் உடலை வலுவாக்க வேண்டுமெனில் உடற்பயிற்சி செய்யுங்கள், போதும்!

**சுகப்பிரசவம் - வாங்க 'பூ' மிதிக்கப் போகலாம்**

பலரும் 'சுகப்பிரசவம்' என்றவுடனே 'பூ' மிதிப்பதற்கு, கவுண்டமணி கிளம்புகிற மாதிரிப் பேச ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆனால், பேறுகாலம் அப்படி இல்லை. ஒவ்வொரு குழந்தைப்பிறப்பும் ஒரு 'பேராபத்து'தான்! குழந்தைப் பிறப்பில் என்ன மாதிரியான சிக்கல்கள் ஏற்படும் என்று ஊகிக்க இயலாது. தலை திரும்பவில்லை, நஞ்சுக்கொடி சுற்றல், அளவுக்கதிகமான இரத்தப்போக்கு, குறைப்பிரசவம் என்று, கிட்டத்தட்ட எல்லா வீடுகளிலும் குழந்தைப் பிறப்பின்போது ஏற்பட்ட ஏதோ ஒரு உயிரிழப்பாவது கட்டாயம் இருந்திருக்கும். சில இடங்களில் தாய் இறந்திருப்பார்.

அக்காலங்களில் 5- க்கும் மேல் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வது பல குடும்பங்களிலும் நடந்த ஒன்றுதான். அதற்கான உழைப்பும் உடலுறுதியும் இருந்தது என்பதை மறுக்க இயலாது. ஆனால், 10 குழந்தைகள் பெற்றால் 8 குழந்தைகள்தான் மிஞ்சியிருக்கும். இதெல்லாம் இப்போதும் நாம் கேட்டுத் தெரிந்துகொள்ளக்கூடிய செய்திகள்தான். நம் பாட்டிகளிடம் கேட்டால் இப்போதும் சொல்வார்கள், "அப்பெல்லாம் எங்கப்பா ஆஸ்பத்திரி இருந்துச்சு, பக்கத்திலயே ஆஸ்பத்திரி இருந்திருந்தா உசுரக் காப்பாத்தியிருக்கலாம்". இன்று மருத்துவ முறைகள் வளர்ந்துவிட்டன. மருத்துவமனைகள் பரவிவிட்டன.

தமிழகத்தில் 1,00,000 பிறப்பில் 62 இறப்பு என்கிற, வளர்ச்சியடைந்த உலக நாடுகளோடு போட்டிபோடுகிற MMR (Maternal Mortality Ratio) இருக்கிறதென்றால் அது இந்த அலோபதி மருத்துவத்தினால்தான், பாட்டி காலத்து மரபு வழி வைத்தியத்தால் அல்ல. இதுபோன்ற மருத்துவம் சார்ந்த புள்ளிவிபரங்களெல்லாம் தீவிரத் தமிழ்த்தேசியவாதிகளுக்கும் பிற்போக்கு ஹீலர் வகையறாக்களுக்கும் ஒரு பொருட்டே அல்ல.

**ஹீலர் பாஸ்கர் கைதுக்குப் பின்:**

யார் இந்த ஹீலர் பாஸ்கர்? தமிழ்த்தேசியர்கள் ஆதரிக்கிற 'மரபுவழி' மருத்துவத்திற்கும் இவருக்கும் என்ன தொடர்பு? என்று அவரது இணையதளத்தில் போய்ப் பார்த்தால், யோகா, ஆன்மிகம், பிராணாயாமம், செவிவழித் தொடு சிகிச்சை இப்படி பலவற்றையும் கலந்துகட்டிக் கொடுக்கிற ஒரு 'Mixer' தான் இந்த ஹீலர் பாஸ்கர். அவருடைய இணைய தளத்தில், Guru Gallery (http://anatomictherapy.org/guru-gallery.php#) என்று சிலரைப் பட்டியலிட்டு வைத்திருக்கிறார்.

ஐந்தாவது இடத்தில் இருப்பவர் ரவிசங்கர் ('உலக கலாச்சார விழா' என்று நடத்தி யமுனை நதிக்கரையை நாசம் செய்த அதே ரவிசங்கர்தான்). 'யாரையோ காணவில்லையே' என்று அந்த பன்னிரெண்டு குருக்களின் பட்டியலையும் திரும்பத் திரும்பப் பார்த்தேன். நம்மாழ்வார் - ஹீலர் பாஸ்கருடைய குருக்கள் பட்டியலில் இல்லை. (ஐயகோ! ஹீலர் பாஸ்கரை ஆதரிக்கிற போலித் தமிழ்த்தேசியவாதிகளுக்கு இது தெரியுமா?)

ஜக்கி வாசுதேவ், ரவிசங்கர் இவர்கள் 1,000, 5,000 50,000 என்று மேல்தட்டு மக்களுக்கான High Class திட்டத்துடனும் அணுகுமுறையுடனும் இயங்கும் போது, நடுத்தர வர்க்க மக்களை 200, 300, 500 என்று இதே முறையில் வியாபார ரீதியில் அணுகும் ஒரு ஆள்தான் (Mixer) இந்த ஹீலர் பாஸ்கர். இவர் தன்னுடைய குருக்கள் என்று பட்டியலிடுகிற யோகா, ஆன்மிகம், மருத்துவம் (எல்லாம் கலந்துகட்டின சிலபேர்) என அந்தப் பட்டியலைப் பார்த்தாலே இது புரிந்துவிடும்.

**'போலி'களுக்குப் 'போலி' அரசியல்களின் ஆதரவு**

ஹீலர் பாஸ்கர் கைதைக் கண்டித்து தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் அறிக்கையில், அதன் பொதுச் செயலாளர் பார்ப்பனரான கி.வெங்கட்ராமன் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

> "இதற்கு முன்பு மரபுவழி சுகப்பிரசவத்தில் தாயோ, குழந்தையோ இறந்தது அரிதான நிகழ்வாகும்! ஒரு தலைமுறைக்கு முன்பான எந்தக் குடும்பத்தை விசாரித்தாலும், இந்த உண்மையை உறுதி செய்ய முடியும்"

இவரது தாய் - தகப்பன் வயதில் இருப்பவர்களிடம் எத்தனை பேரிடம் இந்தக் கணக்கை எடுத்தார் என்று தெரியவில்லை.

இப்படி ஒரு அபாண்டமான பொய்யை எந்தக் கூச்சமும் இன்றி எழுதிவிட்டும் பேசிவிட்டும் செல்கின்றனர் தமிழ்த்தேசியவாதிகள். தாங்கள் தூக்கிப் பிடிக்கும் தமிழ்த்தேசியத்தின் மக்களுக்கு சிறிதளவாவது நேர்மையோடு இருப்பார்கள் எனில், தங்கள் பாட்டி - தாத்தன்களுக்கு எத்தனை சுகப்பிரசவம் நிகழ்ந்தது? பிரசவங்களில் எத்தனை தாய் - சேய் இறந்தார்கள்? என்று கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். கணக்கெடுக்கவும் வேண்டாம், நான்கைந்து பேரிடம் விசாரித்தாலே போதும். இன்னும் அவர் சொல்கிறார்,

> "அறிவியல், பகுத்தறிவு, முற்போக்கு, நவீனம் என்ற பெயரால் திணிக்கப்படும் 'வளர்ச்சி' வாதத்தின் (Growthism) ஒரு சீரழிவே இச்செயல்!"

இதேபோல்தான் 'காவிச்சங்கிகள்' தங்களுடைய மூடத்தனமான மதவாதங்களுக்கு முட்டுக் கொடுக்கிறார்கள்.

1,00,000-க்கு 62 இறப்பு விகிதம் கொடுக்குற மருத்துவ முறை வேண்டுமா? அல்லது 10 பிரவத்துல 1 அல்லது 2 இறப்பு விகிதம் கொடுக்கிற மருத்துவ முறை வேண்டுமா? என்கிற கேள்வியை குழந்தை பெற்றுக் கொள்ளப்போகும் பெண்களிடத்தில் கேட்டுவிட்டு முடிவை அவர்களிடமே விட்டுவிடலாம்.

'நாம் தமிழர்' தம்பிகளின் அண்ணன் சீமானும் இதேமாதிரி எந்தப் புள்ளவிபரங்களும் இல்லாமல் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

> "அலோபதி மருத்துவத்தில் சிசேரியன் செய்யும்போது நிகழும் மரணங்களை வைத்து எவரும் ஆங்கில மருத்துவமே தவறென வாதிட முன்வருவதில்லை"

அடுத்து வணிகநோக்கம் பற்றிப் பேசுகிறார்,

"இதனை அடிப்படையாக வைத்து மரபுவழி மருத்துவத்தையே அடிப்படை வாதமாகவும், அறிவற்ற செயலாகவும் நிறுவ முற்படுவோரின் செயலானது மகப்பேறினைப் பெரும் வணிகமாக்கி அதன்மூலம் இலாபமீட்டத் துடிக்கும் தனியார் முதலாளிகளின் இலாப வேட்டைக்குத் துணைபோகிற கொடுஞ்செயலாகும்"

*(சீமான் அண்ணே, அப்படியெனில் நீங்கள் உங்கள் தம்பிகளைப் போகச் சொல்ல வேண்டிய இடம் அரசு மருத்துவமனைகளுக்கு) இயற்கை மருத்துவம், மரபுவழி மருத்துவம் என்று ஹீலர் பாஸ்கரின் கைதைக் கண்டித்து அறிக்கை விடுபவர்கள் மறந்தும் எந்தப் புள்ளிவிபரங்களையும் கொடுப்பது கிடையாது. மரபுவழி மருத்துவத்தை ஆதரிப்பதற்காக இவர்கள் வைக்கும் மிக முக்கியமான காரணம் 'அலோபதி மருத்துவம் வணிகமயமாகிவிட்டது, இலாபமீட்டும் நோக்குடன் மரபுவழி மருத்துவத்திற்கு எதிராகச் செயல்படுகிறார்கள்' என்பது.*

*இதுதான் இவர்களின் ஆதங்கம் எனில், இவர்கள் அரசு மருத்துவமனைகளுக்கு அல்லவா செல்ல வேண்டும்? அரசு மருத்துவமனைகளில் மகப்பேறு பார்ப்பதற்கு எந்தப் பணமும் வாங்குவ தில்லை. அதோடு, அரசு மருத்துவமனைகளில் கருவுற்ற காலத்திலிருந்தே பதிவுசெய்து மகப்பேறும் பார்ப்பவர்களுக்கு அரசு உதவித்தொகையும் வழங்குகிறது!*

*ஆனால், 'மிடில் கிளாஸ்' மாதவன்கள், தங்கள் 'கௌரவம்' என்று எதையோ நினைத்துக் கொண்டு, அரசு மருத்துவமனைகளுக்குச் செல்லாமல் இருப்பது தான் இன்றைய நிலை! ஒருபுறம் 'அதிகக் கட்டணம்' என்று வாதிட்டுவிட்டு, மறுபுறம் 'மரபுவழி மருத்துவம்' சிறந்தது என்றும் வாதிடுவது முன்னுக்குப் பின் முரணானது. அலோபதி வணிகமாகிவிட்டது என்பவர்கள், மருத்துவமுறை சரி என்று ஏற்றுக் கொண்டு, இலவசமாக மருத்துவம் பார்க்கும் அரசு மருத்துவமனைகளுக்குச் செல்லவேண்டும். அலோபதி மருத்துவமே மோசமானது என்பவர்கள் அதற்கு ஆதாரமாக ஏதேனும் புள்ளிவிபரங்களைக் கொடுக்க வேண்டும்.*

*ஹீலர் பாஸ்கர் கைது நிகழ்வுகளுக்குப் பின்னான விவாதங்களின் போது, பல்வேறு அரசு மருத்துவமனைகளின் தரம்வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகள் படங்களாகப் பகிரப்பட்டுவருகின்றன. தனியார் மருத்துவமனைகளில் அதிகக் கட்டணம் என்று வாதாடுகிறவர்கள், இலவசச் சிகிச்சையளிக்கும் இந்த நவீன அரசு மருத்துவமனைகளை எட்டிக் கூடப் பார்த்திருப்பார்களா என்பது கேள்விக்குறிதான்!*

*மரபுவழி மருத்துவத்தை ஆதரிக்கிறவர்களிடம் வைக்கிற ஒரே கேள்வி இதுதான். நீங்கள் உங்கள் தாத்தா-பாட்டியிடம் அந்தக் காலத்துச் சிகிச்சை முறைகளையும், பிள்ளைப்பேறுகால இறப்பு குறித்தும் எப்போதாவது பேசியிருக்கிறீர்களா? பேசுங்கள்.* ●

## காட்டாறு நடத்தும் 'விடுதலைவெளி' பெண்கள் சுற்றுலா 2019 ஜனவரி



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பாச்சலூர் மலை அடிவாரத்தில் "பெரியார் பிறந்தநாள் ஒன்றுகூடல்" 16.09.2018 ஞாயிறு காலை 10 மணி முதல் மாலை வரை நடந்தது. பெரியாரின் திராவிடர் பண்பாட்டை செயல்வழிப் பரப்பும் பல தோழர்கள் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்தனர்.காட்டாறு வெளியீடுகள் சார்பாக இரண்டு நூல்கள் வெளியிடப் பட்டன.

"பெரியாரின் வாக்கு அரசியல்" என்ற நூலை, தி.மு.கழகத்தின் திண்டுக்கல் மேற்கு மாவட்டத் தலைவர் தோழர் தி.மோகன் வெளியிட்டார். தி.மு.க.வழக்கறிஞர் அணி மாவட்டப் பொறுப்பாளர் தோழர் க.ஜெயராஜ், பாம்செஃப் அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் விக்கி, ஒட்டன்சத்திரம் தோழர் அரிஸ்டாட்டில் ஆகியோர் நூலைப் பெற்றுக் கொண்டனர்.

டாக்டர் ஃபரூக் அப்துல்லா அவர்கள் எழுதிய, "சிசேரியன் எனும் உயிர்காக்கும் சிகிச்சை" எனும் நூலை அகிலஇந்தியக் கபடி வீரர் தோழர் ஸ்வேதா வெளியிட்டார். தோழர் நித்யா, திவ்யா ஆகியோர் பெற்றுக்கொண்டனர். பழனி பகுதி L.I.C.Development Officer தோழர் ஜனார்த்தனன், சண்முகம் நினைவு பெண்கள் கபடிக்குழுத் தோழர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

இறுதியாக, 2019 ஜனவரியில் பொங்கல் விடுமுறை நாட்களில், பெண்கள் மட்டுமே பங்கேற்கும் சுற்றுலாவை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. இது முழுமையாகப் பெண்கள் மட்டுமே பங்கேற்பதாக இருக்கும். கூர்க், வயநாடு, ஆலப்புழா ஆகிய இடங்களில் ஏதேனும் ஒரு இடம் முடிவாகும். தங்குமிடம் கிடைப்பதைக் கொண்டு இடம் முடிவு செய்யப்படும். அதற்கு இப்போது இருந்தே பணத்தைச் சேமிக்க அறிவுறுத்தப்பட்டது.

80 க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இந்நிகழ்வை, காட்டாறு குழு தோழர் பெரியார்நம்பி, தி.வி.க தோழர் பிரபு, சமூகச் செயற்பாட்டாளர் தோழர் ஆனந்த் ஆகியோர் சிறப்பாக நடத்தினர்

இராவணன்

# பெரியார் எனும் ஆயுதத்தைக் கையிலெடுங்கள்

"சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்பது அரசியல் சாசனத்தின் 14 வது பிரிவு நமக்கு வழங்கியுள்ள உரிமையாகும். அதை நிரூபிக்கக் கேரள இடது முன்னணி அரசுக்கு ஒரு வாய்ப்பாக, உச்சநீதிமன்றம் சபரிமலை அய்யப்பன் கோவிலில் அனைத்து வயதுப் பெண்களும் சென்று வழிபடலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைக் கடந்த செப்டம்பர் 28 ந் தேதி வழங்கியது. கேரள அரசும் சபரிமலை அய்யப்பன் கோவிலில் ஐப்பசி மாதப் பூஜைக்காக நடை திறக்கும் போது அனைவரும் சென்று வழிபடலாம் என்று கூறியது.

அதனைத் தொடர்ந்து கேரளாவில் நம்பூதிரிப் பார்ப்பனர்களும், சபரிமலைக்குச் சொந்தம் கொண்டாடும் பந்தளம் மன்னர் பரம்பரையைச் சேர்ந்த குடும்பத்தினரும், நாயர் ஜாதி அமைப்பைச் சேர்ந்தவர்களும் இந்து மதவெறி அமைப்பைச் சார்ந்தவர்களும் கேரள இடது முன்னணி அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்த ஆரம்பித்தனர். உச்சநீதிமன்றத் தீர்ப்பை அகில இந்தியத் தலைமை ஆதரித்துள்ளது. ஆனால், கேரள மாநில காங்கிரஸ் அரசியல் ஆதாயத்திற்காக எதிர்த்து நிற்கிறது. பா.ஜ.க.வோடு சேர்ந்து போராட்டத்தைத் தூண்டியது.



இப்படிப்பட்ட ஒரு பதட்டமான சூழலில் அக்டோபர் 17-ஆம் தேதி நடை திறக்கப்பட்டது. கோவிலுக்குச் செல்லும் பெண்களுக்கு அனைத்துப் பாதுகாப்பும் வழங்கப்படும் எனக் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அறிவித்தார். காவல்துறையும் குவிக்கப்பட்டது. ஆனாலும் அதையும் மீறி பக்தர்கள் என்ற போர்வையில் இந்து மத வெறியர்களும், நம்பூதிரி, நாயர் ஜாதி வெறியர்களும் சபரிமலைக்குச் செல்லும் வழியான சன்னிதானம், நிலக்கல், இலவுங்கல், பம்பை ஆகிய பகுதிகளில் ஆண்களும் பெண்களுமாகத் திரண்டனர்.

மாவட்ட நிர்வாகம் 144 தடை உத்தரவைப் பிறப்பித்தது. அதையும் மீறி ஆயிரக்கணக்கானோர் திரண்டார்கள். சபரிமலைக்குச் செல்லும் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. பெண்கள் இறக்கிவிடப்பட்டனர். குழந்தைகளும், வயதானவர்களுமே அனுமதிக்கப்பட்டனர். வாகனங்கள் அடித்து உடைக்கப்பட்டன. இந்தத் தாக்குதலில் 10 பத்திரிகையாளர்கள், 5 பக்தர்கள், 15 காவலர்கள் எனப் பலரும் தாக்கப்பட்டனர். கார்களும் வேன்களும் உடைக்கப்பட்டன.

**வழக்கும் ஆகம விதியும்**

கேரளாவைச் சேர்ந்த "இந்திய இளம் வழக்கறிஞர்கள் சங்கம்" என்ற அமைப்பு கடந்த 2006 ஆம் ஆண்டு சபரிமலை அய்யப்பன் கோவிலில் அனைத்து வயதுப் பெண்களும் சேர்ந்து வழிபட அனுமதிக்க வேண்டும் என்ற ஒரு பொதுநல வழக்கை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்த வழக்கு நீண்டகால நிலுவைக்குப் பின்பு கடந்த 2016-ல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 2017ல் அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றப்பட்டது. 5 பேர் கொண்ட அமர்வு வழக்கை விசாரித்து கடந்த செப்டம்பர் 28 ம் தேதி சபரிமலைக்கு அனைத்து வயதுப் பெண்களும் போகலாம் என்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தீர்ப்பை வெளியிட்டனர். அதில் நான்கு நீதிபதிகள் 'வழிபடலாம்' என்ற தீர்ப்பையும், ஒரு பெண் நீதிபதியான 'இந்து மல்கோத்ரா' என்ற அம்மையார் அதற்கு எதிராகவும் வழங்கினர். அவர் தனது தீர்ப்பில்,

"சபரிமலையில் பெண்களை அனுமதிப்பது பல்வேறு பின் விளைவுகளை ஏற்படுத்தும். மதரீதியான பழக்கங்கள் பற்றி நீதிமன்றம் முடிவு செய்ய முடியாது; வழிபாடு நடத்துபவர்கள் முடிவு செய்ய வேண்டும். சம உரிமை என்பதுடன் மதரீதியான பழக்கங்களை தொடர்புபடுத்தக்கூடாது. மதநம்பிக்கையுடன் பகுத்தறிவு, மாறும் சூழல் போன்றவற்றை ஒப்பிட முடியாது. ஒவ்வொரு சமூகமும் பின்பற்றி வரும் மத நம்பிக்கையை நீதிமன்றம் தீர்மானிக்க முடியாது. இந்தியா பல்வேறு மக்கள் வாழும் நாடு. அவர்களது நம்பிக்கையைப் பின்பற்ற அரசியல் சட்டம் அவர்களுக்கு உரிமை வழங்கியுள்ளது"

*என்று கூறியுள்ளார்.*

*அவர் மட்டுமல்ல முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி மார்கண்டேயகட்ஜு, மன்னர் குடும்பத்தினர், இந்து அமைப்புகள் என அனைவரும் தெரிவிப்பது ஒரே ஒரு விஷயம்தான். அதுதான் ஆகம விதி. ஆகம விதியின் அடிப்படையில் சபரிமலை அய்யப்பன் கோவிலுக்கு 10 வயதிலிருந்து 50 வயதுக்குட்பட்ட பெண்கள் செல்லக்கூடாது என்று கூறுகின்றனர். மற்ற அனைத்துப் பிரச்சனைகளிலும் ஆகம விதியைப் பின்பற்றாத இவர்கள் சமத்துவத்திற்கான நடவடிக்கைகளை மட்டும் ஆகம விதியைக் காரணம் சொல்லித் தடைசெய்யப் பார்க்கிறார்கள். அய்யப்பன் பிரம்மச்சாரி என்றும் அவன் சன்னதிக்கு மாதவிடாய் முடியாத பெண்கள் வரக்கூடாது என்பது ஆகமவிதி என்றும் சொல்லுகிறார்கள்.*

**அய்யப்பன் பிரம்மச்சாரியா?**

*அய்யப்பன் பிரம்மச்சாரி என்றும் அவருடைய பக்தர்கள் மது, மாது போன்ற பழக்கங்கள் இல்லாமலும் அசைவம் உண்ணாமலும் சபரி மலைக்கு வரவேண்டும் என்பதும், சூரிய உதயத்திற்கு முன்பு குளித்து விட வேண்டும் எனப் பல விதிகள் உள்ளன. ஆனால் இன்று அவை எல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளன. அய்யப்ப பக்தர்களுக்கு மதுக்கடைகளில் தனி டம்ளர் முறை கடைப்பிடிக்கப்படுகிறது. பெண்கள் விஷயத்திலும் கண்டரரு உள்படப் பல அர்ச்சகர்கள் குற்றச் சாட்டுக்கு ஆளாகியுள்ளனர்.*

*இதையெல்லாம் நாம் தனிமனிதப் பலவீனங்கள் என்று ஒதுக்கினாலும் அய்யப்பனே இரண்டு மனைவிகளுக்குக் கணவராக உள்ளார் என்பது பக்தர்கள் அனைவரும் அறிந்தும் வசதியாக மறந்த கதையாகும். அய்யப்பன் கோவில்கள் மொத்தம் ஏழு இடங்களில் உள்ளன. அவை ஆரியங்காவு, அச்சன் கோவில், குளத்துப் புழா, எருமேலி, பந்தளம், சபரிமலை, ஊசாத்துணை ஆகும்.*

*இவற்றில் ஆரியங்காவுக் கோவிலில் சௌராஸ்ட்டிர குலத்தைச் சேர்ந்த புஸ்கலையுடன் அரசராகக் காட்சி தருவதாக ஸ்தல வரலாறு சொல்கிறது. அச்சன் கோவிலில் பூர்ணா, புஸ்கலை என்ற இரண்டு பெண்களுடன் காட்சியளிப்பதாக ஸ்தல வரலாறு கூறுகிறது. ஆக ஏழு கோவில்களில் இரண்டில் பெண்களோடு காட்சி தரும் அய்யப்பன் சபரிமலையில் மட்டும் பெண்களை ஏற்றுக்கொள்ள மாட்டாரா?*

*மாதவிடாய் என்பது மனித சமூகத்தின் சரிபாதியாய் இருக்கக்கூடிய பெண்களின் உடலில் இருந்து வெளிவரும் ஒரு இயற்கையான கழிவு என்பது கூட இவர்களுக்குத் தெரியாதா? மெத்தப் படித்த மேதாவிகள், திரைத்துறையைச் சேர்ந்தவர்கள், அரசியல்வாதிகள், ஏன் பெண் பிரமுகர்கள் என அனைவரும் எதிர்க்கின்றனர்.*

*இதில் மிகப்பெரிய கொடுமை என்ன வென்றால் 2006-ல் பெண்களைக் கோவிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என வழக்குப் பதிந்தது ஆர்.எஸ்.எஸ்.ஸின் பெண் வழக்கறிஞர்கள்தான். ஆனால் இன்று தங்கள் சுயநலத்திற்காக ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் துணை அமைப்புகள் போராட்டத்தைத் தூண்டிவிடுகின்றன. உண்மையில் மாதவிடாய் என்பது ஒரு இயற்கையான பிரச்சனை என்பது நீதிபதி இந்து மல்கோத்ரா அவர்களுக்குத் தெரியாதா? பிறகு ஏன் இவர்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்றால் இவர்களின் மூளை மனுதர்மத்தால் ஆட்சி செய்யப்படுகிறது.*

**சமத்துவத்திற்கு எதிரான ஆகமங்கள்**

*இந்தியத் துணைக்கண்டத்தில் எந்தச் சமூக மாற்றமாக இருந்தாலும் அவை ஆகம விதிகளுக்கும், இந்துமத சாஸ்திர, சம்பிரதாயங்களுக்கும் எதிரானதே ஆகும். நாம் இன்றைக்குக் காட்டு மிராண்டி வழக்கம் என்று சொல்லக்கூடிய 'சதி' எனும் உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம், கோவில்களுக்குப் பெண்களைப் பொட்டுக் கட்டி விடுதல் போன்றவை கடந்த காலங்களில் புனிதமானதாக இருந்தன. பல படித்த மேதாவிகள் அதை மாற்றக்கூடாது எனச் சட்டமன்றங்களிலும் பேசியுள்ளனர். ஆனால் அவை இன்று நமக்குக் காட்டுமிராண்டி காலப் பழக்கங்களாக மாறிப் போயின. அதுபோல்தான் மாதவிடாயும். மாதவிடாய் பற்றி மனுதர்மம் என்ன சொல்கிறது?*

ரஜஸ்வலையான (மாதவிலக்கான) பெண் ரஜஸ் (ரத்தம்) நின்றபிறகு சுத்தமடைவாள்.

*- 5அத்யாயம் 66ஆம் சுலோகம்*

*நீங்கள் இந்திய அரசியல் சட்டத்தைப் படித்தாலும், உடல் உறுப்புகளைப் பற்றிய மருத்துவம் படித்தாலும் இந்தியச் சமூகத்தின் மூளையில் பதிந்துள்ள இந்த மனுதர்மச் சிந்தனையை மாற்றாமல் எந்த மாற்றத்தையும் கொண்டுவர முடியாது. ஆகமங்களாக இருந்தாலும், வேத சாஸ்திரங்களாக இருந்தாலும் அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் சுரண்டலுக்கான கருவியாகத்தான் இருந்துள்ளது. நாம் ஆகம விதிகளையும், மனு சாஸ்திரச் சட்டங்களையும் அடித்து நொறுக்காமல் சமூக மாற்றங்களைச் சாத்தியப்படுத்த முடியாது. அதனால்தான் இந்தியச் சமூகத்தில் சமத்துவத்தை நேசித்த மாபெரும் தலைவர்களான பெரியாரும் அம்பேத்கரும் மனுசாஸ்திரத்தைக் கொளுத்தினர். புராணங்களையும் கொளுத்த வேண்டும் என்றனர்.*

## ஆகமங்களைச் சிதறடித்த தமிழகம்

பார்ப்பனியப் பண்பாட்டிற்குப் பாடைகட்டும் இடமாகத் தமிழகம் எப்பொழுதும் இருந்துள்ளது. தங்களது ஆதிக்கத்தை நிலைநிறுத்த ஆகமங்கள், வேதங்கள் என்று கதை விட்டோர்களின் புரட்டுகளுக்கு எதிராகச் சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் போராட்டங்களை முன்னெடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டுள்ளது.

கோவில்கள் 1920 வரை பார்ப்பனப் பண்ணையமாகவே இருந்தன. அவர்கள் வைத்ததுதான் சட்டம். ஒவ்வொரு கோவிலுக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், நகைகள், மாடுகள் எனச் சொத்துக்களும் இருந்தன. அந்தக் கோவிலுக்குட்பட்ட கிராமத்து மனிதர்கள் அனைவரும் பார்ப்பனர்களுக்கு அடிமைச் சேவகம் செய்தனர். கோபுர தரிசனம் கோடிப் புண்ணியம் என்ற நயவஞ்சக வார்த்தையைக் கூறி மக்கள் வெளியே நிறுத்தப்பட்டனர்.

1920-ல் இந்து அறநிலையத்துறைப் பாது காப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. பல்வேறு திருத்திய அம்சங்களுடன் 1925-ல் பனகல் அரசர் ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான அனைத்துக் கோவில்களிலும் ஆண் - பெண் இருபாலரும் கருவறைக்கு வெளியில் உள்ள பிரகாரம் வரை சென்று வழிபடலாம். கோவில் சொத்துக்கள் அனைத்தும் அறநிலையத்துறையின் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

ஒவ்வொரு கோவிலிற்கும் அறநிலையத் துறையின் சார்பில் நிர்வாகக் குழு அமைக்கப் பட்டது. அனைத்துக் குழுவிலும் தாழ்த்தப்பட்ட சமூக உறுப்பினர் கட்டாயம் இடம் பெற வேண்டும் என்பதும் கட்டாயம் ஆக்கப்பட்டது. சட்டம் செய்வது நீதிக்கட்சியின் வேலை என்றால், அந்தச் சட்டம் நடைமுறைப்படுத்த வேண்டிய அளவுக்குத் தேவையான சமுதாய மாற்றத்தைப் பெரியார் தனது சுயமரியாதை இயக்கத்தின் வேலையாக மேற்கொண்டார்.

சேரன்மாதேவி குருகுலம், வைக்கம் போராட்டம், சுசிந்திரம் பத்மநாபசாமி கோவில் வீதிகளில் நடக்க உரிமை எனப் பல போராட்டங்கள் நடந்தன. 1921 ல் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் முறைகேடுகளை எதிர்த்தும் மற்றும் அனைத்து மக்களையும் கோவிலுக்கு அழைத்துச் சென்றதாலும் ஜே.என்.ராமநாதன், டி.வி.சுப்பிரமணியன், ஜே.எஸ். கண்ணப்பர் ஆகியோர் மீது கல்லடி நடத்தப் பட்டது. மூவர் மீதும் 300 வழக்குகள் பதிவு செய்யப் பட்டன.

அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி, ஜே.என்.ராமநாதன் திருச்சி தாயுமானவர் கோவிலுக்குள் தாழ்த்தப்பட்டோரை அழைத்துக் கொண்டு செல்லும்போது கோவில் படிக் கட்டுகளில் அடித்து உருட்டி விடப்பட்டனர். தாழ்த்தப்பட்ட தோழர்களுடன் திருவண்ணா மலைக் கோவிலில் நுழைந்த ஜே.எஸ்.கண்ணப்பர் கோவிலுக்குள் வைத்துப் பூட்டப்பட்டார். இப்படி ஏகப்பட்ட போராட்டங்களை நடத்தி மக்களைப் பக்குவமடையச் செய்தது; இன்றைக்கு நாம் அனுபவிக்கின்ற எந்த ஒரு உரிமையும் ஆகமங்களையும், கோவில் சம்பிரதாயங்களையும், பழக்க வழக்கங்களையும் எதிர்த்துப் போராடியதன் விளைவே ஆகும்.

## பி.ஜே.பி எதிர்ப்பு போதாது; ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்துமத எதிர்ப்பே அவசியம்

கேரளாவில் இன்றைக்கு முதல்வராக இருக்கக் கூடிய தோழர் பினராயி விஜயன் அவர்கள் பல்வேறு முற்போக்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். ஏற்கனவே தாழ்த்தப்பட்டோர் உள்பட அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகச் சட்டம் கொண்டு வந்தார். அதனைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதிலும் முனைப்போடு செயல்படுகிறார். தோழரின் அனைத்து நடவடிக்கைக்கும் நாம் பாராட்டுகளைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் அமித்ஷாவின் மிரட்டல்களைத் துணிச்சலாக எதிர்கொண்டு காவிப்பயங்கரவாதி களைக் கைதும் செய்தார். சபரிமலைப் பிரச்சனையில் உச்சநீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வம் காட்டினார். ஆனால் காவிக் கூட்டத்தை அமைப்பு ரீதியாக எதிர் கொள்ளவில்லை. பத்தாயிரக் கணக்கில் மதவெறியர்களும், ஜாதி வெறியர்களும் திரண்ட போது உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு ஆதரவாக நாம் ஆயிரக்கணக்கில் மக்களைத் திரட்டியிருக்க வேண்டும்.

அமைப்புரீதியாக வலுவாக உள்ள ஒரு கட்சி, போதிய அளவிற்குத் தனது எதிர்ப்பைப் பதிவு செய்யவில்லை என்றே கருதப்படுகிறது. கேரள சி.பி.எம். அமைப்பு அரசியல் களத்தில் இந்துத்துவ எதிர்ப்பில் சமரசமின்றிப் போராடுகிறது. ஆனால், அரசியல் களத்தில் இந்துத்துவாவை வெற்றிபெற வேண்டுமானால், சமுதாயச் சட்டங்களான இந்துமத வேதங்கள், சாஸ்திரங்கள், அவற்றை அடிப்படையாகக் கொண்ட பண்பாடு, பழக்க வழக்கங்கள் என அனைத்தையும் அழிக்க வேண்டியதன் அவசியத்தைத் தோழர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டும். தோழர்கள் வெகு மக்களிடையே அவற்றைப் பரப்ப வேண்டும்.

அரசியல் விடுதலையை மட்டும் நோக்கமாகக் கொண்டு ஒரு அமைப்பு இயங்கினால், இப்போது கேரளாவில் நடப்பது போன்ற எதிர்ப்புகளுக்குப் பணிந்துதான் ஆகவேண்டும். பி.ஜே.பி. எதிர்ப்பு என்பது போதாது. நேரடியாக ஆர்.எஸ்.எஸ்.ஸை எதிர்ப்பது, ஆர்.எஸ்.எஸ்.ஸின் அடிப்படைக் கொள்கைகளை எதிர்ப்பது என்ற நிலைக்கு உயர்ந்தால், அரசியலில் பி.ஜே.பி.யை வெல்லலாம். பெரியார் அந்த அடிப்படையில்தான் தமிழ்நாட்டில் பல புரட்சிகளைச் செய்தார். பெரியாரியல் எனும் ஆயுதத்தைப் பொதுவுடைமைத் தோழர்களும் கையிலெடுத்தால் ஆரியத்தை அழிக்கலாம்.●

மருத்துவர் நா.ஜெயராமன்
அபெகா பண்பாட்டு இயக்கம்

# அந்தக்கறை

## மேன்மையானது-உன்னதமானது





மாதவிடாய் குறித்துச் சமீபகாலங்களில் நிறைய கட்டுரைகள் வருகின்றன. இது ஆரோக்கியமான செய்தி, ஆனால் இந்து சனாதனிகளுக்கு இவை யெல்லாம் அவமானமான கரமானவை.

மாதவிடாய் என்பது ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட வயதில் வருவதும் குறிப்பிட்ட வயதில் நின்றுவிடுவதும் இயற்கை. பெண்ணாகப்பிறந்தவள் தனது உடலில் ஏற்படும் இந்த மாற்றங்களைக் கடந்தாக வேண்டும்.

ஒரு பெண் உடலுறவுக்கும் அதன் வழியாகக் கர்ப்பம் தரிப்பதற்கும் இனவிருத்திக்கும் தயாராகின்ற காலக்குறியீடுதான் பூப்படைதல். இதைப் பல்வேறு வார்த்தைகளில் (ஊருக்கு ஒரு சொல்லாக) குறிப்பிட்டுக்கொள்கிறார்கள்.

பூப்படைதல் என்ற உடல் இயங்கியல் மாற்றத்தில் கர்ப்பப்பையில் பெண் கர்ப்பமாவதற்குத் தேவையான சினை முட்டைகள் (Ovum) உற்பத்தி யாகும். கருக்கூடாத வேளைகளில் கர்ப்பப்பையை வந்தடையும் இந்த சினை முட்டைகள் மாதந்தோறும் தானாகவே பிறப்பு உறுப்பின் வழியாக வெளியேறும், வெளியேறும் போது கர்ப்பப்பையின் உள்தசையைச் சுற்றியுள்ள ஜவ்வு போன்ற உள் அடுக்கும் சேர்ந்து இரத்த திரவமாக வெளியேறும். *(Menses is nothing but unfertilized ovum with ruptured endometrium)*

உடலுறவும், கருக்கூடுதலும் நடந்து விட்டால் சினை முட்டைகள் வெளியேறாது. பிரசவம் வரை மாதவிடாய் நடக்காது. கர்ப்பக்காலங்கள் தவிர மற்றபடி 45 வயது வரை (தோராயமாக) மாதவிடாய் இருந்து கொண்டேயிருக்கும். இந்த மாதவிடாய் உதிரப்போக்கில் எந்தவிதமான நச்சுத்தன்மையோ, நீரின் மூலமோ, காற்றின் மூலமோ பரவக்கூடிய நோய்த்தொற்றுக்கிருமிகளோ கிடையாது.

உடலில் உற்பத்தியாகின்ற ஹார்மோன்களால் சிலருக்கு மாதாமாதம் குறிப்பிட்ட காலங்களில் மாதவிடாய் வருவதில்லை. மருத்துவரின் ஆலோசனை பெற்று இதைச் சரிசெய்து கொள்ளமுடியும். இந்தப் புரிதலோடு நாம் நம் தலைப்பிற்குள் செல்லலாம்.

மாதவிடாய் மதத்தின் ஆதிக்கத்திற்குள் ஏன் சென்றது? மாதவிடாய் உதிரப்போக்கினை வைத்து இந்தியாவில் உள்ள மற்ற இரண்டு பெரிய மதங்களும் எந்தவிதமான ஆதிக்கமும் செலுத்தாதபோது, இந்துமதம் மட்டும் எப்படி, ஏன் தனி ஆதிக்கம் செலுத்துகிறது.

இந்துமதத்தில் உதிரப்போக்கு தீட்டு, இறப்பு வீடு தீட்டு, குழந்தை பிறந்த வீடு தீட்டு, குறிப்பிட்ட காலம் வரை சமூக விலக்கு, தீட்டுக்கழிக்கப்படா விட்டால் தீட்டு continue ஆகும், தீட்டு எப்படி நீக்கப்படுகின்றது?, அந்தத்தீட்டைக் கழிக்கும் ஆற்றலும், அதிகாரமும் பெற்றது யார்?.

கிருத்துவமதத்திற்குள், இஸ்லாத்துக்குள் தீட்டும் கிடையாது. அதைக்கழிக்கும் அதிகார பீடமும் கிடையாது. இந்துமதத்திற்குள் தீட்டுக் கழிக்கும் அதிகாரம் கொண்ட கூட்டம் ஒன்று இருப்பது போல் மற்ற மதங்களில் இல்லாததால் அங்கேயெல்லாம் அது தீட்டாக்கப்படவில்லை. தீட்டுகளை மதத்தோடும், மதத்தின் மூலமான கடவுளோடும் பிணைத்தது யார்? ஏன், எப்போது என்பது இப்போது வாசகர்களுக்குப்புரியும்.

மாதவிடாய்க் காலம் இன்றும் "வீட்டுக்குத்தூரம்" என்ற வழக்குச்சொல்லால் அழைக்கப்படுகிறது. அது என்ன வீட்டுக்குத்தூரம்? முன்பெல்லாம் எல்லாக்கிராமங்களிலும், சாதி வாரியாக வீடுகள் இருக்கும். அவரவர் பகுதிக்கு கோயில், கோயில் வீடு இருக்கும். அதேப்போல பஸ் ரூட் போல சாமி ரூட்டும் உண்டு. (ஒரு குறிப்பிட்ட வழியில்தான் செல்லும். மாறிப்போய் விட்டால் திரும்பிவர சாமிக்கும் பாதை தெரியாது) அதேபோல் ஒவ்வொரு பகுதியிலும்(பள்ளர் தெரு, பறையர் தெரு, கள்ளர் தெரு.... இப்படியாக) தனித்தனியே காளிக்கு, முனிக்கு என்று தனித்தனிப் பாதைகள் (Seperate route) உண்டு.

இந்தப்பாதைகளை மாதவிடாய் காலத்துப் பெண்கள், கர்ப்பஸ்திரிகள், பயன்படுத்தக்கூடாது. பாத்திரம் கழுவிய எச்சில் தண்ணீர் கூட ஊற்ற மாட்டார்கள். உச்சிபகல், நடுநிசிகளில் யாரும் நடக்க மாட்டார்கள். இதேபோல மாத விடாய் காலத்துப் பெண்களுக் கெனக் குடியிருப்புப் பகுதிகளில், கோயில் வீடு, மற்றும் காளி முனி ஓட்டங்கள் இல்லாத ஒதுக்குப் புறமான இடத்தில் குடிசை வீடு ஒன்றிருக்கும்.

**மாதவிடாய்ப் பெண்களை வீடுகளில் உள்ள (படங்களாக) ஐயப்பன் பார்க்கலாமா? தூணிலும், துரும்பிலும், மாதவிடாய் இரத்தத்திலும் இருக்கும் ஐயப்பன் வீட்டில் இருக்கும் படத்திலும் இருந்து பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றார்? பிறகு ஏன் அச்சப்பட வேண்டும்?**

அந்தப்பகுதியில் உள்ள மாத விடாய்ப் பெண்கள் அந்தக் குடிசைக்குள் அந்தக்குறிப்பிட்ட காலத்திற்கு தங்கியிருப்பார்கள். இரவுக்காவலுக்கு வீட்டிலுள்ள பெரியவர்கள் துணைக்குப்போய்ப் படுத்திருப்பார்கள். இப்படி வீட்டை விட்டு தூரத்தில் போய் இருந்ததனால்தான் இது "வீட்டுக்குத்தூரம்" என்று பெயர்பெற்றது.

எனக்கு 5 சகோதரிகள் அம்மாவைச் சேர்த்துப்பெண்கள் 6 பேர்கள். வீட்டின் ஒரு பகுதியில் உலக்கை ஒன்று நிரந்தரமாகவே கிடக்கும். எங்கம்மா சற்று கூடுதல் ஆச்சாரம். வீட்டிற்குள்ளேயே தனிப்பாதை. தனி தட்டு, டம்ளர், பாய் உண்டு. தலையணை கிடையாது. ஏனென்றால் அதை அலசிப்போட முடியாது. கிணற்றில் குளித்துப்போகிற தண்ணீர் தென்னை மற்றும் செடிகொடிகளுக்குப் போய்விடக்கூடாது. 6 பேர் X 5 நாள் மாதத்தில் 30 நாள் செடிக்குத் தண்ணீர் போகாவிட்டால் செடி எப்படி வளரும்? தப்பித் தவறித் தண்ணீரைச் சாக்கடைப்பக்கம் திருப்பாமல் செடிக்கு விட்டுவிட்டால் அம்மா போடுகிற சத்தத்திற்கு அளவே இருக்காது.

வீட்டில் செலவுக்கு பணம் இல்லாமல் தட்டுப்பாடு நேரும்போதெல்லாம் வீடு சுத்தமா இல்லை அப்புறம் லெஷ்மி எப்படித் தங்கும் என அம்மா புலம்புவது வாடிக்கை. இன்றுபோல் அன்று நாப்கின் என்று தனியாக ஏதும் இல்லாத காலம். துணியைத்தான் உபயோகப்படுத்த வேண்டும். அதை வீட்டில் உள்ள அப்பா, அண்ணன், தம்பிகளின் பார்வையில் படாதவாறு உலர்த்த வேண்டும், பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். அன்று அது பற்றி ஏதும் தெரியாது.

இன்று எண்ணிப்பார்க்கின்றேன். இவை யெல்லாம் ஒரு பெண்ணுக்கு உளவியல் ரீதியாக எவ்வளவு மன உளைச்சலைக் கொடுத்திருக்கும்? வீட்டிற்கு விருந்தாளிகள் வரும்போது, உறவினர்கள் நண்பர்கள் வரும்போது உலக்கைக்கு அந்தப்பக்கம் உட்கார்ந்திருந்த என் சகோதரிகளின் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? இந்தக்காயங்களுக்கு என்ன மருந்து? ஏன் இவர்களுக்கு இந்தத் தண்டனை? இவையனைத்தும் மதத்தின் வழியே நியாயப்படுத்தப் பட்டது. அவமான உணர்வுகள் எல்லாம் அர்த்தம் கற்பிக்கப்பட்டது. தூய்மை என்ற பெயரில் நியாயப்படுத்தப்பட்டது.

மாதவிடாய் நாட்களில் கோவிலுக்குச் சம்பந்தப்பட்ட வர்கள் மட்டுமல்ல, வீட்டில் இருப்பவர்கள் யாருமே போகக் கூடாது. போனால் கடவுள் தீட்டாகிவிடும். கன்னிகளாக இருக்கின்றவர்கள் கன்னியாஸ்திரி களாக ஜீசஸ் முன் மண்டியிடு கிறார்கள். ஏற்றுக் கொள்கின்றார். அது ஒரு பிரச்சினையே அல்ல. ஆனால் இந்துக் கடவுள்களுக்கு மட்டும் தீட்டு.

இந்துக் கடவுள்களிலேயே பிரத்தியேகத்தீட்டு ஐயப்பனுக்கு மட்டும்தான். மாதவிடாய் ஆரம்பித்து அது நிறைவு பெறும் காலம் வரை உள்ள பெண்கள் யாரும் அவரிடம் போகக்கூடாது.

ஆனால், இதர சிவன், விஷ்ணு, பிரம்மா, காளி, துர்கா கோவில்களுக்கு அந்த வயதுடைய பெண்கள் போகலாம், தீட்டுக் காலங்களில் போகக்கூடாது. இதுகூட மனச்சாட்சிப் படிதான். மாதவிடாய் வழக்கமாக ஒரு குறிப்பிட்ட தேதியில் வரும் என்பது ஒரு கணக்குத்தான். வழக்கமாக நாளைக்குதான் வரும், இன்று சாமிக்கு விஷேசமான நாள், இன்று போய் வரம் கேட்டு வரலாம் என்று சாமியை தரிசித்துக்கொண்டிருக்கும்போது சில மணி நேரங்கள் முன்னதாக வந்துவிட்டால் அப்போது என்ன செய்வது? சாமிதான் என்ன செய்ய முடியும்? இல்லை பக்தைதான் பாவம், என்ன செய்வாள்?

பூப்படையாத பெண் குழந்தை கோயிலுக்குச் சென்று சக குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது முதல் தடவையாக மாதவிடாய் ஏற்பட்டு, துணைக்குக் கோயிலுக்கு வந்திருந்த அக்கம் பக்கத்தாருக்குத் தெரியாமல் மறைத்து, விரைவாக வீட்டிற்குக் கூட்டிப்போன தாய்மார்கள் எவ்வளவு பேர்? இதைக்கன்னித்தீட்டு என்பார்கள். இப்படிக் கன்னித்தீட்டுக்கு ஆளாகாத கடவுள்களைக் காண்பிக்க முடியுமா? இது இயற்கை. இதற்கு காலமும் நேரமும் யாரும் கணிக்க முடியாது.

இப்படித் தீட்டுப்பட்டிருக்காத கோயில் ஒன்று அடையாளம் காட்ட முடியுமா? நான் ஆரம்பத்திலேயே சொன்னேன்! மாதவிடாய் உதிரம் எந்தச் சுற்றுச் சூழலையும் மாசுபடுத்தாது என்று. மாதவிடாய்ப் பெண்களை வீடுகளில் உள்ள ஐயப்பன் (படங்களாக உள்ள) பார்க்கலாமா? தூணிலும், துரும்பிலும், மாதவிடாய் இரத்தத்திலும் இருக்கும் ஐயப்பன் வீட்டில் இருக்கும் படத்திலும் இருந்து பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றார்? பிறகு ஏன் அச்சப்பட வேண்டும்?

கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு மட்டும்தான் மாதவிடாய் வயதுப் பெண்கள் போகக்கூடாது. திருச்சியில் உள்ள ஐயப்பன், சென்னை இராஜா அண்ணாமலைபுரம் ஐயப்பன் கோயிலுக்குள் மாதவிடாய் வயதுப் பெண்கள் போகலாம் அதற்கு ஆகமக் கட்டுப்பாடு கிடையாது. இதில் என்ன தூய்மை கடைப்பிடிக்கப் படுகிறது? எல்லா ஐயப்பன்களும் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் (தன்பாலினச்சட்டப்பிரிவு 377க்கு எதிராக) பிறந்தவர்தானே? (IPC-Indian Penal Code) கேரளாவிற்கும் தமிழ் நாட்டிற்கும் ஒன்றுதானே! சட்டம் இப்படியிருக்க, இங்கு ஆகமம் என்ற பெயரில் தவிர்ப்பது ஐயப்பனா? இல்லை இடைத்தரகர்களா?

மாதவிடாய் வரும் வயதுடைய பெண் கோயிலுக்குள் போகக் கூடாது என்றால் அந்த வயதுடைய பெண்கள் இருக்கின்ற வீடுகளில் ஐயப்பன் இருக்கக்கூடாது. இதற்கு ஐயப்பன் என்ன சொல்வார்? கேரளாவை மட்டும்தான் மழையாகப் பெய்து அழித்து விடுவார் என்றால் இந்தத் தீர்ப்பைச் சொல்லும் உச்சநீதிமன்றம் உள்ள டெல்லியை வெள்ளத்தால் எப்போது அழிப்பார்?

மாதவிடாய் இரகசியமாகப் பாதுகாத்து வந்ததை, ‘நாப்கின்’ விளம்பரத்தில் படம் போட்டு, அது எப்படி உதிரத்தை உறிஞ்சுகிறது என்பது வரை பட்டிதொட்டியெல்லாம் விளம்பரம் செய்த ஊடக விளம்பரதாரர்களுக்கு உண்மையிலேயே நன்றி சொல்ல வேண்டும். மாதவிடாய் தொடர்பான அறைகுறையாகத் தெரிந்த விஷயங்களை எளிமையாக்கியவர்கள் அவர்கள்தான்.

80 களிலும் கூட ஒரு பெண் மருந்துக்கடையில் ஒரு ஓரமாக நீண்டநேரம் நின்று கொண்டிருக்கிறாள் என்றால், கடையில் மருந்து வாங்கிக் கொண்டிருக்கும் ஆண்கள் எல்லாம் போனபிறகு, கடையில் நிற்கும் பையனிடம் நாப்கின் வேண்டும் என்று சொல்லுவதற்கு அவ்வளவு தயக்கம் காட்டுவார். ஆனால் இப்போது என் மகள் அலைபேசியில் எனக்கு விஸ்பர் அல்ட்ரா கிரீன்-னு சொல்லிக்கேட்டு வாங்கிவாங்க என்று சொல்கிறாள்.

என் சகோதரிகளுக்கு நான் தம்பியாக, அண்ணனாக இருந்த காலங்கள் மாறியிருக்கின்றது. உண்மைதான்! ஆனால் தங்கள் கம்பெனி நாப்கினைப்போட்டுக்கொண்டு ஒரு வகுப்பறையில் உள்ள அத்தனை குழந்தைகளும் பின்பக்கம் திருப்பிக்காண்பிக்கின்றனர். கறை இல்லை என்று உறுதி செய்ய. அதைப்போட்டுக்கொண்டு உயரம் தாண்டலாம். கம்பு வைத்து உயரம் (Pole walt) தாண்டலாம். குதிரைச் சவாரி செய்யலாம். எல்லாம் ஒகேதான். நாப்கின் கம்பெனிக்காரர்களே!

காலை முதல் மறு நாள் காலை வரை அவர்கள் கம்பெனியின் ஒரு நாப்கின் போதும் என்றெல்லாம் கூட விளம்பரம் செய்கின்றார்கள். நல்ல விளம்பரம்தான். இவ்வளவு வலிமை வாய்ந்த எங்கள் கம்பெனி நாப்கினை அணிந்து கொண்டு, “எந்தக் கோயிலுக்குள்ளும் போகலாம்”; என்று ஏன் ஒரு கம்பெனி கூட விளம்பரம் செய்வதில்லை? அதுதான் கசிவதில்லை. ஈரமாவதில்லை. ஆடைகளில் கறை உண்டாவதில்லையே!

**இவ்வளவு வலிமை வாய்ந்த எங்கள் கம்பெனி நாப்கினை அணிந்து கொண்டு, “எந்தக் கோயிலுக்குள்ளும் போகலாம்” என்று ஏன் ஒரு கம்பெனி கூட விளம்பரம் செய்வதில்லை? அதுதான் கசிவதில்லை. ஈரமாவதில்லை. ஆடைகளில் கறை உண்டாவதில்லையே!**

மாதவிடாய் வயதுப் பெண்கள் வணங்கப்பட வேண்டியவர்கள்! ஆண்டவன் ஏற்பானா? ஆகமம் அனுமதிக்குமா? அவசியமில்லை. என் தாய், என் சகோதரி, என் மனைவி, என் மகள் அனைவரது மாதவிடாய் உதிரமும் போற்றப்பட வேண்டும். மனிதகுல நகர்வே அதற்குள்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.



அதி அசுரன்

# me too
# ஆண்மை அழி



உலகம் தழுவிய அளவில் முதன்முறையாகப் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளை ஒரு முக்கிய விவாதமாக மாற்றியது மீடு இயக்கம். 2006 ஆம் ஆண்டில் ‘தரானா புர்க்’ என்ற மனித உரிமை ஆர்வலர் அமெரிக்காவில் ‘மீ டூ’வைத் தொடங்கினார். 2017 ல் ஹாலிவுட்டுக்குள் நடக்கும் பாலியல் வன்கொடுமைகள் வெளிவரத் தொடங்கின. அதன்பிறகு ‘மீ டூ’ உலகெங்கும் தீயாகப் பரவியது.

இந்தியாவில் ஏற்கனவே ஆதிக்கம் செலுத்திவரும் இந்து மத ஆணாதிக்கப் பொதுப்புத்திகள் பெண்களது எழுச்சியை விரும்பவில்லை. சராசரி இந்து ஆண்கள் ‘மீ டூ’ பெண்களின் வாக்குமூலங்களை அதிர்ச்சியாகப் பார்த்ததும், அவற்றை எள்ளிநகையாடுவதும் நாம் எதிர்பார்த்தது தான். நாம் எதிர்பார்க்காத அதிர்ச்சி என்னவென்றால், சமுதாய மாற்றத்திற்காக உழைப்பதாகச் சொல்லிக் கொள்ளும் பல ஆண்கள் தாங்களாகவே முன்வந்து தங்களது உண்மை முகத்தை வெளிப்படுத்தியதுதான்.

குறிப்பாக, தமிழ்நாட்டில் சிறந்த சிந்தனையாளர்கள், களப்போராளிகள் என நாம் நம்பிக் கொண்டிருந்த பலரது அறிக்கைகள், நேர்காணல்கள், சமூக வலைத்தளப் பதிவுகளைப் பார்த்த பிறகு, பெரும் சோர்வும், சலிப்பும் தான் உண்டானது.

## தோழர்களின் ஆணாதிக்கக் கேள்விகள்

தமிழ்நாட்டில் ‘மீ டூ’ குற்றச்சாட்டுக்களைப் பாடகி சின்மயி தொடங்கி வைத்தார். தாம்ப்ராஸ் என்ற பார்ப்பன சங்கத்தின் தலைவர் நாராயணன் உட்பட ஏராளமான பார்ப்பனக் கலைஞர்களைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றினார். தனக்கு நேரடியாகத் தொல்லை கொடுத்ததாக கவிஞர் வைரமுத்து மீதும் குற்றம்சாட்டினார். பிறரை ஆடவைத்துப் பார்த்த பார்ப்பன சபாக்கள் ஆத்திரத்தில் ஆடத் தொடங்கின. சின்மயி ஒரு “அய்யங்கார் தேவடியாள்” என்று சின்மயி யின் இனத்தலைவனே விமர்சித்தார். நமது தோழர்களும் தாம்ப்ராஸ் தலைவன் நாராயணனுக்கு இணையாக, சின்மயிக்கு எதிராகப் பல கேள்விகளையும், பல ஆணாதிக்கக் கருத்துக்களையும் வெளியிட்டனர்.

1. நாட்டில் பெட்ரோல் - டீசல் விலை உயர்வு, ரஃபேல் போர் விமான ஊழல், இலவச மின்சார ரத்து போன்றவற்றைத் திசை திருப்பவே சின்மயி, வைரமுத்து மீது குற்றச்சாட்டைக் கிளப்பினார்.
2. ‘மீ டூ’ இயக்கம் சரியானதுதான், அதைக் கையிலெடுக்கச் சின்மயிக்குத் தகுதி இல்லை. ஒரு சரியான இயக்கத்தைச் சின்மயி தவறாகப் பயன்படுத்திவிட்டார்.
3. சின்மயியின் பின்னணியில் இந்து மத அமைப்புகள் இருக்கின்றன. அதனால் அவரை எதிர்க்க வேண்டும்.
4. குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இருந்தால் நீதிமன்றத்திற்கோ, காவல்நிலையத்திற்கோ செல்ல வேண்டியது தானே?
5. இத்தனை காலமாக, 14 ஆண்டுகளாக ஏன் இதைக்கூறவில்லை?

என்பது போன்ற வாதங்களை வைக்காத தோழர்கள் குறைவு. ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

## புரட்சியைச் சின்மயி திசைதிருப்பினாரா?

1. ரஃபேல் ஊழல் பற்றி பல மாதங்களாக இந்தியாவில் பேச்சு அடிபடுகிறது. இராகுல் காந்தி கடுமையாகப் பேசி வருகிறார். வழக்கு நடத்தி வருகிறார். சட்டப் போராட்டங்களை நடத்துகிறார். ‘மீ டூ’ மற்றும் சின்மயிக்கள் வருவதற்குச் சில மாதங்களுக்கு முன்பே இந்தச் செய்தி சில ஏடுகளில்

வெளிவரத் தொடங்கின. ஆனால், அவை பரபரப்பான விவாதங்களாக மாறவில்லை. வெகு மக்களிடம் அவை போய்ச்சேரவே இல்லை.

அதேபோல, பெட்ரோல், டீசல் விலை என்பது மோடி ஆட்சி தொடங்கியதிலிருந்தே ஏறுமுகத்தில் மட்டுமே உள்ளது. 5 ஆண்டுகளாக நடந்துவரும் எரிபொருள் விலை உயர்வை எதிர்த்து இந்தியாவில் எந்த இடத்திலும் போராட்டமோ, எழுச்சியோ, புரட்சியோ வந்துவிடவில்லை. தொலைக் காட்சிகளில் அதிகமாக விவாதிக்கப்படக்கூட இல்லை.

எரிபொருள் விலை உயர்வு, ரஃபேல் ஊழல் எல்லாம் ஏதோ சின்மயி குற்றச்சாட்டைக் கூறுவதற்கு முதல்நாள் தான் நடந்தது போலவும், விலைஉயர்வு, ஊழல் இவற்றை எதிர்த்து மக்கள் உடனடியாகக் கிளர்ந்து எழுந்து இந்த அரசாங்கத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, புதிய ஆட்சியை அல்லது புரட்சியை நடத்தத் தயாராக இருந்தது போலவும், அதை இந்தச் சின்மயி திசை திருப்பிவிட்டார் என்பது போலவும் பேசுவது தோழர் சீமான் அவர்களின் ஆமைக்கறி, ஏ.கே.74 பேச்சுக்களைப் போலத்தான் உள்ளது. இனிமேல் அவரை எவரும் விமர்சிக்கக்கூடாது. அவரையும், பாரிசாலனையும் மிஞ்சிய நகைச்சுவையை பெரும்பாலான முற்போக்குத் தோழர்கள் கொடுத்து வருகின்றனர்.

### வைரமுத்து பார்ப்பன அடிமையே

தோழர்கள் பேசுவது உண்மையாகவே இருக்கட்டும். ரஃபேல் ஊழலையோ, எரிபொருள் விலை உயர்வையோ, இலவச மின்சார ரத்தையோ திசை திருப்பும் அளவுக்குச் சின்மயியோ, வைரமுத்துவோ அகில இந்தியப் பிரபலங்களா? தமிழ்நாட்டிலாவது பெரும் மக்கள் சக்தி உடையவர்களா? ஆண்டாள் விவகாரத்தில் வைரமுத்து சிக்கியபோது, அவருக்காக ஒரே ஒரு சுவரொட்டி போடக்கூட ஒரு ஆள்கூட இல்லையே? ஜாதிப் பாசத்தில்கூட பாரதிராஜா மட்டுமே அவருக்கு ஆதரவாக வந்தார்.

வைரமுத்து அவர்கள் திராவிடர் கருத்தியலுக்கு எதிரான நிலையில் இருப்பவர். தனது வெற்றித் தமிழர் பேரவை என்ற அமைப்பின் சார்பில் 2014 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் நாள் ஆர்.எஸ்.எஸ்.ஸின் அதிகாரப்பூர்வ இந்தி வார இதழான "பாஞ்சஜன்ய"வின் இதழாசிரியராக 25 ஆண்டுகள் பணியாற்றிய வரும், பாஜகவைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினருமான தருண் விஜய்க்குத் தமிழ்நாட்டில் பாராட்டுவிழா நடத்தினார்.

பிரதமர் மோடி எழுதிய குஜராத் மொழிக் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியான நூலின் வெளியீட்டு விழா 2017 நம்பர் 18 இல் சென்னையில் நடைபெற்றது. அதில் பா.ஜ.க வின் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனோடு வைரமுத்துவும் பங்கேற்றார். தஞ்சையில் அரசு நிலத்தை அராஜகமாகக் கைப்பற்றியுள்ள சாஸ்த்ரா பல்கலைக்கழக நிர்வாகிகளும் அதில் பங்கேற்றனர். அங்கு தான் "நட்டு வைத்த வேலுக்குப் பொட்டு வைத்துப் பார்த்தார்" வைரமுத்து.

பகுத்தறிவாளராக வாழ்ந்து, பகுத்தறி வாளராகவே இறப்பிலும் சாதித்த தி.மு.க தலைவர் கலைஞரின் நினைவிடத்தில், இந்து மதச் சடங்குகளைச் செய்து, கலைஞரைக் கொச்சைப் படுத்தினார். தி.மு.க வைப் பீடித்துள்ள பெரும் ஆபத்து வைரமுத்து. அப்படிப்பட்டவருக்காக நாம் ஏன் துடிக்க வேண்டும் எனப் புரியவில்லை. ஒருவேளை அவர் மிகச்சிறந்த பெரியாரியக் கொள்கைவாதியாக இருந்தாலும்கூட, அவர் மீது குற்றச்சாட்டு கூறியதற்காகச் சின்மயியைக் கொச்சைப்படுத்துவது எந்த விதத்திலும் பெரியாரியல் ஆகாது.

### #MeeToo வைத் திசைதிருப்பியவர்கள் நாமே

இப்படிப்பட்ட வைரமுத்து மீது சின்மயி குற்றம்சாட்டிவிட்டார் என்ற உடனேயே தி.மு.க மற்றும் திராவிடர் இயக்கங்களின் பல தோழர்கள், பல ஆதரவாளர்கள்தான் அவசர அவசரமாக சின்மயியைத் தனிப்பட்ட முறையில் வசைபாடத் தொடங்கினர். சமூகப்பொறுப்புள்ள தோழர்களே இந்த 'மீ டூ' வைத் தனிநபர் சிக்கலாக அணுகினால், ஊடகங்கள் இதை எந்த அளவுக்குத் திசைதிருப்பும்? அதுதான் நடந்தது. இந்தத் திசைதிருப்பலில் சின்மயியும் வைரமுத்துவும் சிக்கினர்.

சின்மயி, வைரமுத்து மீது மட்டும் பாலியல் குற்றச்சாட்டைக் கூறவில்லை. அவரது இனத்துக் கான சங்கமான தாம்ப்ராஸ் ஸின் தலைவர் மீதே குற்றம் சாட்டினார். கர்நாடக இசை, நடனக் குருக்களாக இருந்த பார்ப்பனர்களைப் பற்றி எழுப்பிய குற்றச் சாட்டுக்களைத் தொடர்ந்து, மியூசிக் அகாடமி ஏழு பார்ப்பனர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளது. சித்ரவீணா என். ரவிக்கிரண், பாடகர் ஓ.எஸ். தியாகராஜன், வயலின் கலைஞர் நாகை ஸ்ரீராம், மிருதங்க கலைஞர்கள் மன்னார்குடி ஏ. ஈஸ்வரன், ஸ்ரீமுசானம் வி. ராஜாராவ், ஆர். ரமேஷ், திருவாரூர் வைத்தியநாதன் ஆகியோரை மியூசிக் அகாடமியில் நிகழ்ச்சிகள் நடத்தத் தடை விதித்திருக்கிறது.

ஆனால், கவிஞர் வைரமுத்து மீது எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்கு, வைரமுத்துவை முந்திக் கொண்டு நமது தோழர்கள், ஆதரவாளர்கள் கருத்துத் தெரிவிக்கத் தொடங்கினர். அதில் அய்யா சுப.வீ அவர்கள் மட்டும் தனது கருத்தை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொண்டார். மற்ற அனைவரும் இன்றுவரை தங்களது நிலைப்பாட்டை நியாயப்படுத்தி வருகின்றனர்.

பல நூற்றாண்டுகளாக அடக்கப்பட்டு, பாலியல் ரீதியாகவும் சுரண்டப்பட்ட பெண் இனம் இப்போதுதான் பேசத் தொடங்கியுள்ளது. தொடங்கிய நிலையிலேயே - கரு உருவான நிலையிலேயே அதை பிடுங்கி எரித்து விட்டோம். 'மீ டூ' இயக்கம் தமிழ்நாட்டில் பல மாற்றங்களை உருவாக்குவதற்கு அடித்தளம் இட்டிருக்கலாம். சிறு

பொறியையாவது கிளப்பிருக்கலாம். ஆனால் அப்படி நடந்து விடாமல், அதை "சின்மயி - வைரமுத்து" எனத் திசைதிருப்பி அழித்தவர்கள் முற்போக்குப் போராளிகளும், சமூகப் பொறுப்பற்ற ஊடகங்களும்தானே தவிர சின்மயியோ, வைரமுத்துவோ அல்ல.

சரி, இப்போது 'மீ டூ' பிரச்சனைகள் முடிவுக்கு வந்து ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிட்டது. ரஃபேல், பெட்ரோல், டீசல் விலை எதிர்ப்புப் புரட்சிகள் என்ன ஆனது? ஏன் உருவாகவே இல்லை. பெட்ரோல் விலை குறைந்து விட்டதா? ரஃபேல் பேரத்தில் ஊழல் நடக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டுவிட்டதா?

**சின்மயிக்குத் தகுதி இல்லை - பின்னணியில் இந்து மத அமைப்புகள்**

சின்மயிக்குத் தகுதி இல்லை. அவர் ஏற்கனவே பொய்யாகப் பலரைக் குற்றவாளி ஆக்கி யுள்ளார் என்றும் கூறுகின்றனர். சரி, சின்மயி குற்றச்சாட்டை விட்டுவிடுவோம். இயக்குநர் சுசி கணேசன் மீது குற்றம் சாட்டிய நடிகை அமலாபால், இயக்குநர் தோழர் லீனா மணிமேகலை - நடிகர் ஜான் விஜய் மீது குற்றம் சுமத்திய பாடகி ஸ்ரீரஞ்சனி - பார்ப்பன, கன்னட நடிகர் அர்ஜூன் மீது காவல் நிலையத்தில் வழக்கே பதிவு செய்துள்ள கன்னட நடிகை ஸ்ருதி - நடிகர் தியாகராஜன் மீது குற்றம் சாட்டியுள்ள ப்ரித்திகா மேனன் - ஏ.ஆர்.முருகதாஸ், மற்றும் பல தெலுங்குத் திரைத்துறையினர் மீது குற்றம் சாட்டிய நடிகை ஸ்ரீரெட்டி - இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் சகோதரி ரெஹெனா மற்றும் இவர்களைப் போன்ற யாருக்குமே நமது போராளிகள் எதிர்பார்க்கும் தகுதி - திறமை இல்லையா? ஏன் எந்தப் பெண்ணுக்காகவும் எவரும் குரல் எழுப்பவில்லை?

சின்மயியின் பின்னணியில் இந்து மத அமைப்புகளும், ஆண்டாள் பக்தர்களும் இருக்கின்றனர். என்று ஒரு கருத்து வந்தது. அதே இந்து அமைப்புகள் வைரமுத்துவுக்கும் ஆதரவாகத் தான் இருக்கின்றன என்பதை ஏற்கனவே பார்த்தோம். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அதிகாரப்பூர்வ ஏட்டின் 25 ஆண்டுகால ஆசிரியர் தருண்விஜய், பிரதமர் மோடி, நிர்மலா சீதாராமன் இவர்களை மிஞ்சிய இந்து மத அமைப்புகள் இந்தியாவில் இருக்கிறதா?

**நீதிமன்றம் செல்லலாமே?**

எவை எவையெல்லாம் பாலியல் குற்றங்கள் என்பவை குறித்த அடிப்படை அறிவுகூட இல்லாதவர்களால் மட்டுமே, காவல் நிலையம் செல்லவேண்டியதுதானே? நீதிமன்றம் போக வேண்டியதுதானே என்றெல்லாம் கேட்க முடியும். குற்றம் சாட்டும் அனைத்துப் பெண்களும் வன்புணரப்பட்டவர்கள் (Rape) என்ற எண்ணத் திலேயே பெரும்பாலும் இந்தக் கேள்விகள் கேட்கப் படுகின்றன.

ஒரு பெண்ணை ஒரு ஆண் ஒரு நொடி பார்க்கிறான் என்றால்கூட அவன் எந்த இடத்தைப் பார்க்கிறான் என்பதிலிருந்து, கண்ணைப் பார்த்துப் பேசினால்கூட அவன் எப்படிப் பார்க்கிறான் என்பதிலிருந்து பாலியல் சீண்டல்கள் தொடங்குகின்றன. அந்த ஒருநொடிப் பார்வைகூடப் பாலியல் சீண்டல்தான். பார்வையிலிருந்து படுக்கை வரை பலநூறு விதங்களில் சீண்டல்கள் நடக்கின்றன. எதற்கும் ஆதாரம் இருக்காது. இருக்கவே முடியாது. பிறகு எப்படி காவல் நிலையத்திற்கோ, நீதிமன்றத் திற்கோ போக முடியும்?

காவல்நிலைய, நீதிமன்றச் சட்ட திட்டங்கள் செல்லாத கிராமங்களில் நடக்கும் ஊர்க் கூட்டங்களில்கூட கிராமத்து ஆண்கள் நடத்தும் பாலியல் அட்டூழியங்களைப் பொதுவில் கூறிவிட முடியாது. அப்படிப்பட்ட காட்சிகளை சினிமாக்களில்தான் பார்க்கமுடியும். ஊர்த்தலைவர் களிடம் தனிப்பட்ட முறையில் நேரடியாகக் கூறுவது என்ற அளவில் சில கிராமங்களில் நடக்கும். அப்போதும், "அவனிடம் படுத்தவதானே நீ..... என்னிடமும் வா..." என்று கேட்கும் பெரிய மனிதர்கள்தான் பல ஊர்களில் தலைவர்களாக இருக்கிறார்கள்.

ஊர்க்கூட்டம் என்பது அடுத்தநிலை. முதலில், ஒரு பெண் ஒரு ஆணால் வன்புணர்வுக்கு ஆளாக்கப் பட்டாள் என்று கேள்விப் பட்டால்கூடப் போதும், அந்தச் செய்தியை அறிந்த அனைவராலும் அந்தப்பெண் வன்புணர்வுக்கு ஆளாக்கப்படுவாள் அல்லது பாலியல் கொடுமை முயற்சிகளுக்கு ஆளாவாள் என்பதுதான் ஏராளமான கிராமங்களின் இயல்புநிலை. கிராமங்களில் மட்டுமல்ல; உயர்கல்வி நிறுவனங்கள், மத நிறுவனங்கள், அரசியல் கட்சிகள், இயக்கங்கள், அரசு மற்றும், தனியார் அலுவலகங்கள், தொழிற்துறைகள், ஊடகங்கள் என அனைத்து இடங்களிலும் ஆண்கள் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள்.

ஒரு பெண் யாரிடமாவது பாலியல் புகாரைத்தெரிவித்தால், புகாரை விசாரிக்க வேண்டியவர்களே, தாங்களும் அந்தப் பெண்ணிடம் பாலியல் சீண்டல்களைத் தொடங்காமல் இருந்தால் அது மிகப்பெரும் வியப்பான நிலை. இப்படிப்பட்ட சமுதாயத்திலிருந்து உருவான காவல்துறை அதிகாரிகளிடமும், நீதிபதிகளிடமும் என்ன நீதியைப் பெற்றுவிட முடியும்?

சின்மயி, லீனாமணிமேகலை, மாலினி, இலட்சுமி போன்றோர் இணைந்து கடந்த 20.10.2018

**....இவைகளை ஒழிப்பதைவிட இந்த நாட்டுக்கு மின்சாரமோ, குடிநீரோ, சோறோ முக்கியமானது இல்லை. பெரியார் தமிழர்களுக்கு மின்சாரம் வேண்டு மென்றோ, குடிநீர் வேண்டு மென்றோ, சோறு வேண்டு மென்றோ பாடுபட்டவர் அல்ல. மானமும், அறிவும் வேண்டுமென்று போராடியவர்.**

இல் சென்னையில் நடத்திய பத்திரிக்கையாளர் சந்திப்பில், அவர்களைக் கேள்வி கேட்பது என்ற பெயரில் செய்தியாளர்கள் சிலர் நடந்து கொண்ட விதம், அவர்கள் கேள்வி எழுப்பிய விதம், அந்தச் சந்திப்பு குறித்து ஒவ்வொரு தொலைக்காட்சியும் செய்தி வெளியிட்ட விதம், அதற்குக் கொடுக்கப்பட்ட தலைப்புகள் இவற்றையெல்லாம் அனைவரும் பாருங்கள்.

தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொரு பெரியாரியல்வாதியும், தலைகுனிய வேண்டிய அளவுக்கு மோசமான அணுகுமுறையைச் செய்தி யாளர்கள் கையாண்டனர். அந்தச் செய்தி யாளர்களின் ஆணாதிக்க வெறியை நாமும் இயல்பாகக் கடந்து வந்து விட்டோம். இனிமேலும் அந்தத் தொலைக்காட்சிகளில் பெண்கள் பணிபுரிகிறார்கள் என்றால், அவர்களின் நிலையை எண்ணிப்பார்க்க முடியவில்லை. இப்படிப்பட்ட சமுதாயத்தில்-காவல்துறையிலோ, நீதிமன்றத்திலோ இதேபோன்ற ஆண்களின் நகல்கள் ஆதிக்கம் செலுத்தும் இடங்களில் எப்படி நீதி கிடைக்கும்?

பாலியல் வன்புணர்வு (Rape) என்ற நிலையில் வேண்டுமானால் ஒருவேளை ஆதாரங்கள் கிடைக்கலாம். ஆனால், அந்த ஆதாரங்களை வைத்து, குடும்பச் சூழலைத் தாண்டி, காவல்நிலைய ஆண்களிடம் இதைப் புரிய வைத்து, நீதிமன்ற ஆண்களிடம் நீதி பெறுவதற்குள் அந்தப் பெண் அந்த நீதியே வேண்டாம் என்று ஓடிவிடும் சூழலில்தான் இன்றைய காவல் நிலையங்களும், நீதிமன்றங்களும் உள்ளன. இந்தச் சமுதாயச் சூழல் மாறாமல் நீதி, சட்ட நிறுவனங்களால் எந்தப் பயனும் இல்லை.

> **ஒரு பெண்ணை ஒரு ஆண் ஒரு நொடி பார்க்கிறான் என்றால்கூட அவன் எந்த இடத்தைப் பார்க்கிறான் என்பதிலிருந்து. கண்ணைப் பார்த்துப் பேசினால்கூட அவன் எப்படிப் பார்க்கிறான் என்பதிலிருந்து பாலியல் சீண்டல்கள் தொடங்குகின்றன. அந்த ஒருநொடிப் பார்வைகூடப் பாலியல் சீண்டல்தான். பார்வையிலிருந்து படுக்கை வரை பலநூறு விதங்களில் சீண்டல்கள் நடக்கின்றன. எதற்கும் ஆதாரம் இருக்காது.**

## திருமுருகன் காந்தி மட்டுமல்ல

அண்மையில், சிறையிலிருந்தும், மருத்துவக் கண்காணிப்பிலிருந்தும் வீடுதிரும்பிய மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் திருமுருகன், இண்டியா க்ளிட்ஷ் என்ற ஒரு யூ ட்யூப் சேனலில், மீ டூ வை பற்றி ஒரு நேர்காணலை அளித்திருக்கிறார். (https://www.youtube.com/watch?v=h5S27BydzAo)

> 'மீ டூ' வை விளம்பரத்துக்காகப் பயன்படுத்து கிறார்கள்... ஒரு சிலரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக 'மீ டூ' பயன்படுத்தப்படுகிறது.... இவங்க யார் கையப்பிடிச்சு இழுத்தா எங்களுக்கென்ன? இதுக்கெல்லாம் எங்களுக்கு நேரமில்லை. மக்கள் பிரச்சனை பற்றிப் பேசுவோம்... இலவச மின்சாரம் பறிபோகப் போகிறது... மக்களுக்கு எந்த விதத்திலும் பலனில்லாத விசயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் போவதில்லை... பெண்ணுரிமை பேசுவாங்க, சபரிமலைக்குக் குரல்கொடுக்க மாட்டாங்க...

என்றெல்லாம் பேசியுள்ளார்.

தமிழ்நாட்டின் நம்பிக்கை நட்சத்திரமாகப் பல பார்ப்பன, தமிழ் ஊடகங்களும், திராவிடர் இயக்கங்களின் தோழர்களும் கருதிக் கொண்டிருக்கும் தோழரிடம் இப்படிப்பட்ட சொற்கள் வந்து விழுவது வருத்தமாக இருக்கிறது. பார்ப்பன சங்க நாராயணனும், மே 17 திருமுருகனும் ஒரே குரலில் பேசுவதை ஏற்க முடியவில்லை.

> "இவங்க யார் கையப் பிடிச்சு இழுத்தா என்ன? எங்களுக்கு இலவச மின்சாரம் ரத்தாகப் போகுது...அதுபற்றிப் பேசவேண்டும். அதுதான் முக்கியம்" என்கிறார் திருமுருகன்.

ஒரு பெண்ணின் விருப்பமில்லாமல், ஒருவன் அவளைப் பார்ப்பதுகூடக் குற்றம், சுயமரியாதைக் கேடு. கையைப் பிடித்து இழுப்பது மிகப்பெரும் காட்டுமிராண்டித் தனம். அந்தக் குற்றம், சுயமரியாதைக்கேடு, காட்டுமிராண்டித் தனங்களை ஒழிப்பதைவிட -அதற் காகப் பாடுபடுவதைவிட இந்த நாட்டுக்கு மின்சாரமோ, குடி நீரோ, சோறோ முக்கியமானது இல்லை. பெரியார் தமிழர்களுக்கு மின்சாரம் வேண்டுமென்றோ, குடிநீர் வேண்டுமென்றோ, சோறு வேண்டுமென்றோ பாடுபட்டவர் அல்ல. மானமும், அறிவும் வேண்டுமென்று போராடியவர்.

தமிழ்நாட்டில் 'மீ டூ' வில் பாலியல் குற்றச்சாட்டுக்களைக் கூறியவர் சின்மயி மட்டுமா? குற்றஞ்சாட்டப்பட்டவர் வைர முத்து மட்டுமா? நூற்றுக் கணக்கான பெண்கள் துணிச்சலுடன் தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை பொதுவெளிக்குக் கொண்டு வந்துள்ளனர்.

திருமுருகன் காந்திக்கு நன்கு அறிமுகமான பெண் தோழர்கள், பெரியாரிய - அம்பேத்கரிய - தமிழ்த்தேசிய இயக்கங்களின் குடும்பங்களைச் சேர்ந்த பெண் தோழர்கள், காட்டாறு குழுவில் உள்ள பெண் தோழர்கள் எனப் பலரும், தாங்கள் கடந்த காலங்களில் சந்தித்த பாலியல் சீண்டல் களைப் பொது வெளியில் வைத்துள்ளனர். இவர்கள் எல்லோருமே தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு களுக்காக 'மீ டூ' வைப் பயன்படுத்தியுள்ளார்களா? தனிப்பட்ட வன்மத்துக்காக 'மீ டூ' வைத் திசை திருப்பிவிட்டார்களா? இலவச மின்சாரம் தடை படுவதைத் திசை திருப்புகிறார்களா?

பெரியாரியப் பெண்ணியம் பேசும் அமைப்புகளில் இயங்கும் பெண் தோழர்கள்கூட இப்போதுதான் தங்களது மனக்குமுறல்களைக் கொட்டத் தொடங்கியுள்ளார்கள் என்றால், இதுதான் 'மீ டூ' இயக்கத்தின் மிகப்பெரும் வெற்றி. அந்த வெற்றிக்கு ஒரு தொடக்கமாக இருந்தது சின்மயிக்களும் தான்.

பல கிராமங்களில் தலித் பெண்கள் மூன்று வகை அடக்கு முறைகளை எதிர்கொள்கின்றனர். இடைநிலை ஜாதியினரின் அடக்குமுறை, தலித்துகளிலேயே முன்னேறும் ஜாதியினரின் அடக்குமுறை, வீட்டில் ஆண்களின் அடக்குமுறை என மூன்று அடுக்கு வகை அடக்குமுறையில் வாழும் பெண்கள், 'மீடூ'க் கள் பற்றிக் கேள்விப் பட்டிருக்கக் கூட மாட்டார்கள். அவர்கள் வரை 'மீ டூ' க்கள் எட்டிவிடாமல் தடுத்து, திசை திருப்பியது நாம்தான். நமது தோழர்களும் பணியாற்றும் ஊடகங்கள்தான். சின்மயிக்கள் அல்ல.

"சமுதாயம் முழுக்க அனைத்துத் தளங்களிலும் பாலியல் சீண்டல்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. அவற்றை எதிர்க்கிறோம். சின்மயிக் களை ஆதரிக்க மாட்டோம்" என்கிறார்.

2009-ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை தமிழ்நாட்டில் பாலியல் வன்கொடுமைகள், சீண்டல்களுக்கு எதிராக மே 17 இயக்கம் எத்தனைமுறை மெழுகுவர்த்தி ஏந்தி யுள்ளது? வழக்காகவோ, ஆதாரப் பூர்வமான செய்தியாகவோ வெளிவராத பாலியல் சீண்டல்கள், கொடுமைகளுக்கு எதிராக மே 17 என்ன திட்டம் வைத்துள்ளது? அதை 2009-லிருந்து எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தி யுள்ளது? 'மீ டூ' இயக்கத்தைச் சின்மயிக்கள் முன்னெடுப்பதற்கு முன்பு மே-17 முன்னெடுத் திருக்கலாமே? சமுதாயத்தின் அனைத்துத்தரப்புப் பெண்களையும் பேச வைத்திருக்கலாமே? ஏன் சின்மயிக்களுக்கு வாய்ப்புக் கொடுத்தீர்கள்?

சின்மயிக்கள் 'மீ டூ' பற்றிப் பேசுவார்கள். பெண்ணுரிமை என்பார்கள், ஆனால் சபரி மலைக்குக் குரல் கொடுக்க மாட்டார்கள்" என்றார்.

எல்லாவற்றிற்கும் எல்லோரும் போராட மாட்டார்கள். அப்படி எல்லாச் சிக்கல்களுக்காகவும் போராடிய இயக்கமோ, போராடிய தலைவரோ உலகில் எங்குமே இல்லை. தலைவர்கள், இயக்கங்களது நிலையே இப்படி என்றால், சின்மயி போன்ற தனிநபர்களிடம் சபரிமலை பற்றிப் பேசினாயா? என்று கேட்பது ஒரு இயக்கவாதிக்கு அழகல்ல.

நேர்காணலில் பேசியது திருமுருகன் காந்தி தான் என்றாலும், அவர் தமிழ்நாட்டில் வாழும் கோடிக்கணக்கான ஆண்களின் மனநிலையைத்தான் வெளிப்படுத்தினார். அதனால் இந்தப் பதில்கள் திருமுருகன் காந்திக்கு மட்டுமல்ல. அனைவருக்கும் தான்.

### களப்பணியாளர்களைத் திசை திருப்பிய மீடியாக்கள் & சோசியல் மீடியாக்கள்

பொதுவாக, ஒரு தீண்டாமை வன்கொடுமை நடந்தாலோ, பாலியல் வன்கொடுமை நடந்தாலோ உடனடியாகஅந்தக்குறிப்பிட்ட வன்கொடுமையைப் பற்றி மிகவும் விரிவாக அலசுகிறோம். காவல் துறைக்கும், நீதிமன்றங்களுக்கும், உளவுத்துறை களுக்கும்கூடத் தெரியாத பல நுணுக்கமான தகவல் களைத் தனியார் தொலைக்காட்சிகளும், புலனாய்வு வார இதழ்களும் நமக்குத் தருகின்றன.

> **இந்த "இந்து சிஸ்டம்" தான் இந்தியாவின் சமுதாய ஒழுங்காகவும் இருக்கிறது. இந்தச் சமுதாய ஒழுங்கை உடைத்தெறியாமல், அதற்காகப் பணியாற்றாமல், பாலியல் வன்கொடுமைகளுக்குத் தீர்வு உருவாகாது. ஜாதிய வன்கொடுமைகளும் நிற்காது.**

அந்தப் பரபரப்பான நேரங்களில் அனைத்து இயக்கங்களிலும் பணியாற்றும் தோழர்களின் சமூக வலைத்தளப் பக்கங்களில் பல ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள், தகவல்கள் பரப்பப் படுகின்றன. அதோடு முடிந்தது நமது வேலை. அடுத்து இதே போல ஒரு பரபரப்புச் செய்தி வரும்வரை நாம் "குட் மார்னிங், குட் நைட்", நமது தனிப்பட்ட செய்திகள், குடும்பச் செய்திகளைச் சமூகவலைகளில் போட்டுக் கொண்டு இருப்போம்.

தருமபுரி இளவரசன் படுகொலை செய்யப் பட்டார். பதட்டமானோம். ஏதேதோ செய்தோம். சில வாரங்கள் ஓடின. நாம் அமைதியானோம். இளவரசனைக் கொன்ற பார்ப்பனியத்தை மறந்து விட்டோம். அடுத்த சில மாதங்களில் கோகுல்ராஜ், உடுமலை சங்கர் என வரிசையாகப் பறி கொடுத்தோம். அவற்றுக்கு எதிராகவும் இயங்கினோம். பிறகு மறந்துவிட்டோம். அடுத்த பரபரப்புக்குத் தயாராகிக் களமாடுகிறோம்.

நாம் களமிறங்கிச் செயல் பட்ட காலங்களைக் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். ஏதாவது இரத்தக் களறி நடக்க வேண்டும். ராம் கோபால் வர்மா, பாலா படங்களை மிஞ்சிய கொடூரக் காட்சிகள் நேரடியாக நடக்க வேண்டும். ஒரு ஊரே பற்றி எரிய வேண்டும். ஒரு பெண் அதிகாலையில் பொது வெளியில் கழுத்தறுக்கப்பட்டு சாக வேண்டும். பேருந்துகளிலும், அலுவலகங் களிலும், வயல்வெளிகளிலும் கூட்டு வன்புணர்வால் கோரமாகச் சாகவேண்டும். அவள் எரிக்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் ஒரு கண்ணீர்க் காட்சியாவது வேண்டும்.

அப்படிப்பட்ட காலங்களில் மட்டுமே நாம் இயங்குகிறோம். அந்தக் கொடூரங்களுக்கு ஜாதி காரணம் என்றால், நாம் ஒரு வாரத்திற்கு ஜாதி ஒழிப்புப் போராளி அவதாரம் எடுப்போம். ஆணாதிக்கம் காரணம் என்றால் பெண்ணியவாதி அவதாரம் எடுப்போம். காரணத்தின் அடிப் படையில் நாமும் அவதாரங்களை அவ்வப்போது மாற்றி மாற்றி எடுப்போம்.

சமூக வலைத்தளங்கள் பிரபலமாவதற்கு முன்பு மீடியாக்கள் இதைத்தான் செய்து வந்தன. இப்போதும் அதைத்தான் செய்கின்றன. இந்த அணுகுமுறையானது மீடியாக்களைப் பொறுத்த வரை அதுதான் அந்தத் தொழிலின் தன்மை. ஆனால், சமூக வலைத்தளங்கள் பிரபலமான பிறகு முற்போக்கு இயக்கங்களின் தோழர்களுக்கும் இந்த

"மீடியாக்கள் பாணி அணுகுமுறை" என்ற நோய் கடுமையாகத் தொற்றிக் கொண்டுள்ளது.

**மனநோயாளிகளை உருவாக்கும் இந்துமதம்**

ஜாதிய வன்கொடுமைகளோ, பாலியல் வன்கொடுமைகளோ எது நடந்தாலும், அவை யெல்லாம் இலட்சத்தில் ஒன்று, கோடியில் ஒன்று என்ற அளவில் மட்டுமே பொதுவெளிக்கு வருகின்றன. அந்த அளவுக்கு மட்டுமே செய்தி யாகின்றன. இந்தக் கோடியில் ஒன்றாக வெளிவரும் செய்திகளில் ஒன்றுதான் 'மீ டூ' வும். நாம் சின்மயியைப் பற்றிக் கேவலமாகப் பேசிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நொடியிலும் அல்லது சின்மயியை ஆதரித்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நொடியிலும் இந்தியாவில் ஏராளமான பாலியல் சீண்டல்கள், பாலியல் சுரண்டல்கள், வன் புணர்வுகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

திருமணம், குடும்பம், சொந்தம், ஜாதி ஆகிய நிறுவனங்களில் தினந்தோறும், தினந்தோறும் கோடிக்கணக்கான பெண்கள் பாலியல் ரீதியாகச் சீண்டப்படுகிறார்கள், சுரண்டப்படுகிறார்கள், வன்புணரப்படுகிறார்கள். அப்படிப் பெண்களை ஒடுக்குபவர்களுக்குக் கணவன், காதலன், தகப்பன், சொந்தக்காரன், ஜாதிக்காரன் எனப் பல முகங்கள் உள்ளன.

நமது வீட்டில், நமது தாயாரிடமோ, சகோதரியிடமோ, மனைவியிடமோ, காதலி யிடமோ ஒரே ஒருநாள் அவர்களது மனதைத் திறந்து பேச வையுங்கள். எதைப் பற்றியும் கவலைப்படாமல், பயப்படாமல் ஒரே ஒருநாள் மட்டும் பேச வையுங்கள். அந்தப் பேச்சுக்களை விருப்பு, வெறுப்பு இன்றி, இந்து மதப் பொதுப்புத்தியைக் கழட்டி வைத்துவிட்டு ஆராய்ந்து பார்த்தால், பாலின மற்றும் பாலியல் குறித்த அடிப்படை அறிவுகூட இல்லாத - மனிதநேயம் துளியும் இல்லாத - உலக அறிவு எதுவும் இல்லாத ஒரு சைக்கோ நமக்குள் ஒளிந்திருப்பதைக் காணலாம்.

நாமும் பாலின -பாலியல் புரிதலற்ற மனநோயாளிதான் என்பதை உணர்ந்து விட்டால், நம்மோடு வாழும் கோடிக்கணக்கான சக ஆண் மனநோயாளிகளையும் அடையாளம் கண்டு விடலாம். தாம்ப்ராஸ் நாராயணனைவிட, காஞ்சிபுரம் கோவில் அர்ச்சகர் தேவநாதனைவிட, சபாக்கச்சேரி மாமாக்களைவிட, சங்கராச் சாரியைவிட, வைரமுத்துவைவிடக் கொடூரமான பாலியல் வெறிகொண்ட மிருகங்களையும் எளிதாகக் கண்டுபிடித்துவிடலாம்.


இந்தச் சோதனையை நாம் செய்து பார்த்திருந்தோமானால், அதன்பிறகு 'மீ டூ' வை யார் முன்னெடுத்தாலும் ஆதரித்திருப்போம். யாருமே கவனம் செலுத்தாத ஒரு சிக்கலில் யாரோ ஒருவர் கவனம் செலுத்தியுள்ளார் என்ற அளவில் அதை வரவேற்றிருப்போம். தோழர்களும், சராசரி ஆண்களும் ஒரே புள்ளியில் இணைந்து சின்மயிக்களை நோக்கி எழுப்பிய எந்தக் கேள்விகளையும் எழுப்பியிருக்க மாட்டோம்.

நம்மைப் போன்ற மனித நேயமற்ற, உலக மக்களைப் பற்றிய அறிவற்ற, பாலின - பாலியல் அறிவற்ற மனநோயாளிகளை உருவாக்குவது இந்து மதம். இந்த நாட்டின் இயக்கும் சக்தியாக, ஆப்பரேட்டிங் சிஸ்டமாக உள்ள இந்து மதமும், அதன் சாஸ்திர, சம்பிரதாயங்களும், பண்பாடுகளும் சத்தமில்லாமல் ஒவ்வொரு நாளும் இலட்சக் கணக்கான மனநோயாளிகளை உருவாக்கிக் கொண்டும் - உருவானவர்களைப் பாதுகாத்துக் கொண்டும் இருக்கின்றன.

இந்த "இந்து சிஸ்டம்" தான் இந்தியாவின் சமுதாய ஒழுங்காகவும் இருக்கிறது. இந்தச் சமுதாய ஒழுங்கை உடைத்தெறியாமல், அதற்காகப் பணியாற்றாமல், பாலியல் வன்கொடுமைகளுக்குத் தீர்வு உருவாகாது. ஜாதிய வன்கொடுமைகளும் நிற்காது.

'மீ டூ', தலித் சிறுமி இராஜலெட்சுமி கொலை, நிர்பயா கொலை, ஸ்வாதி கொலை - ஆசிட் வீச்சால் கொலை செய்யப்பட்ட ஆதம்பாக்கம் வித்யா, காரைக்கால் வினோதினி - ஜாதிக் கொடுமையால் நடந்த இளவரசன், கோகுல்ராஜ், சங்கர் கொலை இதுபோன்ற பரபரப்பாகும் செய்திகள், வழக்குகள் போன்றவற்றில் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுப்பதும், துணை நிற்பதும் மிக மிக அவசியமான பணிதான்.

**அதேசமயம், இந்தக்கொடுமைகள் நடக்காத ஒரு சமுதாயமாக நமது சமுதாயம் மாற வேண்டும் என்றால், இந்தக் கொடுமைகளுக்கு அடிப்படைக் காரணமாக இருக்கின்ற இந்து மதச் சட்டங்கள், ஒழுங்குகள், பண்பாடுகள் ஒழிய வேண்டும். இந்து மதம் அழிய வேண்டும். அதற்குரிய தொலைநோக்குத் திட்டங்களுக்கும், பணிகளுக்கும் நாம் உழைப்பைக் கொடுக்க வேண்டும்.**





பெண்கள் நகை மாட்டும்
ஸ்டாண்டுகளாக,
அலங்காரப் பொம்மைகளாகச்
சித்தரிக்கப்படும் நிலைக்கு
அடிப்படையாகவும்,
ஜாதி உறவுகளைப்
புனிதப்படுத்தும் தன்மையிலும்,
இருக்கும் இந்தக் காது குத்து
விழாக்களைப் புறக்கணிப்போம்!



பெண்களை இழிவு படுத்தும்
பூப்புனித நீராட்டு விழாக்களைத் தடைசெய்!



அலங்காரப் பண்பாட்டைத்
தூண்டும் நகை வணிகம், பட்டு
வணிகம், மலர் வணிகங்களைத்
தடைசெய்! பட்டு நூல்
உற்பத்திக்கான மல்பெரி
விவசாயம், மலர்
விவசாயத்தைத் தடைசெய்!



திருமணத்திற்கு முன்பே
கருத்தடைச் சிகிச்சை
செய்பவர்களுக்கும்,
பிள்ளை பெற்றுக்
கொள்ளாதவர்களுக்கும்
அரசின், கல்வி -
வேலை வாய்ப்புகளில்
முன்னுரிமை வழங்கு!



திருமணங்கள் உறுதி
செய்யப்படும் போதே,
அந்த மணமக்களுக்குத்
**'தனிக்குடித்தனம்'**
என்பதைக்
கட்டாயமாக்கு!



இல்லப்பராமரிப்பிலும்,
சமையல் உள்ளிட்ட
அனைத்து வீட்டு
வேலைகளிலும், குழந்தை
வளர்ப்பிலும் சமஉழைப்புக்
கொடுக்காத
ஆண்களுக்குக் கடும்
தண்டனைகள் வழங்கு!

பெண்ணின் திருமணத்திற்குப் பிறகு,
கடவுளையே மாற்றிக்கொள்ளவேண்டிய
கட்டாயத்தை உருவாக்கும்
'குலதெய்வ வழிபாடு' களைத் தடைசெய்!



திருமணத்தின் பெயரால்
கணவன் என்ற
உரிமையால் நடக்கும்
(Marital Rape) பாலியல்
வன்முறைகளைக் கடும்
குற்றமாக்கு!





நூற்றாண்டு
1920-2019
100
அன்னை மணியம்மையார்

# அன்னை மணியம்மையார்

பிறந்தநாள் - நூற்றாண்டு தொடக்க நாளான
10.03.2019 இல்

## "உடைப்போம் சமையலறைகளை!"

#Kitchen#
DEMOLISH
VEDIC TRADITION'S
10.03.2019

காட்டாறு

தொடர்புக்கு: 76676 79363, 98940 69973, 99427 38950

# வீரவணக்கம்



## மை.சேசுமேரி

**02.11.2018**

அன்பே நீ
என்னோடு வாழ்ந்த காலம்
குறைவானதே என்றாலும்
என்னோடு நீ பயணித்து
இந்து சாதி மத சனாதனத்தை
அழித்தொழிக்கும் பணிக்கே
உன்னை அர்ப்பணித்தாய்
என்ற நன்றி உணர்வோடு
நான்காம் ஆண்டில்
வீரவணக்கம் செலுத்துகிறேன்..



நினைவுகளுடன்... பெரியார் நம்பி

Owner and Publisher by : S.Vijayaragavan # 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Consulting Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com